
# தாயகம்

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான காலாண்டிதழ்

ஒக்ரோபர் - டிசெம்பர் 2008




50/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கிய மாலைப்பொழுது*

(யூஸி∴ப் அல்-ஸயிக்)

*(*1986ல் ஈராக் - ஈரான் போர்க்களத்தில் எழுதப்பட்டது)*



ஈராக்கிய மாலைப்பொழுதொன்றில்
போர்க்களத்துக் காட்சித் துணுக்குக்கள்:
அமைதியான வீடொன்றில்
தமது வீட்டுப் பணியை ஆயத்தப்படுத்துகிற
சிறுவர்கள் இருவர்.
காகிதத் துண்டொன்றில் ஏதோ பராக்காக
வேடிக்கையான படங்களை வரைந்தபடி
சின்னஞ் சிறுமி ஒருத்தி.
- விரைவில் வரவுள்ள புதுச் செய்தி
வீடு முழுவதும் செவிகளாகிறது.
பீதிகொண்ட மௌனத்தில்
தொலைக்காட்சித் திரையில் அப்பிக் கொள்கின்றன.
ஈராக்கியக் கண்கள் பத்து.
மணங்கள் கலக்கின்றன:
போரின் ,மணமும்
அப்போது தான் வேகிய ரொட்டியின் மணமும்.
ஆண்டவன் உன்னைக் காப்பாற்றவாராக
என்று முணுமுணுத்தபடி
தாய்
கண்களை உணர்த்திச்
சுவரிலிருந்த படமொன்றை நோக்குகிறாள்.
பின்பு அமைதியாக
மாலை உணவை ஆயத்தப்படுத்துகிறாள்.
நம்பிக்கை தருமாறு தெரிந்தெடுக்கப்பட்ட
போர்க்களக் காட்சித் துணுக்குக்கள்
அவளது மனத்திரையில் ஓடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியஜனநாயகம் புதியவாழ்வு புதியபண்பாடு

# தாயகம்

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்

ஒக்ரோபர் – டிசெம்பர் 2008

இதழ் இல. 72

பிரதம ஆசிரியர்

க. தணிகாசலம் தொ.பே. 021-2223629

ஆசிரியர் குழு

இ. முருகையன்
சி. சிவசேகரம்
குழந்தை ம. சண்முகலிங்கம்
கல்வயல் வே. குமாரசாமி
சோ. தேவராஜா
அழ. பகீரதன்
ஜெ. சற்குருநாதன்
மாவை வரோதயன்

கணினி அச்சு, பக்க வடிவமைப்பு
தி. மதுராளினி

ஓவியங்கள்
எஸ். டி. சாமி

முகப்பு ஓவியம் மாலினி
பின் அட்டை ஓவியம் ரமணி

தொடர்பு : ஆசிரியர், ஆடியபாதம் வீதி,
கொக்குவில்.
021-2223629
மின்னஞ்சல்: thayakam 10 yahoo.com
இணையம் : www.thajakam.com

அச்சுப்பதிப்பு: கௌரி அச்சகம் 021 2222477

விநியோகம்: இல. 152-1/6, ஹல்ஸ்டோப் வீதி
கொழும்பு – 12
Tel 2381603

வெளியீடு
தேசிய கலை இலக்கியப் பேரவை

ISBN No. 978-955-8637-23-4

## உள்ளே...

**கவிதை**
போராட்டாளன் — கிருஷ்ணா — 03
இருசுற்றுப் போரும் எல்லாச் சரிவும்
சோ. தேவராஜா — 06
உயிர்ச் சிலம்பு — ரமணி — 21
தலைவிரித்தாடும் வறுமைக்குப் பூச்சூடுகிறது
பூவேலையார் — ந. மகேசன் — 33
நிலவுவின் நீட்சி — சந்திரலேகா கிங்ஸ்லி — 37
விளக்கும் விரிப்பும் நெருப்பும் — [illegible] — 38
(எ)மாற்றத்தின் வயிறு — வே. தினகரன் — 40
இன்னுமோர் கலைமுலைக்காய் [illegible]
வரலாறு? — [illegible] — 42
நீயும் நானும் — மோ. இராஜ்மோகனசர்மா — 42
அக்குழி — [illegible] — 48
அவலசம்? — [illegible] — 55
நம் வாழ்க்கை — எஸ். மேதினி — 39
கடவுளும் என் வாயும் — மு. கிருஷ்ணன் — 61
எதற்காக? — ஸ்ரீபிரகாஸ் — 53
அமைதியைத் தேடி — த. ஜெயசீலன் — 64

**சிறுகதை**
மகன் எங்கே? — கவிதை — 06
கணிப்பு — சுமிதா — 16
புழுசா ஒரு கிராம புழுகன — [illegible] — 28
காலைழுமரங்கள் — [illegible] — 43
புகைக்காதுாள் தேர்கள்
புதிய மலையகம் மகேந்திரன் — 50

**தொடர்நாடகம்**
[illegible] மன்னின் மாற்றங்கள்
தலைவர் [illegible] - மாவை வரோதயன் — 11

**விமர்சனம்**
வெள்ளைக்காரன் சோறிடம் புலனாகவரன் — 22
வீர சுவர்க்கம் எங்கே இருக்கிறது?
ஆதவா. க. சந்திராவனி — 56

**ரஷ்ய மொழிபெயர்ப்புச் சிறுகதை**
அரசாங்க எழுதுவினைஞன் ஒருவனின்
மரணம் அன்ரன் செகவ் — 38

**கலைவரலாற்றுத் தொடர்கதை**
ஆங்கிலேயனின் பரிசு ஜி. பாபூர் ஷேர் படையி
ஜெகதாப்பிரதாபன் — 50

**கட்டுரை**
தமிழுணர்ச்சி - இளங்கீரன் — 24

வாசகர் மடல்கள் — 46

**விமர்சனம்**
இதய ரசிகா 'மீறல்கள்'
சை. கிங்ஸ்லி கோமஸ் — 57
கடிதங்கள்
விவேகானந்தர் உரை சொ. மதுவர்மன் — 67
அயற்பேர்களைத் தமிழில் எழுதுதல் — 59

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய ஜனநாயகம் புதிய வாழ்வு புதிய பண்பாடு

ஒக்டோபர்-டிசெம்பர் - 2008 **தாயகம்** இதழ் இல: 72

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்

# மனித அவலம்

இயற்கையின் சீற்றங்களால் ஏற்படும் பேரழிவுகளை விட மனிதர்கள் தங்களுக்குள்ளே நடத்திக் கொள்ளும் போர்களால் ஏற்படும் பாதிப்புக்கள் பேரவலத்தை தருவதுடன் மனித இனப் பண்பாட்டு வளர்ச்சியிலும் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றன. இயற்கையின் சீற்றம் மனித உயிர்களையும் உடைமைகளையுமே பலிகொள்கிறது. ஆனால் மனிதர்களிடையே நடைபெறும் போர்கள் ஆதிக்கப் போட்டிகளைக் கடந்து மனிதத்துவத்தை - மனித ஆத்மாவையே பலிகொள்கிறது. மனித குல வரலாற்றில் மனிதர்கள் மீது மனிதர்கள் அதிகாரம் செலுத்தும் ஆதிக்க அரச அமைப்புகள் தோற்றம் பெற்ற நாள் முதல் இன்றைய நவீன காலம் வரை இத்தகைய போர்கள் தொடர்கின்றன. எமது மண்ணில் மட்டுமல்ல சூடான், சோமாலியா, ஈராக், ஆப்கானிஸ்தான், பலஸ்தீனம் போன்ற உலகின் பல பாகங்களிலும் இவ் வரலாற்றின் வடுக்கள் நீள்கின்றன. எமது மண்ணிலும் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இப் போரின் அவலத்துக்குள் மக்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இன்று மேலும் தீவிரமடைந்து வரும் போர் பெரும் உயிர் பொருள் இழப்புக்களை ஏற்படுத்திவருவதுடன் விமானக் குண்டு வீச்சுக்கள், செல்வீச்சுக்களால் மக்கள் இறந்து படுவதும், காயமடைந்து அங்க வீனர்களாவதும் இவைகளுக்கு அஞ்சி இடம்பெயர்ந்து வாழ்விடங்களை இழந்து, மரநிழல்களிலும், காடுகளிலும், புதர்களுக்கு மத்தியிலும் வாழ நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். போர்க்கள எல்லைக்குள் இருக்கும் இரண்டு லட்சம் மக்களின் வாழ்க்கை இன்று மிகுந்த அவல நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றது. உணவு, உடை, இருப்பிடம் மற்றும் அடிப்படை வசதிகளும், பாதுகாப்பற்ற நிலையிலுமுள்ள இம் மக்கள் தொடரும் மாரிகால மழையிலும் குளிரிலும் மேலும் அவதிக்குள்ளாகும் நிலை தோன்றியுள்ளது.

இவர்களது அவலநிலை கண்டு வடக்கும் கிழக்கிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வெளிநாடுகளிலும் உள்ள உறவினர்கள், நண்பர்கள் மிகுந்த வேதனை அடைகின்றனர். தமிழகத்திலும் பெரும் எண்ணிக்கையான அகதிகள் இன்றும் இருந்து வருவதுடன் இப் போரின் பாதிப்புக்களுக்கு எதிரான மனிதாபிமான உணர்வுகள் அங்கும் எழுந்துள்ளன. இவைகளை அங்குள்ள வெறும் "சலசலப்பு"க்களாகக் கருதுபவர்களிடம் ஒரு அரசியல் இருப்பது போலவே அங்குள்ள அனைத்து தரப்பினரின் பின்னாலும் ஒரு அரசியல் இருப்பது வெளிப்படையானது. ஆனால் அரசியல்வாதிகளின் நிலைகளை மட்டும் கருத்திற் கொண்டு மக்களிடம் இயல்பாகவே உள்ள மனித அவலங்களுக்கு எதிரான மனிதாபிமான உணர்வுகளைக் கொச்சைப் படுத்துவது தவறானது.

தம்மைப்போல பிறரை நேசிக்காத, மற்ற மனிதர்களின் துயரைத் தம் துயராக கருதாத, மற்றவர்களது உரிமைகளை உணர்ந்து அவ்வுரிமைகளை மதிக்க விரும்பாதவர்களும் தமது அதிகாரங்களையும் ஆதிக்கங்களையும் மற்ற மனிதர்கள் மீது செலுத்திக்கொண்டிருப்பவர்களுமே உலகெங்கும் உண்மையான பயங்கரவாதத்தின் தோற்றுவாயாக, ஊற்றுக்கண்களாக விளங்குகின்றனர்.

பயங்கரவாதத்தை தோற்கடிப்பதில் அமெரிக்கா தோல்வி அடைந்துள்ளது என்ற கருத்துக் கணிப்பீட்டின் வெளிப்பாடு கூட இதனையே வெளிப்படுத்தி நிற்கின்றது. எனவே பயங்கரவாதத்தை ஒழிக்க விரும்புவர்கள் முதலில் நமக்குள் இருக்கும் பயங்கரவாதத்தின் ஊற்றுக்கண்களை அடைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியல் வேண்டும். மனிதர்களின் முரண்நிலை கண்டு மனம் வருந்துகின்ற பக்குவமான உணர்வுகள் எல்லாம் மதிக்கப்பட வேண்டும்.

போரின் வெற்றிக்கான நம்பிக்கையிலிருந்து பேசப்படும் அரச தரப்பினரின் வார்த்தைகளும், தேசிய இனங்கள் மத்தியில் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் நிலைமையையே ஏற்படுத்தி நிற்கிறது. நடைமுறைப்படுத்த முடியாத பழைய வரலாற்றின் வசதியான பக்கங்களை மீண்டும் மீண்டும் புரட்டுவதனால் இனவாத உணர்வுத் தூண்டல்களுக்கு அவை உதவலாம். ஆனால் 21ஆம் நூற்றாண்டில் இலங்கை எதிர் நோக்கி நிற்கும் தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வைக் காண்பதில் அவை உதவப்போவதில்லை. தேசிய இனங்களின் சுதந்திரமும் சமத்துவமும் மதிப்பிடப்படுவதன் மூலமே ஒன்றுபட்ட இலங்கையை கட்டி எழுப்புவதுடன் போரின் அவலத்திலிருந்து மக்கள் தம்மை விடுவித்துக் கொள்ள முடியும்.

- ஆசிரியர் குழு -

# தாயகத்தின் தளமும் தடமும்

தாயகம் தரம் மிகுந்த அரசியற் சார்பான இலக்கிய சஞ்சிகை என்று அண்மையில் ஒருவர் ஒரு இலக்கிய மேடையில் பேசியிருந்தார். இது புகழுரை போல இருந்தாலும் தாயகத்துக்கு அரசியல் முத்திரை குத்தி வெறுப்படுத்தும் தொனியையும் உணர முடிகிறது. தாயகம் தரமான சஞ்சிகை என்பதில் நமக்கு ஐயமில்லை. அதற்கு ஒரு அரசியல் நோக்கு இருக்கிறது என்பதையும் நாம் மறுக்கவில்லை. ஆனால் அரசியற் சார்பற்ற சஞ்சிகை என எதுவும் இல்லை என்பது தான் எங்கள் நிலைப்பாடு. எனவே அதன் தரத்தை அதற்கு அரசியல் உள்ளடக்கம் கண்டு வரையறுக்க அவசியமில்லை.

தாயகத்திற் பல கருத்துக்களை உடையவர்களும் எழுதுகிறார்கள். எனினும் பெரும்பாலானவர்கள் எந்தக் கட்சியிலும் உறுப்பினர்களல்லர். கட்சி அனுதாபங்கள் இருப்பின் குறிப்பிட்ட எந்தக் கட்சி அனுதாபிகளும் அவர்களிற் பெரும்பான்மையினர் அல்ல. தாயகம் சிலவாறான எழுத்துக்களை ஏற்பதில்லை. அது குறிப்பிட்ட எந்த விதமான அரசியல் நிலைப்பாட்டிலிருந்தும் எடுக்கப்பட்ட முடிவல்ல. அவதூறான எழுத்து, தனிமனித நிந்தனைகள், சாதி மத இனவெறியைத் தூண்டுகிற எழுத்து என்பனவற்றுக்குத் தாயகத்தில் இடமில்லை. அதே வேளை, எந்த விதமான சமூக ஒடுக்கு முறையையும் கேள்விக்கு உட்படுத்தும் எந்த எழுத்துக்கும் தாயகத்தில் வரவேற்புண்டு.

எல்லாக் கருத்துக்களையும் எழுத்தாளர்களையும் வரவேற்று ஊக்குவிக்கும் அதே வேளை தனிமனிதர்களது சுயவிளம்பர முயற்சிகளையும் போலியான புகழ்ச்சிகளையும் தாயகம் ஏற்பதில்லை. அதன் விளைவாகத் தாயகம் சில இழப்புக்கட்கு முகம் கொடுத்துள்ளது. எனினும் ஒட்டு மொத்தமாகக் கணிப்பிட்டால் அவ்வாறான இழப்புக்கள் இழப்புக்களே அல்ல. தனிமனிதர்களது தன்முனைப்புடன் சமரசம் செய்வது குறுகிய காலத்திற் சில நன்மைகளைத் தரலாம். ஆனால் நீண்டகாலத்தில் அது அவர்கட்கும் நல்லதல்ல. தாயகத்துக்கும் நல்லதல்ல.

விமர்சனம் என்பது நம்மவர்களில் யாரையும் மட்டந்தட்டுகிற நோக்கம் கொண்டதல்ல. வெறுமனே புகழுரைகளைச் சொரிவதும் விமர்சனமாகாது. எந்த விமர்சனத்திலும் தனிப்பட்ட முறையிலான காய்தல் உவத்தல் ஏற்புடையதல்ல. விமர்சனங்கள் கடுமையாக இருப்பது ஒரு படைப்பின் தரத்தையோ கருத்தையோ மறுப்பதல்ல. எனினும் தங்களது படைப்புக்களில் அப்பட்டமாகத் தெரிகிற குழப்பங்களையும் குற்றங் குறைகளையும் ஏற்கும் மனப்பக்குவம் சில முதிர்ந்த படைப்பாளிகளிடம் அறவே இல்லை. இதன் விளைவாக ஆரோக்கியமான விமர்சன மரபின் இடத்தில் பொய்ப் புகழ்ச்சியும் வலிந்து குற்றங் காணுதலும் வழக்காகி விடுகின்றன.

எந்த விமர்சனத்திற்கும் முகங் கொடுப்பதைத் தவிர்ப்பதற்காக விமர்சனத்தின் நோக்கத்தைத் தேடாமல் முதலில் விமர்சனத்தை நேர்மையாக எதிர்கொண்டு பின்பு நோக்கங்களை ஆராய்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனுள்ளது. தாயகம் விமர்சிக்க அஞ்சுவதில்லை. விமர்சனங்களுக்கும் அஞ்சுவதில்லை.

தாயகத்தின் இலக்கியப் பயணத்துக்கு ஒரு சமூக இலக்கும் சமூகப் பார்வையும் உண்டு. அவை கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டவை. அதே வேளை அதற்கு நடுநிலை, பக்கச் சார்பின்மை என்னுமாறான பாசாங்குகளும் தேவையில்லை. தமது குழுவாதங்களையும் துளிர்க்கச் செய்து அனுசரணை தேடுகிற கருத்துக்களையும் மூடிமறைப்பதற்காகப் பிறர் மீது குழுக்கள், வட்டங்கள் என்று சொட்டை சொல்லிவருபவர்களைப் பற்றித் தாயகம் கவலைப்படப் போவதும் இல்லை.

தாயகத்துக்கு இலக்கிய முன்னோடிகள் பல உள்ளன. அவற்றின் பாதையிற் போவதில் அது பெருமை கொள்கிறது. அதேவேளை அதற்குரிய தனித்துவமான பண்புகளும் உள்ளன. அவை அது செயற்படுகிற சூழலாலும் அதில் இணைந்து செயற்படும் புதிய தலைமுறையினராலும் உருப்பெறுகின்றன. தாயகம் தொடங்கிய போதிருந்த அதே வேகத்துடன் தனது முப்பத்தைந்தாம் ஆண்டில் கம்பீர நடைபோடுகிறது. இனி இன்னும் உற்சாகத்துடன் செயற்படும் என உறுதி கூறுகிறோம்.

-ஆசிரியர் குழு-

## தாயகம்

### புதிய சந்தா விபரம்

**இலங்கை**

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | - ரூபா 300.00 |
| இரண்டு ஆண்டு | ரூபா 600.00 |
| மூன்று ஆண்டு | - ரூபா 900.00 |
| ஆயுள் சந்தா | - ரூபா 15000.00 |

**கனடா**

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | டொலர் 20.00 |
| இரண்டு ஆண்டு | - டொலர் 40.00 |
| மூன்று ஆண்டு | டொலர் 60.00 |
| ஆயுள் | - டொலர் 1000.00 |

**பிரித்தானியா**

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | - ஸ்ரேலிங்பவுண் 8.00 |
| இரண்டு ஆண்டு | - ஸ்ரேலிங்பவுண் 15.00 |
| மூன்று ஆண்டு | - ஸ்ரேலிங்பவுண் 20.00 |
| ஆயுள் சந்தா | - ஸ்ரேலிங்பவுண் 350.00 |

**ஐரோப்பிய நாடுகள்**

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | யூரோ 10.00 |
| இரண்டு ஆண்டு | - யூரோ 20.00 |
| மூன்று ஆண்டு | யூரோ 30.00 |
| ஆயுள் சந்தா | - யூரோ 500.00 |

**அவுஸ்திரேலியா**

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | - டொலர் 20.00 |
| இரண்டு ஆண்டு | - டொலர் 40.00 |
| மூன்று ஆண்டு | டொலர் 60.00 |
| ஆயுள் சந்தா | - டொலர் 1000.00 |

விநோதமான சிருஷ்டிகள் உள் நுழைந்து
கை நாற்காலிகளில் அமர்ந்து
மூட நம்பிக்கைகளின் பாயப் போலங்கட்டுக் காத்திருக்குமாறு
சில கவிஞர்கள் சொற் கோவில்களைக் கட்டுகின்றனர்.

மற்றோர் சிறிய விரப் பக்கங்களுடன் தமது
கல்லறை மாட நாளுக்காகக் காத்திருக்கின்றனர்
சிலர் கவிதைகளில் மூக்குக்களின்
குதிரைப் பாய்ச்சற் போட்டியைக் காணுகின்றனர்
அவர்களுக்குந் தெய்வீகமான சனி உண்டு
மற்றோர் தமது விருந்துபசார ஆடைகளுடன்
சிலுவைகளிலிருந்து கீழிறங்குகின்றனர்

மற்றோர் புல்லால் இழைத்த பாய் சுற்றிப் புதைக்கப்படுகின்றனர்.

- எடுவார்டோ சன்ச்சோ கஸ்ரான்யேடா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகன் எங்கே?

கயிலை

தினமும் செய்திகள் - பத்திரிகைகளில், வானொலியில், தொலைக்காட்சியில். களவு, ஆள்கடத்தல், வல்லுறவு; பாதிக்கப்படுவோர் தமிழர்கள்; அதிகமானோர் யாழ்ப்பாணத் தமிழர்கள்.

இரவு ஊரடங்குச் சட்டம்; யாழில் மாத்திரந்தான். எனினும் சம்பவங்கள் இரவில் ஏராளம்; பகலிலுந்தான். மற்றைய பிரதேசங்களிலும் தமிழருக்கு இதே கதிதான். யார் செய்கிறார்கள்?

'சில குழுக்கள்' என்கிறார்கள். அப்படியானால் ஊரடங்குச் சட்டமும் நித்திரை கொள்கிறதா? பாதுகாவலர் (பொலிஸ்) ஆமி ஆகியோரின் ஆசீர்வாதத்துடன் நடப்பதாகக் கேள்வி; பேச்சு.

மெல்லமாகப் பேசுங்கள்; மாட்டி விடுவார்கள்!

பரிபாலனம் - மக்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பானவர் என்ன செய்கிறார்கள்? கண்டும் காணாததுமாய், செவிடன் காதில் ஊதிய சங்கு போல வாளா இருக்கிறார்களே!

எனது 'அதிகப்பிரசங்கித்தனம்' நேற்றிரவு நடந்த சம்பவத்தால் தான்.

நடந்தது பக்க வீட்டில். எங்களையும் வேதனைப் படுத்துகிறது. பக்க வீட்டுக்காரர் அமைதியான குடும்பம். பெற்றோர், இரு மகள்மார், ஒரு மகனைக் கொண்டது. வெள்ளை வானில் வந்தோர் 'விசாரணைக்காக' என்று இரவில் அவர்களின் மகனைக் கூட்டிச் சென்று விட்டனராம். அறிந்து, நான் காலை சென்ற போது, பெற்றோர் சகோதரிகள் கண்ணீரும் கம்பலையுமாக.

'ரெட் குரொஸ்', மனித உரிமைக் குழு, மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உற்றார் உறவினர் அறிவிப்பு. தந்தை பொலிசில் பதிவு செய்தார். கொழும்பு உறவினர் வெளிநாட்டுத் தூதரகங்களில் முறைப்பாடு. கொழும்பில் இருக்கும் தமிழ்ப் பிரதி அமைச்சருக்குத் தொலைபேசியில் வேண்டுகோள்.

தங்கள் ஆறா மனக் கவலையை ஆற்றுவதற்கு, குறைப்பதற்கு செய்யக் கூடிய சகலதும் செய்தனர். நாட்கள் கழிந்தன. பலன் எட்டாக் கனியாக இருந்து வருகிறது.

நாங்களும் தினமும் அவ் வீட்டுக்குச் செல்வோம். அவர்கள் சமைப்பதில்லை. பசித்தால் தானே! என் துணைவி காலையில் இடியப்பமோ, பிட்டோ கொடுப்பா. வாஞ்சையுடன் வற்புறுத்துவா.

"மகன் உயிருடன் இருக்கிறானோ? அப்படியானால் மீட்கலாம், என்ன நடந்திருக்குமோ! தெரியேல்லையே!" அங்கலாய்க்கிறார்கள்! தேம்புகிறார்கள். என் ஆறுதல் வார்த்தைகள்.

"சகாயம் 'அவன்' அருள் கிடைக்கும். மகன் மீள்வான். நம்பினோர் கெடுவதில்லை. நான்கு மறை தீர்ப்பு." சில நாட்கள் மறைந்தன. அன்று அனைவரினதும் வதனங்களில் மலர்ச்சி.

"எங்கேயோ ஒரு காட்டில் கூடாரத்தில் இருக்கிறானாம். படுவான்கரையோ என்னவோ தெரியாது என்டான்".

"அழாதேங்கோ. சந்தர்ப்பம் கிடைக்கேக்க கதைப்பன் - இரவில் நடுநிசியில் அல்லது சாமத்தில்"

"எப்படி ஃபோன் கிடைச்சுது?"

■ ■

பல குழுக்கள் இருக்காம். குறுகிய இடைவெளியில் கூடாரங்களாம். கிழக்கு மாகாணத்தில்தான். காடுகள், அடர்ந்த பற்றைகள் செறிந்த மறைவான இடங்களில் கசிப்பு குடிக்கினம். ஹெரோயின் சாப்பிடுகினம். கஞ்சா புகைக்கினம், மயக்கத்தில் பிதற்றுகினம், பெண்களைப் பற்றித் தான்!

■ ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''குழுத்தலைவரின் மொழியாம்!''

அவர் கசிப்போ என்னவோ குடிக்க நல்ல நித்திரையாம். இன்னுமொரு நடுநிசியில் கிடைத்த செய்திகள், அதிக விபரங்களுடன் புன்னகை தவழ பெற்றோர் சொன்னவை.

''பல குழுக்கள் இருக்காம். குறுகிய இடைவெளியில் கூடாரங்களாம். கிழக்கு மாகாணத்திலதான். காடுகள், அடர்ந்த பற்றைகள் செறிந்து மறைவான இடங்களில் கசிப்பு குடிப்பினம். ஹெரோயின் சாப்பிடுவினம். கஞ்சா புகைக்கினம், மயக்கத்தில் பேசுறுகினம், பெண்களைப் பற்றித் தான்!''

''என்னத்துக்குத் தம்பி உன்னைப் பிடிச்சவை...?''

''ஆயுதப்பயிற்சி, றைவிங், கொள்ளை அடிக்க, ஆளும் தந்திரம், தப்புதல் இப்பிடிக் கனக்க...''

''தம்பி, ராசா, அம்மனைக் கும்பிடு, உன்னைக் காப்பாற்றுவாள்''

வேறொரு சாமத்தில் அழுகையோடு, விம்மி விக்கி, விட்டு விட்டுச் சொன்னான்: மலசலம் கழிக்கப் போனானாம். குழுத்தலைவர், உதவியாளரின் இருக்கை, படுக்கையின் இடம் அதன் அருகில்.

தற்செயலாக எட்டிப் பார்த்தானாம், ஒரு அக்காவைப் பிடிச்சு வைத்திருக்கினம்,

''அண்ணன்மாரே, உங்களுக்குப் பெண் சகோதரங்கள் இல்லையா? அம்மாக்கள் இல்லையா? கும்பிடுறன். என்னை விடுங்கோ''

''சரி, சொல்றதைக் கேள். நாங்கள் சொல்றதுக்கு சம்மதிச்சால் எல்லாம் சரி. இல்லை என்றால் வதைதான்''

''அண்ணைமாரே சொல்லுங்கோ. செய்றன்''

''.........''

''ஐயோ, சேலையை.......''

சிறிது நேரம் 'ஓ, ஐயோ' என்று அழுகைக் குரல்.

மாறி மாறி அந்தச் சகோதரியைத் துன்புறுத்தினார்கள். ஆமிக்காரன், பொலிஸ் இரண்டு பேர் வந்தினம். அவர்களுக்கும் விருந்தானாள். உயிர் போய் விட்டது போல் அந்த அக்கா சுருக்குலைந்து கிடந்தாளாம்.

''என்ர துன்பத்தைச் சமாளிக்கிறன். இங்க நடப்பவை என்னை வாட்டுகிது. சித்திரவதை செய்யுது. நான் பைத்தியக் காரனாகி விடுவேனோ! பயமாயிருக்கு'' என்றான் தம்பி.

''அவளை விடுவினமே.....''

''அக்கா வெளியே வந்தால் போச்சே! அங்க நடப்பவை வெளிச்சத்துக்கு வருமே!''

''அப்ப என்ன நடக்கும்...?''

''இரண்டு மூன்று நாட்களில் அந்த அக்கா அமைதி அடைவா....''

''கடவுளே, அந்தப் பெண்ணுக்கு அமைதி கிடைக்கிறது நல்லது தானே...!''

''அம்மா நான் சொல்றது உங்களுக்கு விளங்கேல்ல....''

''விளங்கச் சொல்லன்''

''அவளைச் சாகடிப்பினம். முந்தி இப்பிடி பலபேருக்கு நடந்திதாம். என்னோடு இருக்கும் ஒருவன் சொன்னான்''

''ஆ கடவுளே...!''

தினமும் ஆறுதல் சொல்வதற்கும், வேண்டிய உதவி செய்வதற்கும் நானும் மனைவியும் அவர்கள் வீட்டுக்குச் சென்று வருகிறோம். கடந்த சில வாரங்களாக மகனிடமிருந்து ஒரு செய்தியும் வரவில்லை. கவலையில் சோர்ந்து சுருண்டு படுத்திருக்கிறார்கள்.

''என்ன நடந்திருக்கும்?'' அங்கலாய்த்துக் கேட்கிறார்கள்.

''தப்பிக்க மகனுக்குச் சந்தர்ப்பம் கிடைக்காமல் இருக்கும். இப்ப கட்டுப்பாடு கூட இருக்கலாம். கடவுள் இருக்கிறார், தைரியமாக இருங்கோ''.

அன்று சிரித்த முகத்துடன் பெற்றோர்.

''தலைவர், அவருக்கு அடுத்தவர்கள் குடியாம், சல்லாபம் அடங்கிக்க தப்பலாம் என்று யோசிக்கிறான். பயப்படாதேங்கோ. பக்கத்துக் கோயில் அம்மனை வணங்குங்கோ...''

''நீர் சொல்ல வேணுமோ தம்பி! அம்மனிடத்தில் தான் 'அம்பிகையே, என் மகன் உன்னிடம் அடைக்கலம்' என்று தினமும் கும்பிடுகிறோம்''

''அவ எங்களைக் காப்பாற்றுவா'' என்று முடித்தாள்.

பல வாரங்கள் கடந்தன.

நாமும் தினமும் சென்று வருகிறோம். அவர்களின் துன்பம் நீங்க இன்னும் வழி பிறக்கவில்லை. மகனும் கதைப்பதில்லை. இன்று ஆனந்தத்துடன் எங்களை வரவேற்பு.

''தம்பி நேற்றிரவு கதைச்சான்''

''எங்கே இருந்து...?''

''காற்கரையில் இருந்து...''

''எப்படிக் கதைச்சான்...?''

''மொபைலில தான்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சொல்லப்பா... ஆர் குடுத்தது?"

"வாழ்நாளில் முதல் தடவையாகக் கொலைசெய்திருக்கிறான்! ஆத்திரத்தில் இருந்திருப்பான்!"

"சொல்லுங்கோ" ஆவலுடன் கேட்டேன்.

"பற்றைகள், காடுகள் எண்டு மறைந்து நடந்து கொண்டிருந்தானாம், நினைப்பு கடற்கரையை அடையவேண்டும் என்ற அனுமானத்தில்; கிழக்காக நோக்கி.

"வழி தவறினான்...?"

"சொன்னான், நெருங்கி அண்மையில் எல்லாம் கதிர்காமம் போயிருப்பானாம்"

அன்றும் அயல் வீட்டில் இருக்கிறேன். மகன் பெற்றோரிடம் கதைத்துக் கொண்டிருந்தான். எனக்கு வியப்பு. பெற்றோர் சொன்னவை.

"மகன் மட்டக்களப்பை அண்டிய கடற்கரையில் மீனவர்கள் - முஸ்லிம்கள், தமிழர், சிங்களவர் - சிலருடன் கதைத்துப் பார்த்தானாம். வாக்கைச் சேர்க்க நாலைந்து பேர் இருந்தினமாம். தன் கதையைக் கேட்டு மிகப் பரிதாபப்பட்டார்களாம். 'தாங்கள் ஏதோ விதத்தில் படகொன்றுக்குக் கொண்டு சென்று சேர்ப்பினமாம்' என்றிருப்பான்.

"எல்லாத் தேவைக் கட்டாயம் வருவினம். உங்களை இருக்கேலாது. நீங்கள் வெளிநாடு செல்ல - முதல் தமிழ்நாடு, பிறகு வேறு நாடுகள், போகிறோம் - ஆயத்தமாக இருங்கள்"

"அடுத்த வீட்டு அங்கிள் - ஆன்றி உண்மையானவர்கள். எங்களிடம் அன்பு நட்புக் கொண்டவர். அவையும் நல்ல யோசனை சொல்லுவினம். எதுக்கும் வீட்டை விட்டு வெளியேற ஆயத்தமாக இருங்கோ. நான் நிச்சயமாகக் கட்டாயம் வருவேன்" என்றான்.

பெற்றோர் சகோதரிகளுக்கு மகிழ்ச்சி துக்கம் சங்கமமான ஒரு நிலை. மகன் வருகையிட்டுப் பேரானந்தம். வீட்டை, நாட்டை விட்டு வெளியேறத் தயக்கம், கலக்கம். பகலில் ஒரு வெள்ளை வான் அந்த வீட்டுக்கு வந்தது. நானும் அங்கிருந்தேன்.

"மகன் இங்கே வந்தானா?"

பெற்றோர், சோதரிகள் பயமடைந்து இருந்தார்கள்.

"நாங்கள் கேட்கிறோம். பேசாமல் இருக்கிறீர்கள்" மேலும் பயத்துடன் காணப்பட்ட மௌனம். சற்றும் திமிர் நிறைந்த உரத்த கடுந் தொனியில்

"வாயில் கொழுக்கட்டையா? விளக்குமாத்தாலை கேட்கிறியளா?"



"தம்பிமாரே, அவை மகன் போனதிலிருந்து உருகி உருக்குலைந்து போயிருக்கினம். எப்பவும் அவைக்கு வருவோ என்று பார்த்திருக்கினம்..."

"ஓய் பெரிய மனுசனே! நீ அவைக்கு எதுவுமோ? வக்காலத்துக்குப் பேச வந்துவிட்டாய்!"

"ஆலையினிலை மகனை விசாரணைக்கு என்று கொண்டு போச்சினம். எனக்குத் தெரியாது. நீங்களோ என்று..."

"நாங்களே தான்! என்ன செய்யப் போறாய்?"

"அப்ப இப்பிடி வந்து கேட்டால்!" அதைக் கேட்டு பெற்றோர் சகோதரிகள் துடித்தனர். "பாருங்கோ!"

"அப்ப பொடிப்பயல் - தன்னை வீரன் என்டவன், இங்க வரேல்ல..."

"வரவே இல்லை, வரவே இல்லை, சத்தியம்..."

"ஓய் மனுசனே, அலட்ட வேண்டாம். பொடிப்பயல், வீரன், கள்ளன் தப்ப ஏலாது. கட்டாயம் வந்து பிடிப்போம். பிறகு அவியல், துவையல், எமலோகம்...."

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது எங்கள் குடும்பத்தில் நிம்மதி. தமிழ் நாட்டிலிருந்து பெற்றோர் மகன்கள் எங்களுடன் கலந்துகொண்டனர். மகேசும் வாஞ்சையுடன் 'அங்கிள்' என்று வாய்நிறைந்து சிரித்தான். அவனுடைய குரல் கேட்டதும் மனம் மகிழ்ச்சியில் நிரம்பியது. என்றாலும் இன்னொரு பக்கம் கவலைகள் ஒவ்வொன்றாக முளைவிட்டன. ஒருவன் தப்பிவிட்டான். அவனுக்காகக் குடும்பமே கடல் கடந்து விட்டது. இன்னும் தப்ப முடியாமல் நடுங்கித் தவித்து இருக்கிறவர்கள் எத்தனை பேர்? இறந்து போனவர்கள் எத்தனை பேர்? சீரழிக்கப்பட்ட சீவன்கள் எத்தனை?

கடல் தாண்டிப் போகிறது தான் வழி என்றால், போன இடத்தில் வாழ்க்கை எப்படி இருக்கும்? இங்கே ஒரு விதமான தொல்லை. அங்கே?

யோசிக்க யோசிக்க மனதை நிரப்பிய நிம்மதியும் மகிழ்ச்சியும் எங்கேயோ போய் ஒளிந்து கொண்டன.

---

கிருஷ்ணா




அவர்கள் அவனை
இழுத்துச் சென்ற
துயர இரவது

கருமுகில் உடுத்தியிருந்த வானம்
கண்ணீர் விட்டபடியே
நிர்வாணமாய் ஆனது

பன்னீர் நனைத்த வீதியில்
வழுக்கிச் சென்றது
அந்த மரண ஊர்தி

ஓநாய்க் கண்களால்
மேய்ந்து
அவனை கேள்விகளால் குதறினர்

சில கணங்கள்
நீடிக்கவே பிரார்த்திக்கிறான்
அவன்

மானைக் கண்ட சிறுத்தையாய்
எச்சில் வடியும் வாயுடன்
ஓரமாய் மரணம்

பயணமென தீர்மானிக்கப்பட்ட
குரூரம் கவ்விய இடத்தில்
மரண ஊர்தி தரித்தது

பொத்துக் கொண்டு
அழுதது
மீண்டும் வானம்

அந்தக் காலத்தின் நிசப்தம்
கிழித்து வீழும்
மழைக் கீற்றுக்கள்
மரண வீடு ஓலமாய்

கண்ணீரோ அமைதியாய்
திரண்டு வழியுது

அழகிய வாள்
பளபளத்தது
வருடிப் பதம் பார்த்தால்
அறுப்பவன்
குரல்வளை அறுபட்டது
தலை தொங்கியது
உறையாக் குருதியைக்
குரூரம் நக்கியது

இனி அவன்
தெற்கெதிராகவும்
பேசமாட்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருஞ்சற்றுப் பொறும் எல்லாஞ் சரிவரும்

சோ. தேவராஜா

படைச்சவன் படியளக்க வயலி வீதியிலே தேரோடும்
பிள்ளைப் பாதங்கள் பலிகொடுத்தோர் புகழ்பாடிய பரதங்கள் அரங்கேறும் பல லட்சம் செலவாகும்
காகங்கள் கரைந்திடும் பீட்சா, மக்டொனல்ட், கேஎவ்சி பலகாரம் பரிமாறும்
படைச்சவன் படியளக்கச் சனங்கள் சாக விமானங்கள் குண்டு போடும்
பிள்ளைப் பாலர்கள் சாக பெற்றார் புழுதியில்புரள பிரேதங்கள் பாடையேறும்
சமைச்சபடி விட்டோட பழஞ்சோறும் பச்சடியும் பானைசட்டியோடை கவிழும்

வெளிநாட்டார் உபயத்தில் ஊரிலே கோபுரங்கள் உயரும்
யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் மருந்துக் கட்டுமின்றி குஞ்சுகுருமன்கள் சாகும்
- ஆருக்கென்ன அது அப்படிபோயாகுக!

முருகா நீ ஏன் கோவணத்தோடு கதிரமலையேறி ஆண்டியானாய்
'துவக்கு'ம் பாக்கை, உரியபடா உடுப்பை போடு செக்கிங்காலையோ - நீ இக் கதிக்கானாய்?
உரிஞ்ச உடலோடு மாணிக்க கங்கையிலே நீராடிய
உன் பக்தர்கள் பொல்லடி பட்ட சேதி கேட்டோ - மலைத்துக் போய் மலையேறினாய்!
- அப்பா முருகா
மாவிட்டபுரந்தான் முருகா நீ மறந்து போனியோ
ஊர்விட்டோடிவந்து இருபது வரிசம் கடந்து போச்சப்பு
ஆமிட்டைத்தான் நாங்கள் இனிப் போய் ஆற முருகா! - அப்பா
மனம்ஆற பம்பலப்பிட்டிக் கதிரேசனை கதியானோம் அப்பா! முருகா!
கொழும்பிலை சாகிறதுதான் வெற்றாம் இப்ப - நல்ல
மலைப்பிட்டியும் உள்ளை இல்லையாம் இப்ப
எண்ட குழந்தை சண்முகலிங்கம் சொன்ன சேதி தெரிஞ்சோ
அப்பா, முருகா அறுபது தாண்டியபின் கொழும்பிலை செத்தால்
இப்ப பிள்ளையள் வந்து போகச் சுகம்
செத்த வீட்டையும் சிறப்பாச் செய்யலாம் என்று
மிச்சம் அண்ணையும் கொள்ளுப்பிட்டியிலையும் கொழும்பிலை
கன்னிபோட்ட வயாவலை சிறுவிலையும் கிளிப்பறிங்குக்கு
அலைபின்னாம் அங்கை
ஆருக்குதுகள், வந்தவங்கள் இருந்தை வடிவாய்ச் சாவம்!

என்னை கண்டறியாத சிவியம்?
என்ரை வீட்டுக் கிணற்றிலை
இரண்டு வாளி தண்ணியள்ளிக் குளிக்க வேணும்
என்ரை வீட்டு முருங்கைமரநிழலை
இருந்து சிந்த நான் நெருங்கிச் சமைக்க வேணும்
கொஞ்சம் குழம்பு வைச்சு
முருங்கைக் காய் பிரட்டல் வைச்சு
அவிச்ச பருப்பும் வறுத்தவடை
மொட்டைக் கறுப்பன் நெல்லும் சோத்தையும் குழைச்சுப் பிரட்டித்
தின்னத் தின்ன என்ன ருசியப்பா முருகா!
மட்டுவில் கத்தரிக்காய் நீர்வேலி வாழைக்காய்
யாழ்ப்பாணக் கறுத்தக் கொழும்பான்
இணுவில் இதரைப்பழம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்தேப் பிலாப்பழம் இதுவல்லோ சாப்பாடு
இஞ்சை பார் சீவியத்தை
என்ரை பேரன் அமெரிக்காவிலை
என்ரை பிள்ளை இலண்டனிலை
இஞ்சினியரிங் முடிச்சுப் பிளேன் ஓடுறான்
மற்றவளொருத்தி மெடிசின் முடிச்சுப் போட்டாள் - ஒஸ்ரேலியாவிலை
கனடாவுக்குப் போய் அதாலை நோர்வேயிலை நிண்டு
ஒஸ்ரேலியாவிலை இறங்கி ஒரு மாதம் நிண்டு
மருமேன் கூப்பிட்டாப் போனால் கவிக்கும் போய்..
அதுக்கிடையிலை அவசரமாய் மூத்த பொடிச்சி
'தன்னட்டை வரேல்லை'யெண்டு குறைப்பட்டாள்.
'அதிலையென்ன வாறும்' எண்டு பிரான்சையும் சுற்றிப் பார்த்தன்
எண்டு சொல்லுமன்!
எண்டாலுஞ் சொல்லுறன், அப்பா, முருகா
உலகமெல்லாம் பிளேன் ஏறி உலாத்தி வந்த பிறகும்
ஒர் மாம்பழம் சாப்பிடக் கிடைக்கேல்லை முருகா
உனக்குத் தெரியும் மயிலேறி உலகைச் சுற்றி வந்தும்
உன்ரை கொப்பரும் கொம்மாவும் உனக்கு மாம்பழந்தரேல்லை

அந்த கோபியாரத்திலைதானே கோவிச்சிட்டு [illegible] மலை
உங்கள் பிள்ளையாண் உன்னை [illegible]
பாவனை முகத்துடன் செய்த நாடகம்!
செல்வச் செல்வியை விட்டு வெளிக்கிட்டனி மலைக்கு

என்ன நான் சொல்லுறன்
எனக்கு மாம்பழம் வேணும்
முருக்கத்திலை, செவ்வல், பிஞ்சு வேண்டாம் எனக்கு
முற்றின பழம் கறுத்தக் கொழும்பான் - ஊர்
முத்தத்திலை நிற்கிற முன்னாலை
கொழுக்குது தேறு
என் வெளியிலை சாய்ஞ்சபடி நானிருக்க
பேரன் பிடுங்கிய கறுத்தக் கொழும்பான்
பட்டாயத்து சாப்பிட வேணும்
சாவேட்டன் அதுவரை.
வேலவீர் போட்டன்.
மயில் ஏறி நீ பறிவாய்
மலையேறி நீ போனாய்
வெள்ளவத்தைப் பிளாற்றில் மூலேறி
பத்தாந் தட்டிலை நான்
நாலு சுவரையும் பாத்தபடி
குந்திக் கொண்டு
முழிச்சுக் கொண்டிருக்கிறன்.
உண்ணாவைச் சொல்லிப் போட்டன்,
இனிப் பொறுக்க ஏலாது
காவடியும் வருவன்
மண்டபத்திலை உருண்டு போடுவன்
கலைப்பாலை உன்னை ஏத்துவன்
முருகா வேணும் மாம்பழம்
விடாதை பேட்டை இனி.



(தேசிய கலை இலக்கியப் பேரவை 35ஆது ஆண்டு விழாக் கவியரங்கில் வாசிக்கப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் வடக்கு மண்ணின் மைந்தர்கள்



# தலையிரை துரைராசா

மாவை வரோதயன்

மாவிட்டபுரம் கோவில் கடந்து வடக்குப் பக்கமாக காங்கேசன்துறை வீதியில் அரைக் கட்டை தூரம் நடந்தால் அந்த வீதியில் ஒரு பரபரப்புத் தெரியும். தேன்கூட்டைச் சுற்றித் தேனீக்கள் சுறுசுறுப்பாக இயங்குவது போல் ஒரு சுறுசுறுப்பு. சீமெந்துத் தொழிற்சாலைக்கு அப்பகுதியில் இரண்டு நுழைவாயில்கள். அடுத்தடுத்துக் கால்கட்டை தூரத்தில் உள்ளன. தொழிலாளர்கள், அலுவலர்கள் உள்ளே போவதும் வெளியே வருவதுமாக இருப்பர். சீமெந்து ஏற்றும் லொறிகள் வரிசையில் நின்று உள்ளே புகும். ஏற்றிய லொறிகள் முக்கி முனகிக் கொண்டு மூச்சு இரைத்தபடி வெளியேறும். பிரதான வீதிக் கரையில் உள்ள தேநீர்க்கடை எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கும். ரயில் ரோட்டுக் கடக்கும் சந்தி மூலையில் இராசையாவின் சைக்கிள் திருத்தும் கடை. அதுவும் ஓய்வற்ற வேலையுடன் காற்றடிக்க வருபவர்களுக்கும், ரியூப் ஒட்டிப் போட வருபவர்களுக்கும் சளிக்காது முகம் கொடுத்தபடி இருக்கும். எந்த நேரமும் இந்தப் பகுதியில் வந்து "தலையிரை வீடு எவடத்தை?" என்று கேட்டால் "ஆர் துரைராசா அண்ணையோ!" என்று பதில் கேள்வி கேட்பார்கள். "அந்தா உதில போறார், அவர்தான்" என்று சில சந்தர்ப்பங்களில் காட்டப்படும் அளவுக்கு அந்தப் பிரதேசத்தில் பிரசித்தமானவர். அவரது வீட்டைக் காட்டும் வகையில் குறிப்புக் கூறுவதும் உண்டு.

"அந்தா உந்த ரெயில்பாதைப் பக்கத்து ரோட்டால இறங்கி முன்னாப் போங்கோ ஒண்டு, ரெண்டு முடக்குக் கழிய துண்டு ஒண்டு இடப்பக்கமாய்த் தெரியும். ஆலமரமும் அரசமரமும் நிக்கிற குமார கோயில் அது. அதுக்கு எதிர்ப்பக்கமா முந்திரிகைப் பந்தல் வீடு. ரோஸ் கலரிலை கேற் போட்டிருக்கு. முந்திரிகைப் பந்தலுக்கு இடப்பக்கமாகக் கிணத்தடி இருக்கு. ஆடுகால் துலா தெரியும்" என்று வழி காட்டுவார்கள்.

> வலிகாமம் வடக்கு மண்ணின் மைந்தர்கள் என்ற இந்த நடைச்சித்திரத் தொடர் தாயக வாசகர்களின் அமோக வரவேற்பைப் பெறுவதையிட்டு மகிழ்ச்சி. அதுவே வாசகர்களிடத்தில் பல பல கேள்விகளை எழுப்புவதும் மகிழ்ச்சி.
>
> 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் முற்று முழுதாக மக்கள் விரட்டியடிக்கப்பட்டு செம்மண் புழுதி அடி அனைத்து முகமும் வலிகாமம் வடக்கின் [illegible] பிரதேசங்கள் யுத்த [illegible] பகுதிகள் ஆக்கப்பட்டிருந்தன. இன்று அவை முற்று முழுதான அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அழிக்கப்பட்டுள்ளன.
>
> இந்த மண்ணின் மைந்தர்கள் அழிந்தார்கள் என்பது ஒரு கவலை இருக்கிறது. ஐம்பதாம் ஆண்டுக்கு முன்னர் சிறந்த பொருளாதார அமைப்பு, புதிய [illegible] நுழையும் முன்பு அந்த மண்ணில் ஒரு அமைதியான வாழ்க்கை முறை இருந்தது. அதில் வாழ்ந்த மனிதர்களை, அவர்கள் அன்றாட வாழ்வை, மண்ணின் மனிதர்களோடு இயற்கையின் நேசிப்பை மீள நினைந்து பதிவுக்குத் தருவதே இந்த நடைச்சித்திரத்தின் நோக்கமாகின்றது. இது இன்றைய தலைமுறையினருக்கு அறிமுகமாக்கிடுவதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழுதும் மெல்லிய நிறத்தில் அரைக்கை சேட், வெள்ளை வேட்டி, மெலிந்த உடல். நாற்பத்தைந்து வயது கடந்தாலும் நரைக்காத கேசம், சாதாரண உயரம். திடகாத்திரமான தேகம். மேல் எடுத்து மீசையை அழகிய மீசையாக 'கிளிப்' செய்திருப்பார். சிகரட், மதுபானம், கள்ளு வாசனையே அறியாதவர்.

தவராசா அண்ணர் ஒரு ஓய்வில்லாத சமூக சேவையாளர். நடேஸ்வராக் கல்லூரியில் எஸ்.எஸ்.ஸி படித்த கையோடு, சீமெந்துத் தொழிற்சாலையில் தொழிலாளியாகச் சேர்ந்து கொண்டார். அவரது அதிஷ்டம், மின்சாரப் பராமரிப்புப் பகுதியில் வேலை கிடைத்தது. வெள்ளைக்காரரான எஞ்சினியருடன் கண்ணும் கருத்துமாய்ப் பணியாற்றியதால் மிகக் குறுகிய காலத்திலேயே மின்சாரம் பற்றிய விடயங்களைக் கற்றுக் கொண்டார். மிகக் குறுகிய காலத்தில் திறமை அடிப்படையில் அவருக்கு மின் முகாரியாகப் பதவி உயர்வு கிடைத்தது.

சம்பள உயர்வை விட இரு தொழிலாளர்களிடம் தலைமைப் பதவி கிடைத்தமை தான் அவருக்குப் பெருமை சேர்க்கும் விடயமாகும். சத்தமில்லாத சிறு நதி போல அமைதியாக ஓடிக் கொண்டிருந்த காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையின் தொழிலாளர் சங்கம் அவரை அங்கத்தவராக இணைத்துக் கொண்டது. அவ்வப்போது நடந்த தொழிலாளர் போராட்டங்கள், முகாமைத்துவத்துடனான பேச்சு வார்த்தைகளில் தவராசா அண்ணரும் முன்னணியில் செயற்பட்டார்.

அதற்குரிய தகைமைகள், குணப் பண்புகள் தவராசா அண்ணருக்கு இயற்கையாகவே கைவரப் பெற்றிருந்தன. சட்டதிட்டங்கள், ஒழுங்கு விதிகள், உரிமைகள், சலுகைகள் என்று அனைத்து விடயங்களையும் படித்துப் பாடமாக்கி வைத்திருப்பார். உள்நாட்டு அரசியல், சமூக விடயங்கள் மட்டுமல்ல உலக விடயங்களையும் படித்து அறிந்து கொள்வார். விடயம் தெரிந்தவர்களுடன் கலந்துரையாடிக், கொள்கைகள் கோட்பாடுகளைச் சரிப்படுத்திக் கொள்வார்.

இதற்கும் அப்பால் அண்ணரின் வாதாடும் திறன், நாவன்மை தான் முக்கியமானது. அமைதியாக, தெளிவாக காரண காரிய ஆதாரங்களுடனும் கருத்துக்களை முன்வைப்பார். தான் கொண்ட கருத்து, நியாயம் என்பதற்கும் அப்பால் எதிரே நிற்பவரை மடக்கும் வகையில் விதண்டா வாதமாகவும் பேசுவார்.

"ஜி.ஜி. சொல்வது சரி" என்று ஒருவர் சொன்னால் "ஜீ.ஜீக்கு ஒன்றும் தெரியாது, பிழை விட்டிட்டார். எஸ்.ஜே.வி. தான் சரி" என்று வாதாடுவார். இன்னும் ஒரு நாளில் அந்த நபர் இவர் எஸ்.ஜே.வியின் ஆள் என்ற நம்பிக்கையில் எஸ்.ஜே.வி.க்குச் சார்பாக கதைத்தால் "எஸ்.ஜே.வி. என்ன செய்தது. சும்மா காலத்தைக் கடத்தினது. ஜி.ஜி. தானே இந்தப் பகுதி எல்லாம் போட்டுத் தந்தது" என்று மடக்கிப் பிடிப்பார்.

அந்தத் திறமையினால் அவர் தன் சக தோழர்களைத் திணறடித்து மகிழுவார். அதே போல முகாமைத்துவத்துடன் பேசி தொழிலாளர் சார்பில் வெற்றியும் பெற்று விடுவார். தவராசா அண்ணர் பேச வருபவரானால் முகாமைத்துவம் ஒரு சிரேஷ்ட பட்டத்தரணியுடன் பேசும் வகையில் உசாராகி விடும். ஆனாலும் தவராசா அண்ணரிடம் தோற்று விடும். தொழிலாளர் பலம் இருப்பதனால், முகாமைத்துவம் அவரைப் பழிவாங்க உத்தேசிப்பதில்லை. ஆனாலும் முகாமைத்துவத்தில் உள்ள முக்கியமான அதிகாரிகள் அண்ணரின் தனிப்பட்ட நண்பர்களுமாக இருந்தனர்.

வருடா வருடம் செயற்குழு, பொதுக்குழு கூட்டி தலைவர் செயலாளரை மாற்றுவார்கள். மாற்றினாலும் தலைவர், அல்லது செயலாளர்கள் மாறி மாறி இருப்பர். சில வேளைகளில் கணபதிப்பிள்ளை அண்ணர் தலைவராக வருவார். வந்தாலும் அவர் நாடகம் போடுவதே பிரதானம். சிந்தனையாய் இருப்பதால் தவராசா அண்ணர் தான் அந்தப் பணிகளையும் கவனிப்பார்.

சீமெந்து ஆலையின் தொழிலாளர்களுக்கும் தொழிற்சங்கத்துக்கும் புறம்பாக அவ்வூருக்கு இன்னொரு சமூகப் பணியும் இருக்கிறது. அதுதான் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம். அதன் செயற்குழு அங்கத்தவர், தனாதிகாரி, ஆலோசனைக்குழு உறுப்பினர் என்று எப்போதும் ஏதாவது பதவியில் இருப்பார். கூட்டுறவுச் சங்கத்தின் செயற்குழுக் கூட்டமும் அண்ணர் இல்லாமல் நடக்காது. அப்படி ஏதும் அவசர காரணங்களால் அண்ணர் சமூகமளிக்க முடியாமல் போனால் அந்தக் கூட்டம் களை கட்டவில்லை என்று ஆட்கள் முணுமுணுப்பார்கள். அந்தளவு தூரம் கூட்டுறவுச் சங்கத்தில் அண்ணர் குரல் தொழிலாளர் சார்பாகவும், சங்க நன்மைக்காகவும், சமூக மேம்பாட்டிற்காகவும் ஒலிக்கும்.

கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் ஏதும் பிழைவிட்டால் முகாமை அவர்களை வேலையிலிருந்து

இடைநிறுத்தம் செய்து விடும். பின் அவர்கள் தவறாமல் அண்ணரின் தயவைப் பெற்று மீள் அனுமதியும் பெற்று விடுவார்கள்.

வழமைபோல பொருட்கு தட்டுப்பாடு வந்து அவசியமாகச் சாமான்கள் பங்கிட்டு வழங்கப்படுகின்ற காலத்தில் அண்ணர் சும்மா இருக்க மாட்டார். சங்கக் கடைகளுக்கு திடீர் விஜயம் மேற்கொண்டு மேற்பார்வை ஒழுங்குகளைச் செய்வதன் மூலம் ஊழல்கள் நடப்பதைத் தவிர்த்து விடுவார். தனது பங்கீட்டு அட்டைக்கு உரிய அளவைவிட ஒரு சிறங்கை சீனி தன்னும் தனது வீட்டுக்குக் கொண்டு போக மாட்டார். கையில் காசு கொடுத்துப் பிள்ளைகளைத் தங்கள் பிரதேச சங்கக் கடைக்கு அனுப்பி, வரிசையில் நின்று சாமான் வாங்க வைப்பார்.



அதனால் ஊரவர்கள் மத்தியிலும் தவறாமல் அண்ணர் ஒரு தலைவராகவே மதிக்கப்பட்டார். பொது வேலையைப் போலவே வீட்டு வேலைகளிலும் அண்ணர் பங்களிப்பு நிறையவே இருக்கும். அவரது வீட்டின் பின்னால் ஒரு இரண்டு பரப்பில் வீட்டுத் தோட்டம் இருக்கிறது. அதில் வாழை, கத்தரி, வெண்டி, புடோல், பாகல், மிளகாய் என்று எப்போதும் வீட்டுத் தேவைக்கான வருமானம் இருக்கும். தாவாரத்தில் ஒரு பசுமாடு கன்றுடன், ஆட்டுக்குட்டி ஒன்று இரண்டும் எப்போதும் நிற்கும்.

வீட்டிற்கு முன் முற்றப் பகுதியை அடக்கிக் கொண்டு முந்திரிகைப் பந்தல் பச்சைக் கூடாரமாக நிழல் தரும். அதில் ஆறு அடி அளவில் முந்திரிகைச் செடிகள் இருக்கும். இன்னும் தென்னை, செவ்விளநீர், மாமரங்களும் அந்த வளவிற்குள் உண்டு. அவற்றைப் பராமரிப்பது, நீர் பாய்ச்சுவது, பசளை இடுவது, கொத்துவது, சாறுவது எல்லாம் அண்ணர் தன் கையால் ஆற்றும் பணிகள் தான்.

இதற்கு மேலதிகமாக சீமெந்துத் தொழிற்சாலைக்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தை ஒப்பந்த அடிப்படையில் பெற்று பயிர் விளைவிக்கும் பசுந்தரையாக மாற்றி விட்டிருக்கிறார். அதில் தனக்கென ஒரு ஆயிரம் கன்றுப் பகுதியை வைத்துக் கொண்டு மீதியை தனது விவசாய ஈடுபாடுள்ள நண்பர்களுக்கு பகிர்ந்தளித்துள்ளார். அதாவது சீமெந்துத் தொழிற்சாலை காங்கேசன்துறைக்கு வர முதல் அது அந்த மண்ணின் விவசாயிகளின் விளை நிலமாக இருந்ததால் அதைக் மீளப் பெற்று குத்தகை செலுத்தியேனும் விவசாயம் செய்யப் பயன்படுத்தப்படுவதில் அண்ணருக்குப் பெருமை அதிகம்.

கண்ணாம்புக் கற்பாறைகள் நிறைந்த அந்தப் பகுதியில் பற்றை வெட்டி, கல்லுக் கிளறி, உழுது, மட்டப்படுத்தி, இறைப்புக் கிணறுகளை தூர் அகற்றி அங்கு பசுமை கூடிப் பருவப் பயிர்கள் செய்து வருகிறார்கள். தனது தொழில் தவிர்ந்த நேரங்களில், சங்க வேலை தவிர்ந்த நேரங்களில் அண்ணர் இந்தத் தோட்ட வெளிக்குள் தான் நிற்பார்.

காலத்துக்கு ஏற்றவாறு வெங்காயம், உருளைக்கிழங்கு, மிளகாய், மரவள்ளி, கீரை, மரக்கறி என்று எப்போதும் பயிர்ச்செய்கை நடைபெறும். கண்ணாம்புக் கற்குன்றுகள் கலந்த செம்பாட்டுத் தரை. எப்போதும் சோதான வெங்காயத்துக்குத் திறம் என்று சொல்லுவார்கள். களைகளின் தொல்லை பெரிதாக இல்லாவிடினும் கோரைப்புல்லின் ஆதிக்கம் தான் அந்தத் தோட்ட வெளியில் எப்போதும் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை இறைப்பு. தண்ணீர் தப்பினால் கிணற்றடி லீவு ஆகுவது சிரமம். வேலைக்குப் போகும் முன்பாக விடியற்காலை, அல்லது வேலை முடிந்து வந்து மாலை வேளையாவது முறை இறைப்பு இறைத்தாக வேண்டும். மெஷினைச் சைக்கிள் கரியரில் கட்டிக் கொண்டு சுருட்டிக் கட்டிய அரிக்கந்தில் பைப்பை முறுக்குத்தடி கட்டில் இருக்கி தோளில் பலன்ஸ் செய்தபடி அண்ணை தோட்டத்துக்குப் போகும் அழகே அழகு. மகன்மார் மண்வெட்டி, துலாவை, வாளி, சுடுதண்ணீர்ப் போத்தலுடன் தமது அரைச் சைக்கிள்களில் பின்னால் போவார்கள். காலையில் தோட்ட வேலை முடிந்து வந்து சுகம் பிள்ளைகள் பாடசாலை போவார்கள், அண்ணையும் வேலைக்குப் போவார். மாலையிலும் நாலு மணிக்குத் தேநீர் குடித்து விட்டுத் தோட்டத்துக்குப் போனால் வெள்ளை ஆகி, நிலவு காலிக்கும் வரை தோட்டத்தில் வேலை நடக்கும். மாட்டுக்குப் புல்லுப் பிடுங்குதல், வரப்பு, வாய்க்கால், உடைச்ச இடங்கள் திருத்துதல், மரக்கறி அறுவடை என்று வேலைகள் இருக்கும்.

தோட்ட வேலை, தொழில், கூட்டுறவுச் சங்கப் பணிகளுக்கும் அப்பால் இன்னொரு துறையில் அண்ணரின் ஈடுபாடு இருக்கும்.

தவராசா அண்ணருக்கு முருக மோட்டையில் பத்திருக்கர் பட்டில் வயற்காணி இருக்கிறது. அங்கு விவசாயத்தைக் கவனிப்பதற்கு ஒரு குடும்பம் குடியமர்த்தப் பட்டிருக்கிறது. வயற்கரையோடு ஒரு நீரோடை, பளிங்கு நிறத்தில் ஒரு மலைப்பாம்பு போல வளைந்து கொண்டிருக்கும். வருசம் பூராவும் தண்ணீர் இருக்கும். அதை ஒட்டியதாய் ஒரு பிள்ளையார் சிலை. சின்னக்குடில். அந்தப் பகுதி வயல்களுக்கு இந்தப் பிள்ளையார்தான் படைத்தல், காத்தல், அருளல் பணிகளைச் செய்து வருகிறார். அதற்குக் கைமாறாக பொங்கல், படையல், மடை, கொழுக்கட்டை அவியல் என்று காலத்துக்குக் காலம் தவறாமல் நடக்கும். இவை எல்லாவற்றுக்கும் தலைமைப் பங்கை வகிப்பவர் தவராசா அண்ணர்தான்.

சனி, ஞாயிறு, போயா விடுமுறை நாள் வருவதைப் பொறுத்து அண்ணர் விடியப்புறம் யாழ்தேவியில் புறப்பட்டு விடுவார். பரந்தனில் இறங்கி கிளாலிமடுவுக்குப் போற தட்டி வானைப் பிடித்து காலைச் சாப்பாட்டிற்கு வயலுக்குப் போய்விடுவார். அங்கு விவசாய கடமைகளைப் பார்த்து முடித்துவிட்டு இரவிரவாகப் புறப்பட்டு பரந்தன் வந்து மெயில் ரெயிலைப் பிடித்து விடியற்காலை மாவிட்டபுரம் ஸ்ரேசனில் வந்து இறங்கி விடுவார். அப்படியே வீடு வந்து தேத்தண்ணீர் குடித்துச் சாப்பிட்டு விட்டு லோங்ஸை மாட்டிக் கொண்டு எட்டு மணி சைரன் அடிக்கும் போது பக்ரறி வேலைக்குப் போய் விடுவார்.

அறுவடை காலத்தில் கொஞ்சம் கூட நாள் லீவு எடுத்து வயல் அறுவடையைப் பார்ப்பார். அறுவடைகள் முடிய வேலையாட்கள், வயலில் இருப்பவர்களின் கொடுக்குமதியைக் கொடுத்து விட்டு ட்ரக்டர் ஒன்றில் நெல் மூடைகளையும் வைக்கோலையும் ஏற்றிக் கொண்டு வீட்டிற்கு வந்து விடுவார். இனி வருசம் முழுவதும் வீட்டில் அரிசி இருக்கும். மாட்டுக்கு வைக்கோல் இருக்கும். இந்தக் களை முடிய முதல் அவர் அடுத்த போகத்துக்கு ஆயத்தம் செய்யத் தொடங்கி விடுவார். இடையில் உழுந்து, பயறு, சோளம் போன்ற பயிர்களையும் உப பயிர்களாகப் பயிரிடுவார். வருமானத்தில் ஒரு பங்கு வயலில் இருப்பவர்களுக்கு கொடுக்கப் படுவதால் அவர்கள் திருப்தியுடனும் அண்ணருக்கு விசுவாசமாகவும் இருப்பார்கள்.

ஊரில் உள்ள இளைஞர்கள் வேலை கெட்ட நேரங்களில் சந்திகளிலும், முடக்குகளிலும், வீட்டு வாசல்களிலும் நின்று கதைத்துப் பொழுது போக்குவது அண்ணருக்குப் பிடிக்காது. அதற்காக இளைஞர்களைப் பகைத்துக் கொள்ளவும் மாட்டார். ஆனால் ஒன்று செய்வார். இதற்கு முக்கியமான இளைஞனிடம் வாய்ப்பாடாகக் கதைத்து, 'கண்ணா! விளையாடக் கூட்டோர் தெரியுதில்லை! அங்க இருப்பார் ஓ.சி. துரைராசா அவரிட்டை போய் தவராசா அண்ணை சொன்னவர் என்று பயிர்க்கும் விதை ரண்டு பைக்கற் வாங்கிக் கொண்டு வா, சந்துப் பூச்சிக்கு என்ன மருந்து அடிக்கிறதெண்டு கேட்டுக் கொண்டு வா, இல்லாட்டி இந்தப் பக்கம் ஒருக்கா வந்திட்டுப் போகச் சொல்லிப் போட்டு வா...' என்று கடமைகளை ஏற்றுவார். போதாக் குறைக்கு தனது சைக்கிளையும் கொடுத்து அனுப்புவார். அதன் பாருக்குக் கீழாக 'காங்கேசன் சீமெந்துத் தொழிலாளர் சங்கம்' என்று அகரத்திலான பெயர்ப்பலகை தொங்க விடப்பட்டிருக்கும்.

இளைஞர்களால் தவிர்க்க முடியாது. 'ஓமோம்!' என்று புறப்பட்டுக் கலைவார்கள். பின் தவராசா அண்ணர் தூரத்தில் வரும் போதே கூட்டத்தைக் கலைத்துப் பறந்து விடுவார்கள்.

ஊரில் உள்ளவர்களும் தமது வீட்டில் என்ன பிரச்சினை என்றாலும் தவராசா அண்ணரிடம் ஒரு வார்த்தை கேட்டுப் பார்ப்பம் என்று வருவார்கள். வெளியூர் சம்பந்தம்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுக்கால் என்று வந்தாலும் இடம், பகுதி பற்றி விசாரிக்க அண்ணரைத்தான் ஆலோசிப்பார்கள். காரணம் எந்த ஊரிலும் எந்த அலுவலகத்திலும் அவருக்கு அறிமுகமானவர்கள் இருப்பார்கள். அரசாங்க அலுவலகங்களில் ஏதும் அலுவல் பார்க்க வேண்டும் என்றால், ஊரில் யாரும் முதலில் தவராசா அண்ணரைத்தான் பிடிப்பார்கள். அது நெல்லிப்பழை டி.ஆர்.ஓ. கந்தோர் ஆனால் என்ன, யாழ்ப்பாணம் கச்சேரி, கொழும்பில் உள்ள திணைக்களத் தலைமை அலுவலகங்கள் ஆனால் என்ன, எங்கும் அவருக்கும் அறிமுகமான, வேண்டிய ஆள் ஒராள் இருப்பார், அங்கபோடு கடிதம் கொடுத்தனுப்புவார். அண்ணருக்காக அலுவல் நடக்கும். அப்படி ஒரு செல்வாக்கு. செத்தவீடு, கலியாணவீடு, அந்தியேட்டி என்றாலும் தவராசா அண்ணர் தான் முன்னின்று நடத்துவார். சிலவேளைகளில் பண உதவியும் செய்வார். அவருக்கு நெருக்கமான வீடுகளில் புளிக்கஞ்சி, ஒடியற்கூழ் காய்ச்சினாலும் அண்ணருக்கும் அழைப்பும் கிடைக்கும். சொன்ன நேரத்துக்குப் போய் ஒரு பிடி பிடித்து விடுவார்.

அண்ணர் எட்டு முழ வெள்ளை வேட்டி வெள்ளை சேட்டுடன் புறப்பட்டால் அது கூட்டுறவுச் சங்க, தொழிற்சங்கக் கூட்டமாக அல்லது தூரப் பயணமாக இருக்கும். சாரம் வெறும் மேலோடு புறப்பட்டால் தோட்ட வேலையாக இருக்கும். சாரம் சேட் என்றால் அயல் அண்டையில் ஏதோ அலுவலாக இருக்கும். பட்டுவேட்டி, சேட், சால்வை என்றால் அது மங்கள கருமமாக இருக்கும்.

அண்ணர் ஒழுங்கையால் போகும் போது யாராவது பனங்குற்றியிலையோ, சிறுவர்கள் ஏறி இருந்து விளையாடினால் பொறுக்க மாட்டார். 'டேய் காசுக்கு வாங்கின மணலடா. கொட்டிச் சிந்தாமல் வேறை எங்கையேன் போய் விளையாடுங்கோ!' என்று விரட்டி விடுவார்.

தோட்ட வேலைகள், ஊர் வேலைகள் எல்லாம் முடிந்து அண்ணர் வீட்டுக்கு வந்தால் வீடு கலகலக்கும். 'பக்கத்தாலை போற ஹைரென்சன் கேபிள் வீட்டுக்கு முன் ஒழுங்கைக்கு மேலால் போவதால் அவரது வீட்டுக்கு கரண்ட் எடுப்பது சிரமமாக உள்ளது. பனைக்காரன் வீட்டில் படுக்கப் பாய் இல்லை என்ற மாதிரி வீட்டில் எப்போதும் மண்ணெண்ணெய் விளக்குத்தான். குளித்து, சுவாமி வணக்கம் முடிந்து, சாய்மனைக் கதிரைக்குள் சாய்வார். 'எங்க குஞ்சியைக் கொண்டா....' என்று குரல் கொடுப்பார். பின்



மக்களைக் கூப்பிடுவார். 'தம்பி என்ன படிக்கிறாய்? புத்தகத்தைக் கொண்டு வா. கூட்டல் கணக்குக் கொப்பியைக் கொண்டு வா!' என்று தனது பிள்ளைகளையும் கூப்பிட்டு தன்னைச் சுற்றி அமர வைப்பார். அவரவர் வகுப்புக்கு ஏற்ப வீட்டுப் பாடம் நடக்கும். தேவாரம், பொழிப்பு, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், திருக்குறள் எல்லாம் படிப்பிப்பார். திடீரென அமெரிக்காவின் ஜனாதிபதி யார்? இந்தியாவின் பிரதமர் யார்? தமிழில் எத்தனை எழுத்துக்கள்? உயிர் எத்தனை? மெய் எத்தனை, உயிர்மெய் எத்தனை? எட்டில மூன்று குறைஞ்சது? என்று பொது அறிவுக் கேள்விகள் கேட்பார்.

இரவுச் சாப்பாடும் ஒன்றாகத் தான் மண்டபத்தில் நடக்கும். நடுவில விளக்கு வைத்து எல்லோரும் வட்டமாக அமருவார்கள். அண்ணரின் மனைவி மிகுந்த பொறுமைசாலி. சூடாக எல்லோருக்கும் உணவு பரிமாறுவா. பின் தானும் கூட அமர்ந்து சாப்பிடுவார். குழைத்த சோறு என்டா அன்று இரவுச் சாப்பாடு விசேஷம் தான். அண்ணருக்கு அப்பப்ப மச்சம், மாமிசம், உறைப்பு, புளிப்பு சாப்பாட்டில இருக்க வேணும்.

சாப்பாடு முடிய பிள்ளைகளை இருத்தி வைத்து தவராசா அண்ணர் கதைகள் சொல்லுவார். அது அநேகமாக வரலாறு அரசர்கள், தலைவர்கள், ஞானிகள், சித்தர்கள் பற்றிய கதையாகத்தான் இருக்கும்.

(இன்னும் வருவார்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனிப்பு

அபிராமி

நாங்கள் இப்ப குடியிருக்கிறது தெகிவளையிலை. என்ரை வீட்டு முத்தத்திலை பெரியதொரு மாமரம் நிக்குது. அது நல்ல நிழல் பாருங்கோ. எங்கடை அயலட்டையிலையே முத்தத்திலை மரம் நிக்கிறதெண்டால் அது எங்கடை வீட்டிலைதான். இதாலை எங்கடை வீடும் குளு குளு எண்டு நல்ல குளிராயிருக்கும்.

இந்த மரம் பழ சீசனிலை நல்லாய்க் காய்ச்சுத் தள்ளும். காய் பச்சைப் புளி. பழுத்துப்போ அசல் இனிப்பு. ஆனால் மரம் பழுத்தால் அதை எங்களுக்குப் பிடுங்கத் தெரியாது. இங்கை உள்ள பிடுங்கிற ஆளைக் கூப்பிட்டுக் கூலிக்குப் பிடுங்கினால் அவன் பெரிய காயளாய்த் தங்களுக்கெடுப்பான். பிடுங்கின இலை பிலையே காயைப் ஒழிச்சாய் அரைவாசியை அங்கெங்கையேன் ஒழிச்சு வைப்பான். அல்லாட்டில் பிடுங்கின காயளைத் தங்களுக்கும் நிலை அடிபட்டு விழுந்த காயளை எங்களுக்குமாய்த் தருவான். பச்சைக் கள்ளன். இது என்ரை மனிசிக்குப் பெரும் குறை.

இந்தக் கள்ளன் இந்த மரத்திலை களவு களவாய் வந்து காயள் பிடுங்கிப் போறவன். இவன் எங்கடை வீட்டுக்காரியைக் கண்டால் சிலவேளை விலையும் சிலவேளை விலகாமலும் நிண்டு மாங்காயளைப் பிடுங்குவான். அந்த நேரம் அவனோடை எங்கடை வீட்டுக்காரர் மல்லுக்கட்டி அவனைத் துரத்திறதும் சில நாளையிலை தோத்தும் போகாமல் அவன் கொண்டந்த உரப்பையிலை காயை அவனை நிரப்பிக் கொண்டு போக விடுகிறதும் தான் எங்கடை வீட்டுக்காரி.

அதாலை அவனுக்கு மாங்காயளைப் பிடுங்கி விக்கிறதிலை உடன்பாடில்லை. அணில்லுகள், குருவியள், கிளியள், காகங்கள், மைனாக்கள், வெளவால்கள் எண்டு பல இனமும் பழச் சீசனிலை மரத்துக்கு வந்து போகும்.

மாங்காய் பிடுங்கட்டோமோ என ஆரும் மதிலடியில் கேட்டால் மரத்தின் அரைவாசிக் காயைப்பற்றியே மறந்து போய்க் குடுத்திடும் என்ரை மனிசி. ஆனால் ஆரும் களவெடுத்தால் கம்பை எடுத்துக் கொண்டு நிக்கும். இவ தன்னை ஆரும் ஒரு தூசி தன்னும் ஏமாத்தினால் அதைப் பற்றி அசிங்கம் அலட்டிக் கொள்ளுவ. அது ஆராயிருந்தாலுஞ் சரி. தனக்கு கீழ்ப்பட்டவராயிருக்கட்டும்: எந்தப் பெரிய கொம்பராயிருக்கட்டும். விட்டுக் கொடுக்கவே மாட்டா. உலகமை வேறு இடம் பாக்காதவ. சரி போற இடம் நல்லாயில் பாப்பா. மாங்காய் களவு போற நாளேலை என்ரை மனிசி நான் வேலையாலை வீட்டை வந்த உடனை இந்த களவு முறைப்பாட்டை எனக்குத் திருப்பிப் ஒப்படைக்கும் ஏதோ உலகமே பிரண்டதாய். அப்ப நான் சொல்லுறது, "இது அந்நிய ஊர். இங்கை நாங்கள் உதுக்கெல்லாம் பொல்லுத் தூக்கிக் கொண்டு நிக்கப்படாது. எல்லாத்தையும் அனுசரிச்சுப் போகவேணும்" எண்டு. ஆனால் மனிசிக்கு மாமரம் சீனுக்குச் சீன் இந்தப் பிரச்சனை நிரம்பவும்

■■ ஆனால் என்ரை மனிசி பெட்டையாய் இருக்கேக்கை எங்கடை ஒழுங்கைக்குள்ள ஒரு கோயிலுக்கு நல்ல தண்ணி அள்ள வாறது. அப்ப அந்தப் பெட்டையோடை அவையின்ரை குடும்ப வன்மத்தை வைச்சு என்ரை வயதுப் பொடியள் எல்லாரும் வலியக் கொழுவுவாங்கள். அதை என்னவோ பட்டப் பெயரும் சொல்லி நெளிப்பாங்கள். ■■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயமும் வந்திடும். சொல்லித் திருத்தேலாது. கள்ளனையும் தான், என்ரை மனிசியையும் தான். ஆனால் கள்ளன்கள் பாவங்கள் - அதுகள். ஏதோ வயித்துப் பாட்டுக்குத் தானே இதைப் பிடுங்கிக் கொண்டு போய்ச் சாப்பிடுதுகளோ என்னவோ எண்டது என்ரை நியாயம். ஏனெண்டால் நான் பள்ளிக்கூடத்திலை படிக்கேக்கை சின்னனிலை பசியிலை அடுத்தவன்ரை சாப்பாட்டுப் பெட்டிக்கை கையைவிட்டு களவாய் சாப்பிடுறனான் தானே.

இதிலை மனிசியைப் பிழை சொல்லவும் ஏலாது. ஏனெண்டால் அவை பெரிய வசதியான ஆக்கள். பழி எண்டால் என்ன எண்ட அனுபவமே இல்லாத ஆக்கள். அங்கை எனிலையே பெரிய கல்வீட்டிலை கதிரை மேசையிலை இருக்கிற ஆக்கள். கட்டிலிலை படுக்கிற ஆக்கள். படிச்ச ஆக்கள். பெரிய பெரிய புத்தகங்கள் எல்லாம் வீட்டிலையே அலுமாரிக்கை வைச்சிருக்கிற ஆக்கள். அவையிட்டை எப்பவும் வேலைக்காரர் வீட்டிலை இருப்பினம். பொதுவா வேலைக்காரர் எல்லாம் எட்டு மணித்தியாலம் வீடுகளிலை வேலை செய்தால் இதுகள் வீட்டு வேலைக்காரரோ பொழுதுபாக்க முதலிருந்து சாமம் இரவும் நிண்டு வேலை செய்யுங்கள். இவையிட்டை வேலை செய்யிற வேலைக்காரரை நாங்கள் கண்டால் "ஏன் இந்த வீட்டிலை உவ்வளவு நேரம் வேலை செய்யிறியள்? உவையை விட்டுப் போட்டு வேறை எங்கையும் போய் வேலை செய்யலாமே" எண்டு கேட்டால் "அது பறுவாயில்லை" எண்டு அந்த வேலைக்காரர் சொல்லுவினம். பரம்பரை பரம்பரையாய் அந்த வேலைக்காரர் அவையோடையே இருப்பினம். ஏன் இப்பிடி இந்த வேலைக்காரர் அவையோடையே இருக்கினம் எண்டது எனக்கு கன நாள் சந்தேகம். ஆனால் கூலியிலை என்ரை மனிசியின்ரை வீட்டாக்கள் மனசார வஞ்சகம் பண்ணாததுகள் எண்டு ஆக்கள் சொல்லக் கேள்வி.



ஊரிலை அவையின்ரை றோட்டாலை எங்கடை ஊராக்கள் ஆரும் போகேக்கை பயப்பிட்டுக் கொண்டு தான் போவினம். இது உண்மையோ எண்டு எங்கடை ஊரிலை ஆரையும் கேட்டால் "ஓமோம் அது உண்மை தான்" எண்டு சொல்லுவினம். சரியான சாதித்தடிப்பு பிடிச்சவை. ஊராக்கள் தங்கடை பாட்டிலை ஒதுங்கிப் போனாலும் வலியக் கூப்பிட்டு கதைகேட்டு அதுகளின்ரை மனதை நோகக்காட்டாமல் அனுப்பாதுகளாம். அதுகளின்ரை சின்னக் குழந்தையள் கூட கெட்டபாய் நிண்டு அந்த றோட்டாலை போற சின்னப்பிள்ளையளை கூப்பிட்டு நுள்ளாமல் அடிபோடாமல் விடாதுகளாம்.

எங்கடை வீடு அவையின்ரை றோட்டுக்கு முன்னுக்கு இருந்தபடியால் அவையின்ரை றோட்டாலை போற தேவை எங்கடை வீட்டாருக்கில்லை. இதாலை அவையைப் பற்றி ஊராக்கள் சொல்லுற கதையள் தான் எனக்குத் தெரியும். ஆனால் என்ரை மனிசி பெட்டையாய் இருக்கேக்கை எங்கடை ஒழுங்கைக்குள்ளை ஒரு கோயிலுக்கு நல்ல தண்ணி அள்ள வாறது. அப்ப அந்தப் பெட்டையோடை அவையின்ரை குடும்ப வன்மத்தை வைச்சு என்ரை வயதுப் பொடியள் எல்லாரும் வலியக் கொழுவுவாங்கள். அதை என்னவோ பட்டப்பெயர் சொல்லி நெளிப்பாங்கள். அதுகுமே விடாது. தனியா நிண்டும் வாய்காட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே இருக்கும். ஆக மிஞ்சினால் அவங்களுக்குத் தூப்பியும் போதும். ஆனால் நான் ஒண்டுமே வெளியிடேல்லை. எல்லாப் புதினத்தையும் பார்த்துக் கொண்டிருப்பன். பேந்து பொடியள் கூடியிருந்து அந்தப் பெட்டையின்ரை சிவப்பும் பிறையையும் கதைக்கேக்கை நான் அந்தப் பெட்டைக்காக அவங்களைச் சரி கண்டு கதைக்கிறது அவங்களுக்குப் பிடிக்கிறேல்லை. இப்பிடி நான் அந்தப் பெட்டைக்காக சப்போட் பண்ணுறது தொடர்ந்ததால என்னை அவங்கள் அந்தப் பெட்டையோடை சேர்த்து ''ஓகோ.. ஓகோ.. ஆ... ஆ... ஆ...'' என்று பகிடி பண்ணத் தொடங்கிவிட்டாங்கள்.

நான் இதை முதலிலை விளையாட்டாய் எடுத்தாலும் நாட் போக்கிலை எனக்குள்ளை ஒரு மாதிரியாய் மாதிரியாய் மாற்றம் வரத் தொடங்கிவிட்டுது. அப்ப என்ரை நெஞ்சு டிக்..டிக்..டிக் என்டு அடிக்கிறது எனக்குக் கேட்கும். என்ரை செயல்களிலையும் ஒரு மாற்றம். வகுப்பிலை அவவைப் பாத்துச் சிரிக்கிறன். முதல் ரண்டு முறை அவ என்னைக் கவனிக்காட்டாலும் பிறகு அவவும் என்ரை சிரிப்புக்குப் பதில் தாறா. நானும் அவவின்ரை வீட்டடியாலை அடிக்கடி போகத் தலைப்படுறன். அவவைப் பாக்கத் துடிக்கிறன். மற்றவங்களுக்கு அவவைக் கண்டால் புண்ணிலை புளி பட்டது போல இருக்கும். எனக்கு இன்ப மயக்கத்தை ஏற்படுத்திச்சுது.

அவவைப் பாக்க வேணும் போலை உள்ள துறுதுறுப்புக் கூடவே, ஒரு நாள் என்ரை விருப்பத்தை அவவிட்டை ஒரு மாதிரியாய் வெளிப்படுத்திவிட்டன். ஆனால் அவ மறுக்கிறா. அதன் பின் அவவின் சிரிப்பு நின்றுவிட்டுது. என்ரை ஒரு நல்ல கூட்டாளி சொன்னான். ''அவள் எங்க நீ எங்க. சாதிக்க ஏற்றதான் உறவு. அவளோ மேட்டுக்குடிக்காரி. நீ? நீ கொட்டிலுக்கை இருந்து கொண்டு அவளுக்கு ஆசைப்படலாமோ. பேசாமல் படி. உன்ரை வாழ்க்கையைப் பார்'' என்னுறான். ஆனால் என்னாலை அவவை மறக்க முடியேல்லை. புத்தகத்தைத் திறந்தால் அவ. கண் மூடினால் அவ. கண் திறந்தால் அவ என்டு ஒரே அவவின்ரை நினைப்புத் தொல்லை வர வரக் கூடிக்கொண்டே போச்சுது. எப்பிடியும் அவவை நான் கலியாணம் கட்டிப் போட வேணும் எண்ட என்ரை ஆசையாலை நான் மனதை ஒருநிலைப்படுத்திப் படிப்பாலை முன்னேறி வெல்ல நினைக்கிறன். படிப்பு, படிப்பு, படிப்பிலை வெற்றி, கம்பஸ், மேலான பதவி, எண்ட தொடர்பான அனுபவ முறையாலை அவவின்ரை மனம் கவிழலை வயிர்ச்சிட்டுது. என்ரை படிப்பாலை என்ர சாதிக்கட்டு, ஏற்கத்தக்கு என்னாலை உடைக்கப்பட்டு ரண்டு பேர் மனமும் ஒண்டானது. ஆனால் அவ என்னை விரும்பினது வகுப்பிலை உள்ள பொடியள் எல்லாம் தன்னோடை சண்டை பிடிக்க நான் மட்டும் தன்னோடை சண்டை பிடியாத ஒரு ஆள் எண்டதாலை எண்டா.

ஆனால் என்ட கலியாணத்திலை என்ரை பெற்றார் உற்றார் உறவர் சிநேகிதர் ஆருக்குமே விருப்பம் துளியளவும் இல்லை. தடிப்புப் பிடிச்ச கூட்டத்துக்கை போய் தலையைக் குடுக்கிறன் எண்டு. அதாலை நான் அவவில அளவு கடந்த விருப்பம் வைச்சிருந்தாலும் கலியாணத்துக்குப் பிறகு என்ரை வர்க்க நிலைப்பாட்டால் ஏற்பட்டுவிட்ட சிக்கல்கள் வரேக்கை அவவோடை வாய்த்தர்க்கம் செய்யிறது எண்டது என்ரை உணர்விலை பிரதானமாய் ஒன்றாய் போய் இருந்தது.

ஒரு சம்பவத்தை நான் சொல்லுறதெண்டால் உதாரணத்துக்கு என்ரை மனுசிக்கு பூக்களில கொள்ளை ஆசை. அவ ஆசை ஆசையாய் இரவில மல்லிகைப் பூக்களை ஆய்ந்து கொண்டு வந்து பெரிய பூச்சாடியில் தான் ரசிக்கிறதோடை என்ரை படுக்கையிலும் பூக்களை வைச்சு மணக்கச் சொல்லுவ. ஆனால் பூ பற்றி நான் கம்பசிலை படிக்கேக்கை என்ர சிநேகிதன் ஒருத்தன் தனக்கேற்பட்ட அனுபவத்தை சொல்லிறதிலை இருந்து எனக்குப் பூக்களைப் பிடிக்காது. அவன் மலையகத்தைச் சேர்ந்தவன். தோட்டத் துரையின்ரை பங்களாவிலை கனக்கப் பூக்கண்டுகள் வைச்சு விதம் விதமாய்க் கலர் கலராய் பூக்கள் பூத்திருக்குமாம். அதுகளை வேறை ஒருத்தருமே பிடுங்கக் கூடாதாம். அதுகள் துரைமாற்றை தேவைக்கு மட்டுந் தான் பயன்பட வேணுமாம். ஒரு முறை அந்த வீட்டு வேலைக்காரர் ஆரோ ஒருத்தர் தன்ரை தேவைக்கு கொஞ்சப் பூக்களைப் பிடுங்கிப் போட்டாராம். அண்டைக்குத் தோட்டத்தைப் பாக்க வந்த துரை பூக்கள் குறைஞ்சதை, அதை ஆராய்ஞ்சு கண்டுபிடிச்சு அதுக்குப் பொறுப்பான வேலையாளைப் பிடிச்சு அவன்ரை கவனக் குறைவாலதானே பூக்கள் களவு போனதெண்டு அவன்ரை முதுகுத் தோல் பிய்ய அடி அடியெண்டு அடிச்சாராம். அவன் ''தொரை, தொரை மன்னிச்சிடுங்க. தொரை இனிமேல் பிடுங்க விடவே மாட்டனுங்க. தொரை என்னை விட்டுடுங்க தொரை'' என்டு அவன் குழறக் குழற அவனுக்கு அடிச்சதை அவன் தன்ரை கண்ணாலை கண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளையிலிருந்து அவனுக்குப் பூக்களைக் குண்டடமே பிடுங்கப்படாது. அது கோயிலுக்கு வழக்கத்தினரின் ரசனைக்காகவே வளக்கப்படுவது என்டு அவன்ர எண்ணம். அதாலை அதைக் கேட்ட பிறகு அது என்னர எண்ணமாகவும் மாறிப் போச்சுது.

அதாலை நான் அவ ரசிப்பதைக் கண்டு கொண்டிருப்பன். ''எனக்குப் பூக்களில நாட்டமில்லை. அதை மணக்கச் சொல்லி என்னைத் திணிக்க வேண்டாம்'' என்டு மனிசிட்டை சொல்லியிருக்கிறன். ஆனால் அவ தான் ரசிக்கிற சந்தோசத்தை நானும் பெறவேணும் என்ட நோக்கில நான் வேண்டாம் வேண்டாம் என்ன அவ திரும்பத் திரும்ப என்ர மூக்கடியில் தன்ர மல்லிகைப் பூக் கைகளைக் கொண்டு கொண்டு வருவா. அப்படியான ஒரு நாள் நான் அந்த அரிகண்டம் தாங்க முடியாமல் பிடுங்கி எறிஞ்சிட்டன் அவவின்ர கையை. பூக்கள் எல்லாம் அப்பிடியே எல்லா இடமும் சிதறிப் போச்சுது. அவாக்கு முகம் சிவந்து போச்சுது. ஆனால் அதுக்குப் பிறகு ஒரு நாளும் அவ தான் பூவை மணந்தாலும் என்னை மணக்கும்படி கேக்கிறேல்லை.

எங்கடை வீட்டுக்கு வேலைக்காரரோ யாரோ ஆரும் வந்தால் அவையளை நடத்தையில வைக்க எப்பவுமே விருப்பு தெரியும். ஆனால் அவ தான் சரியாத்தான் நடப்பதாகச் சொல்லுவா. ஆள் ஆரையும் கண்கொண்டு பார்க்கமாட்டுது. அவ்வளவு திமிர். ஆரையும் எதிரும் புதிருமாகப் பார்க்க நேர்ந்தாலும் உடனை அதுபாட்டில வேலையைப் பார்க்கும். முகத்திற்கு முகம் பார்க்க நேர்ந்தால் அதுவும் வேலைக்காரரைக் கண்டால் தான் அவையைக் கண்டு கொண்டதாகவே காட்டிக் கொள்ளாது. ஆரோடையும் அளந்துதான் பழகும். ஆள் ஒரு மரம்.


இப்ப எங்கடை பக்கத்து வீட்டுக்காரரும் புதிசாய் வீடு கட்டிக் கொண்டிருக்கினம். இந்தாள் ஆரோடு மாதுமாய் அதிலை ஒரு மனிசர் நின்டு வேலை செய்யிறவையோ என்டு ஒருநாள் தன்னும் அவையைப் பார்த்து ஒரு முகமனுக்குத் தன்னும் சிரித்திராது. ஒருநாள் அந்த வீட்டு மேசன்மார் ஏதோ காரணத்துக்காக எங்கடை வளவுக்குள்ளை வந்து போனவை. இவ அந்த வேலைக்காரரின்ர முகத்தையும் பாக்கேல்லை. அவையளை நேரில கண்டதும் இவவின்ர கண்ணில இருந்து அவையள் மறைஞ்சு விடுவினம் தானே. அவ்வளவு வர்க்கத் திமிர்ப்பு. ரெண்டு நாளைக்குப் பிறகு இவ வெளியால போயிட்டு வரேக்கை அந்த வீட்டு வேலைக்காரனை நேரை கண்டிக்கை அவன்ர காலைப் பார்த்தவ அவன்ர காலிலை தன்ர புது பாட்டா சிலிப்பர் இருக்கிறதாய் உணருறா. உடனை வீட்டை வந்து தன்ர சிலிப்பர் இருக்கிற இடத்தைச் செக் பண்ணுறா. செருப்பு இல்லை. அங்கையும் இஞ்சையும் தேடுறா. செருப்பில்லை. உடனயே அவ அந்த வீட்டு வேலையாளின்ர காலைக் காட்டி அது 'தன்ர சிலிப்பர்' நீங்கள் எங்கடை வீட்டை வந்த இடத்திலை மாத்தி எடுத்திருக்கிறியள் போலை 'கவனிக்கேல்லை போல' என்டா. அவன் கழட்டிக் காட்டியபடி அது 'தன்ர செருப்பே' என்டான் சிரிச்சபடி. ஆனால் இவ மறுக்கிறா. அவையின்ர வீட்டுக்கு அடிச்ச பெயின்ற் நிறத் துளிகள் அந்த சிலிப்பரில ஒட்டி இருப்பதை ஆதாரம் காட்டுறா. இருந்தும் இவவின்ர கதை அங்கு எடுபடேல்லை. கடைசியா ''சரி சரி. இது என்ர செருப்புத்தான். ஆனால் நீயே வைச்சுக் கொள்'' என்டு அவனிட்டை சொல்லிப் போட்டு அங்காலை போயிட்டா.

பிறகு பக்கத்து வீட்டு உரிமைக்காரனிட்ட நடந்ததைச் சொல்லி அந்த வேலைக்காரனிட்டைக் 'கொஞ்சம் கவனமாக இருங்கோ' என்டு சொன்னா. பக்கத்து வீட்டுக்காரன் இவவின்ர கதையைச்


# தாயகம்
## ஆக்கங்களை வரவேற்கிறது

தாயகம் சஞ்சிகைக்கான சிறுகதை, கவிதை, கட்டுரை, நூல் அறிமுகம், அட்டைகளுக்கான ஓவியங்கள் ஆகியவற்றைப் படைப்பாளர்களிடமிருந்து வரவேற்கிறோம். ஆசிரியர் குழுவினரால் தகுதி கண்டு பிரசுரிக்கப்படும். ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி :-

| | |
|---|---|
| [illegible] | Editor, |
| பிரதம ஆசிரியர் | Thayakam |
| ஆடியபாதம் வீதி, | # 59/3, |
| கொக்குவில் | Waidya Road, |
| தொ.பே. 021 2223629 | Dehiwela |
| | T.P. 5021358, |
| | 2381603 |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவிக்கெடுக்கேல்லை.

ரெண்டு கிழமையால மீண்டும் அந்த வேலையாளைப் பற்றி அவ என்னட்ட "அவன் ஒரு கள்ளன். பின்னேரங்களிலை வேலை முடிஞ்ச பிறகு மட்டுமட்டுத் தெருத்திரிக்கு வேற ஆக்களைக் கூட்டிக் கொண்டு வாறான்" எண்டா. நான் அந்தக் கதையை நம்பி அந்த வீட்டு உரிமையாளருக்குத் தெரிவிப்பம் எண்டு அதைச் சொல்லுறன். என்ர மனுசியின்ர குடும்ப ஆக்களை, வேலையாக்களை மதிக்காத குடும்பம் எண்டதாலை இந்த விசயமும் பக்கத்து வீட்டுக்காரரின்ர செவிக்குள்ளை ஏறாமல் போச்சுது.

இன்னொருநாள் றோட்டிலை நிண்ட இன்னொரு பக்கத்து வீட்டுக்காறரின்ர காரின்ர கதவைத் திறக்க அந்த வேலையாள் தெற பண்ணுறதைத் தான் பாத்ததா என்னட்ட என்ர மனுசி சொல்லுறா. இதையும் நான் பக்கத்து வீட்டுக்காறரிடம் சொல்லவே அவர், "உங்கடை மனிசி தொடர்ந்தும் அந்த வேலைக்காறனைப் பற்றி ஒரே முறைப்பாடு குடுக்கிறா. அவவிட்டைச் சொல்லுங்கோ, சும்மா எங்கட அலுவல்களை அவ கவனிக்கத் தேவையில்லை எண்டு. அவங்களோடை பிரண்ட்லியா பேசுறது தங்களுக்கும் சரியான கவுரவம்" எண்டு சொன்னான். அதாலை நான் என்ர மனுசியைக் கடுமையாய் பேசிப் போட்டன். ஆனால் அவவுமோ விடாப்பிடியாய் தான் சொன்னது சரிதான் எண்டு வாதாடவே விவாதம் முத்தி ஆத்திரம் மேலிட அவவின்ர கன்னத்தைப் பொத்தி ஓங்கி அறைஞ்சு விட்டிட்டன் நான். அயலட்டைக்கை எங்களுக்கு பிரச்சினையை ஏற்படுத்தாதை எண்டு. அவ அழுது கொண்டு தாய் வீட்டை போயிட்டா.

அவவின்ர பரம்பரைத் திமிர். அவளுடையதைக் கண்ணிலை பட்டப்படாது. கொஞ்சம் படிக்கட்டும் எண்டிட்டு இருந்திட்டன். ஒரு நாள்.. ரெண்டு நாள்... ஒரு கிழமையாச்சு. அவளும் வரேல்லை. நானும் பேசாமல் இருந்திட்டன். எனக்கும் ஆத்திரம்.

ஆனால் ஒரு கிழமையாலை பக்கத்து வீட்டுப் பொடியன் விடியா விடியப் பாக்க வந்தவன் அரக்கப் பறக்க ஓடியாறான் என்னட்டை. "அண்ணை.. அண்ணை வாசலுக்கை அடுக்கி வைச்ச ரெண்டு மோட்டர்ப் பைக்குகள் ஒண்டையும் காணேல்லை. அந்த வேலைக்காறனையும் காணேல்லை கண்டனீங்களோ எண்டதையும்" எண்டு. எனக்குப் பொறி தட்டுது. நெஞ்சிலை ஒரு உதைப்பு. "ஓம் ஒரு லொறி இரவு நிண்டது தான். நான் நீங்கள் சாமான் இறக்கிறியளாக்கும் எண்டு இருந்திட்டன்"

எண்டு சொல்லுறன் குற்ற உணர்வுடன். என்ர மனிசி சொல்லச் சொல்ல அவளின்ர திமிரெண்டு எண்டு அவவின்ர கதையாலை உதாசீனம் செய்தது நெஞ்சுக்குள் குத்திக் குத்தி உறைக்குது.

இந்த நேரம் முந்தி ஒருக்கால் என்ர மனிசி எங்கடை வீட்டை வேலை செய்த பேசன்காரன் ஒருத்தனோடை அந்நியோன்யமாய் பழகின நாள் ஏனோதும் எனக்கு ஞாபகம் வருகுது.

ஒரு நாள் அந்த வேலைக்காறனை நம்பி வீட்டுத் திறப்பையும் அவனிட்டைக் குடுத்திட்டு வெளியிலை ஏதோ அலுவலாய் என்ர மனிசி போட்டுது. நான் வீட்டை வாறன். வேலைக்காறன் வேலை முடிச்சு வெளியாலை இருக்கிறான்.

"எங்கை வெளியாலை போட்டா" எண்டான். "நான் வேலை முடிஞ்ச இவ்வளவு நேரமும் திறப்புத்தாறதுக்கு நிண்டனீங்களோ" எண்டன். "இல்லை ஐயா. இப்பதான் வேலை முடிஞ்சது. இந்தாங்கோ ஐயா. திறப்பைப் பிடியுங்கோ. நான் போட்டு வாறன்" எண்டு திறப்பைத் தந்திட்டுப் போயிட்டான்.

எங்கையோ உறுத்தப்படுத்திக் கொண்டு வெளியிலை போட்டு வீட்டுக்கு வந்த மனிசிக்கு வேலையாளை இவ்வளவு நேரமும் வேலையை முடிக்க அனுப்பாததுக்காக வீட்டில களவு போயிருக்கும் எண்டு அவவுக்குப் புரியிற வேலைக்காறர் பாசையில நான் பேச வேண்டு பேசுறன். அவ தான் மகளின் பரிசளிப்பு விழாவுக்குப் போக வேண்டி இருந்ததால அவன்ர வேலை முடியாததால முக்கியமான நகை, காசு, பாங்க் புத்தகங்களை எடுத்துக் கொண்டு தான் போனனெண்டா. "வேற ஏதும் களவு போச்சுதோ பாருங்கோ" எண்டன். அவ "இல்லை அவன் ஒண்டும் எடுக்கிறான்" எண்டு சொல்லுறா.

"என்ன நம்பிக்கையிலை?" எண்டு நான் கேட்க "ஒரு நம்பிக்கையில தான்" எண்டா.

ஆனால் அவன் வேலை செய்யிற நாளுகள் பேசின ஒப்பந்தத்திலும் விட தொடர்ந்தும் அதிகரிச்சதாலை இவ ஆரும் வேலைக்காறருடன் அதிகம் பழகாதவ இந்த வேலையாளுடன் கூடப் பழகுவது அவவின் மேல் ஒரு சந்தேகத்தை எனக்கு ஏற்படுத்தவே ஒரு நாள் "எடியே என்னடி அவனிலை மயங்கிப் போய் நிக்கிறாய். அவன் வீட்டுச் சாமானுகளைத் தூக்கிக் கொண்டு ஆக்களையும் சாக்கொண்டு போட்டுப் போகப் போறானடி. இல்லாட்டில் வீட்டின்ர இருப்புத் திட்டங்களைப் பாத்து ஒரு நாளைக்குப் பிள்ளையளையோ கடத்திக் கொண்டு போய் காசு

வேலைப் பொறானடி" எண்டு அவளைக் கொஞ்சம் கடைப் பேசி வெருட்டிறன். அவ பயந்திட்டா. இரண்டு நாளிலை வேலையளை படபடவெண்டு முடிச்சு "முடியாததை இப்ப செய்யத் தேவையில்லை. பேந்து பாக்கலாம்" எண்டு சொல்லி அவளை வேலைபால அனுப்புறா. அவ அந்த வேலையாளிடம் போட்ட கணக்கும் பக்கத்து வீட்டு செருப்புக் கள்ளனின் அக்கதையில் போட்ட கணக்கும் பிழைச்சுப்போன என்ர கவ்வர உள்ளுணர்வை நெருடுது.

அவ பரம்பரைப் பணக்காரி எண்டாலும் இதய சுத்தம் உள்ள ஆள். என்னைவிட ஆக்களை அளக்கிறதிலை அவ சரியாத்தான் செயற்படுறா எண்டதை நான் செருப்புக் கள்ளனின் பெருங் கொள்ளை முயற்சியிலிருந்து தெரிஞ்சு கொள்ளுறன். இருபத்தைந்து வருஷம் அவவோடை சேர்ந்து வாழ்ந்தும் இவவை வேலையாட்களிடம் இரக்கமில்லாதவ எண்டு தப்புக் கணக்குப் போட்டனே. ஊராக்களை உறவுகளை அறிந்து வைச்சிருக்கிற நான் கல்யாணம் கட்டேக்கை நண்பர்கள் அவவைத் திமிர்க்காரி எண்டு சொல்ல கருத்தை எப்படியோ நானும் இவ்வளவு காலமும் சரி எண்டு வைச்சிருந்தது. சரியா வெட்கமா கொஞ்சமும் நான் வைக்குள்ளை எழும்புறன். அடுத்த நிமிசம் என் வெக்கத்தைவிட்டு நான் அவ வீட்டுக் கேற்றடியிலை. கோகுலன்னம் எங்கட வீட்டு முற்றத்தில அவவில்லாமல் தேடுவாரில்லாமல் பூத்துக்கிடந்த அவ மணம் வாங்கி மகிழுகிற மலர் வைக்கும் அவவின்ர மல்லிகையிலை கை நிறைய மொட்டுக்களைப் பிடுங்கிக் கொண்டு அவவின்ர குணத்தில மயங்கி அவவுக்குக் குடுக்கப் பறந்தன் அவவின்ர காலடி தேடி.

---

கூட்டாக சேர்ந்து
இயங்க மறுக்கும் நாம்
தனிமனிதர்களாக
விதைக்கப்பட்ட
கருத்தியல்களைப்
'பொறுக்கிக் கொள்கிறோம்'
வெறும் இலைகளில்
ஒன்றாய் இருந்து கொண்டு
தன்னை மட்டும்
பருகப்பண்ணி
பழுத்துப் பின்
உதிர்ந்தும் போகிறோம்.
எம் நரம்புகள் -
அழுகி விழுவதற்காக
உருவாகவில்லை என
நம்ப மறுக்கும் நாம்
அவை அதற்காகவே
படைக்கப்பட்டதாக
கருதிக் கொள்கிறோம்.
'நட்டவன்' ஊற்றும்
துளிநீருக்காய்ச்
காத்திருக்கத் தயாராகவிருக்கும் நாம்
பட்டுப் போகும் தருவாயிற்கூட
ஒன்றாகிக் கரந் தூக்க மாட்டோம்.
ஏனென்றால் எம்மில்
சிவப்பாகவிருப்பது
உதிரம் மட்டும்தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைக்காரன் சோதிடம்

புவன ஈஸ்வரன்



முந்தின காலத்திலை பஞ்சாங்கப்பலிலை ஒண்டு தொடக்கம் தொண்ணூற்றொன்பது மட்டும் இலக்கங்களைத் தாறுமாறா ஒரு நாலு மூலைப்பட்ட வடிவமாச் சதுரங்களுக்கை அச்சடிச்சு இருப்பினம். ஆராவது சின்னப் பிள்ளை ஒண்டைப் பிடிச்சுக் கண்ணை மூடிக் கொண்டு அதிலை ஏதாவது தொடு எண்டு சொல்லுவினம். ஒவ்வொரு இலக்கத்துக்கும் எழுதியிருக்கும் தொட்டதுக்கான பலனை வாசிப்பினை. நினைச்ச காரியம் சரி வருமா எண்டு பாக்கத்தான் இதெல்லாம். நினைச்ச பலன் இல்லாவிட்டால் இன்னொரு தரம் தொடு பாப்பம் எண்டு மூண்டு தரம் தொடுவிச்சுப் பாப்பினம். இப்ப அரசாங்கங்களும் மாறி மாறிக் கொமிசன் நியமிச்சுத் தாங்கள் விரும்பின மாதிரி ஒரு முடிவை எடுக்கிற மாதிரி எண்டு வைச்சுக் கொள்ளுவம்.

எங்கடை அடுத்த வளவிலை இருக்கிற பாறுவதி மாமிக்குப் பல்லி சொல்லுறதிலை தான் கூட நம்பிக்கை. மனிசர் ஏமாத்திப் போடுவினம் பல்லி ஏமாத்தாது எண்டு நினைக்கிறா எண்டு தான் விளங்குது. எத்தினை தரம் பல்லி சொல்லுக்குப் பலன் பாத்தாலும் மாமிக்கு அதை ஒருக்காப் பஞ்சாங்கத்திலை பாத்தாத்தான் திருப்தி. இந்தப் பல்லிச் சாத்திரியாரும் மற்றச் சாத்திரியார் மாதிரித்தான். எல்லாருக்கும் பலன் சொல்லுவினை. ஆனால் தங்களுக்கு என்ன நடக்குமெண்டு தெரியாது. வீட்டிலை எத்தினையோ பல்லியள் கதவைச் சாத்தேக்கை அப்பிட்டுச் செத்திருக்குது. சிலது "வாலோடை போனது வைரவர் புண்ணியம்" எண்டு தப்பியும் இருக்குது.

இந்த மாதிரி எங்கடை சனம் எத்தினை மாதிரிச் சாத்திரம் எல்லாம் வைச்சிருக்குது. எண்டாலும் ஓ.எல்., ஏ.எல். சோதினையிலை என்ன கேள்வி வரும் எண்டு சொல்ல ஒண்டும் இல்லையோ. சில ரியூட்டறிக்காரர் எண்டாச் சில பாடங்களுக்கு அச்சொட்டாச் சொல்லிப் போடுவினை. அதுவேறை விளையாட்டு. சரி, இந்த மாதிரிக் கேள்வி வருமா வராதா எண்டு சொல்லுறதுக்கேனும் ஒரு சாத்திரம் வேணாமோ?

எங்கடை ஆக்களெல்லாம் குளிர்பிரதேச ஊர் எல்லாம் போய்க் குடியேறி இருக்கினம். அங்கினை வீடுகளுக்கை பல்லியள் இராது. அப்ப எப்படிப் பலன் பாப்பினை? அதோடை அங்கை வளருகிற பிள்ளைகள் இந்தப் பஞ்சாங்கத்திலை இலக்கத்தைத் தொடெண்டு தேப்பன் சொன்னா "டோண்ட் பீ சில்லி டாட்" எண்டு சொல்லிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டுப் போயிடுங்களாம்.

அப்ப நினைச்ச காரியம் சரிவருமா எண்டு பாக்கிறதுக்கு அவையக்கு என்ன வழி எண்டு யோசிச்சன். வெள்ளைக்காரருக்கு எல்லாத் தையும் கண்டு பிடிச்சுக் குடுத்தது தமிழர் தான் எண்டு எங்கடை தமிழ்ப் பேப்பர்களிலை எல்லாரும் சொல்லுறவினை. அப்பிடியெண்டால் ஏன் அவையக்கு இன்னுஞ் சகுனம் பாக்கத் தெரியாமல் இருக்குது எண்டு விளங்கேல்லை. அவைக்கு விஞ்ஞானம் மெத்தப் போனதாலை கடவுள் பயம் எல்லாம் இல்லாமல் போன மாதிரிச் சோதிடம் சகுனம் எல்லாம் இல்லை எண்டு தான் நினைச்சன்.

அவையிட்டுள்ளையும் பொழுது போக்குச் சோதிடம் பாக்கிறவை இருக்கினம். ஒவ்வொண்டாச் சில பேப்பர் வழிய ஒழுங்கா ராசி பலன் வருகுது. எண்டாலும் எங்கடை ஆக்கள் மாதிரி நுணுக்கமாச் சாத்திரிமாரிட்டைப் போய்க் குறிப்பெல்லாம் எழுதாயினம்.

கொஞ்சம் மனக் குழப்பமாயிருந்தா ராசி பலன் பாப்பினை போலை. அது மாதிரி நல்ல சந்தோசமா இருந்தாலும் பாப்பினை. எண்டாலும் ராசி பலனில படி ஒண்டுஞ் செய்யாயினை. புத்தியுள்ள சனந் தான் எண்டு நினைச்சன். பிறகு கேள்விப்பட்டன். கொஞ்சக் காலம் முந்தி ஆட்சியிலை பிரதம மந்திரியாய் இருந்தாவே தச்சர் அம்மா அவவும் பின்னுக்குப் பின்னுக்குச் சாத்திரிமாரிட்டைப் பலன் கேக்கிறவ எண்டு பேசிக்கிச்சினை. சாத்திரிமாராலை அவவின்ரை அதிகாரம் போகாமை நிப்பாட்ட ஏன் ஏலாமல் போச்செண்டு இங்கை சிலபேரிட்டை விசாரிச்சன். அது அங்கை நல்ல சாத்திரிமார் இல்லாததாலை எண்டு விளங்கப்படுத்தினம்.

நோண்டி நோண்டிக் கொஞ்சம் விசாரிச்சுக் கண்டு பிடிச்சன். அவை வேறை வேறை மாதிரிப் பல சாத்திரங்களும் பாப்பினையாம். சீனச் சாத்திரம், கைரேகை எண்டு பலமாதிரிச் சாத்திரமும் பாப்பினை. எண்டாலும் நியூமெறோலஜி பாராயினை. இங்கை எங்கடை ஆக்கள் சோதிடத்திலை தவறினாப் பேரை வேறை மாதிரி எழுத்துக் கூட்டுவினை. வேலை கிடையாவிட்டால் இன்னெழுத்துக்கா மாத்துவினை. விரும்பின ஆளைக் கலியாணஞ் செய்ய யோசிக்க மறு பகுதி விரும்பாவிட்டாப் பேரை மாத்துவினை. கன சிலபேர் தங்கடை பேரென்ன எண்டே தெரியாமல் போயிடும். சிலபேர் கல்கிச் சாமி, குருதம் சாமி எண்டு ஆரையின்டையோ தலையையோ செருப்பையோ படம் வைச்சுக் கும்பிடுவினை. கும்பிட்டும் ஒண்டுஞ் சரி வாற மாதிரித் தெரியேல்லை. இவ்வளவு லேசா வேலை முடியுமெண்டா ஏன் இந்த நாட்டிலை இன்னுஞ் சண்டையை நிப்பாட்ட ஏலேல்லை?

வெள்ளைக்காறர் எப்பிடி எங்களுக்கை மண்டையை மூட்டிப் போட்டுத் தாங்கள் தனலா இருந்து முசுப்பாத்தி பாக்கினம் எண்டு யோசிச்சுப் பாத்தன். ஏதோ ரகசியம் வைச்சிருக்கிறாங்கள் எண்டு தான் பட்டுது. எப்பிடி அறிகிறது எண்டு தான் விளங்கேல்லை.

சிலகாலங் கழிச்சுப் பிரான்சுக்கு அகதியாப் போய் ஊர் பாக்கத் திரும்பி வந்த பழைய பெட்டாளி மகேசனைச் சந்திச்சன். அவனுக்கு அந்த ஊர்ச் சாத்திரம் எல்லாம் நல்லாய்த் தெரியும். நான் ஒண்டுங் கேக்காமலே அவன் என்னட்டை பிரெஞ்சுக்காறன்டை சாத்திரம் தெரியுமா எண்டு கேட்டான். தெரியாது எண்டன். பார் உனக்குப் பலன் சொல்லுறன் எண்டான். பொக்கற்றுக்குள்ளை இருந்து ஒரு சீட்டுக் கட்டை எடுத்தான். வடிவான பெட்டியிலை தரமா இருந்தது.

இதென்னவோ எங்கடை பஞ்சாங்கங் களிலை இலக்கங்களை வைச்சுப் பலன் சொல்லிற விளையாட்டு மாதிரி எண்டு நினைச்சதோடை மகேசனிட்டைச் சொல்லியும் போட்டன். சின்னனிலையோ அவனுக்குக் கொஞ்சம் கொதிப்பெண்டு கோவம் வரும். "போடா போ. உனக்கு இதெல்லாம் விளங்காது" எண்டு சொல்லிச் சீட்டுக் கட்டைத் திருப்பிப் பொக்கற்றுக்குள்ளை வைச்சுக் கொண்டு கிளம்பி விட்டான்.

அவனுக்குத் துருத்தி பண்ணிச் சமாளிச்ச அனாவிடை சீட்டுக் கட்டுச் சோதிடங் கேக்கிறதுக்குள்ளை களைச்சுப் போயிட்டன். அந்தக் கதையை இங்கை சொல்லிறதெண்டாக் கனக்க எழுத வேணும். அடுத்த முறை சொல்லிறன். அது மட்டுமில்லை. நான் கொஞ்சக் காலமாச் சீட்டுக் கட்டுச் சோதிடராக் கொடிகட்டிப் பறந்த கதையுஞ் சொல்லுறன். பொறுமையா இருங்கோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுணர்ச்சி

இளங்கீரன்

ஒரு நாட்டின் மொழி, இலக்கியம், கலை, கலாசாரம் அனைத்தின் வளர்ச்சியும் தேய்வும் அந்நாட்டின் தேசிய நிலைமைகளைப் பொறுத்து இருக்கின்றன. இவ்வாறுதான் சரித்திரம் நமக்குக் கூறுகிறது.

சென்ற இரண்டு நூற்றாண்டுகளாகத் தமிழ்நாடு அந்நியருக்கு அடிமைப்பட்டிருந்த காரணத்தால் அந்நாட்டின் மொழி, இலக்கியம், கலை, கலாசாரம் அனைத்தும் வளர்ச்சி குன்றியும், தேங்கியும், தேய்ந்துமிருந்தன. காலப் போக்கில் தேசிய நிலைமைகளில் மாறுதல்கள் ஏற்படத் துவங்கிய போது - அதாவது தேசிய உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட அரசியல் உணர்வும், விடுதலை வேட்கையும் பெருக்கெடுத்துச் சுதந்திரப் போராட்ட வீறுடன் புடைத்தெழுந்து செயற்படத் துவங்கிய போது அதை ஒட்டி, மொழி, கலை, இலக்கியம், கலாசாரம் ஆகிய துறைகளில் தமிழுணர்ச்சியும் பரவலாக அடிநிலைக் கிளைத்துச் செழித்தது. தமிழ் நாட்டில் தோன்றிய விழிப்புற்ற தமிழ் உணர்ச்சி இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் மத்தியிலும் எதிரொலிக்கச் செய்தது. எனினும், இத் தமிழ் உணர்ச்சி தமிழ் நாட்டில் செயற்பட்ட அளவுக்கு வேகத்திற்கும் தாக்கிற்கும் ஏற்ப இங்கு செயற்படவில்லை. கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால், தமிழ் நாட்டில் தேசியப் போராட்டம் ஒரு பொதுஜன சக்தியாக - போராட்டமாக - கிளர்ந்தெழுந்ததைப் போன்று தமிழ் உணர்ச்சியும் ஒரு பொதுஜன சக்தியாகக் கிளர்ந்தெழுந்தது. ஆனால், இலங்கையில் தமிழ் உணர்ச்சி பொதுஜன சக்தியாகக் கிளர்ந்தெழவில்லை. இதற்குக் காரணம், 1948ம் ஆண்டுவரை நாட்டுப்பற்றை - தேசிய உணர்ச்சியைத் - தூண்டக்கூடிய மாறுதல்கள் தேசிய நிலைமைகளில் தோன்றாததுதான். சுதந்திர தாகமும், தேசிய உணர்ச்சியும் நம் நாட்டில் புதிதாகத் தோன்றிய சில வளரும் வர்க்கங்களைப் பிரதிபலிக்கும் முற்போக்கு சக்திகளிடத்தில் ஓரளவு இருந்ததென்றாலும் அவை நம் நாட்டின் சகல ஜனப்பகுதிகளிலும் - மேல் மட்டத்திலிருந்து கீழ்தளம் வரையிலும் - பரவலாக ஊடுருவி நிற்கவில்லை. எனவே, நம்நாட்டில் சுதந்திர உணர்ச்சி ஒரு தேசியப் போராட்டமாகப் பொங்கிப் பிரவாகிக்கவில்லை. அதை ஒட்டி, மொழி, இலக்கியம், கலை, கலாசாரத் துறைகளில் மேவி நிற்கும் தமிழ் உணர்ச்சியும் பொங்கிப் பிரவாகிக்கவில்லை.

1948ம் ஆண்டு அந்நியர் ஆட்சி அகன்றதிலிருந்து ஈழத்தின் தேசிய நிலைமைகளில், அதாவது அரசியல் பொருளாதார துறைகளில், மாற்றங்கள் ஏற்படத் துவங்கின. இந்த மாற்றங்கள் தமிழ் மக்களின் வாழ்க்கையை - அதன் ஸ்திர நிலையை - மெல்ல மெல்ல, சில சமயங்களில் வேகமாகவும் பாதிக்கச் செய்தன. இதைத் தடுத்து நிறுத்த அரசியல் இயக்கத்தை நடத்த வேண்டியிருந்தது. இந்த அரசியல் இயக்கத்தை உரமூட்டி வளர்க்கத் தமிழ் உணர்ச்சியையும் தூண்ட வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. தூண்டப்பட்ட தமிழ் உணர்ச்சி இன்று மொழி, இலக்கியம், கலை, கலாச்சாரம் ஆகிய துறைகளில் பரவலாக ஆனால் மேலெழுந்தவாரியாக படர்ந்து நிற்கிறது; வளர்ந்தும் வருகிறது. ஆனால் இந்த வளர்ச்சி உண்மையானதா? ஆரோக்கியமானதா?

## போலியான தமிழ் வளர்ச்சி

தமிழ் உணர்ச்சியின் இன்றைய ஆர்ப்பாட்டத்தையும், அதன் பளபளப்பையும் பார்க்கும் போது அதன் வளர்ச்சி ஆரோக்கியமானதைப் போன்றுதான் தெரிகிறது. ஆனால் மேலெழுந்தவாரியாகப் பார்க்காமல் ஆழமாகப் பரிசீலனை செய்து பார்க்கிறபோது உண்மை வேறு விதமாயிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்பார்வைக்கு ஏதோ வளர்ச்சி பெற்றிருப்பதைப் போல் தோற்றமளித்துக் கொண்டிருக்கும் இத் தமிழ் உணர்ச்சி ஆக்கத் துறைகளில் என்னென்ன சாதனைகளைச் செய்து முடித்திருக்கிறது. தமிழ் மக்களின் கருத்தோட்டத்தை எந்த அளவுக்குப் புதிய திசையில் மாற்றியிருக்கிறது. எந்த அளவுக்கு நவீன சிந்தனையை உருவாக்கியிருக்கிறது என்று பார்க்கும் போது ''குறிப்பிடத்தக்கது ஒன்றுமே இல்லை'' என்று கையை விரித்து உதட்டைப் பிதுக்க வேண்டியிருக்கிறது. கடலலைகளைப் போல பேரிரைச்சலுடன் காணப்படும் நமது தமிழ் உணர்ச்சி வெறும் கோட்டு வேளையாகத் தான் இருந்து வருகிறது. மேளம் கொட்டி முடிந்ததும் அதன் நாதம் காற்றோடு காற்றாய் கரைந்து விடுவது போல தமிழ் உணர்ச்சியும் விழாக்கள், மாநாடுகள், பொதுக் கூட்டங்கள், மலர் வெளியீடுகள் முதலியவற்றோடு கரைந்து விடுகிறது. எனவே, இப்போது காணப்படும் தமிழ் உணர்ச்சியின் வளர்ச்சி உண்மையான - ஆரோக்கியமான - ஆக்கத்துறைகளில் ஈடுபடக் கூடிய செயல் திறனுள்ள வளர்ச்சியாக இல்லை. அது வெறுமையாக உப்பியிருக்கிறது. வீங்கியிருக்கிறது என்பது தெளிவாகிறது.

தமிழ் உணர்ச்சி வளர்ச்சி இல்லாது போலியாக இருப்பதற்குக் காரணம் என்ன?

தமிழ் நாட்டில் தமிழ் உணர்ச்சி ஆரம்பத்திலிருந்து இன்று வரை ஆரோக்கியத்தோடும், ஓரளவு ஆக்கத்துறையில் ஈடுபட்டிருப்பதற்கும் காரணம் அவ்வுணர்ச்சி தேசபக்தியில் வேர்கொண்டிருப்பது தான். அங்குள்ள தமிழ் மக்கள் தமது தாய்மொழியின் மேலும், தமது சொந்தக் கலை, இலக்கியம், கலாசாரம் முதலியவற்றின் மேலும் வைத்துள்ள அழியாத பற்றைப் போலவே முழு தேசத்தின் மேலும் பற்று வைத்திருக்கிறார்கள். நாம் பிறந்து வாழும் தாய்த் திருநாடு பல துறைகளிலும் முன்னேற வேண்டும். அதன் மூலம் தான் நமது வாழ்வும் வாழ்வோடு இயங்குகிற மொழியும் கலையும் இலக்கியமும் சிறப்போடு வளர முடியும் என்ற உணர்வு இருந்து வருகிறது.

## தேசியத் தன்மையற்ற தமிழுணர்ச்சி

இங்கே -

தமிழ் மக்களிடத்தில் பரந்து காணப்படும் தமிழ் உணர்ச்சியில் தேசியத் தன்மையின் ஒரு துளி குறும்பையாவது பார்க்க முடியவில்லை. தமது மொழியின் மேலும் இலக்கியத்தின் மேலும் கலையின் மேலும் உள்ள பற்றும் பிடிப்பும் தாம் பிறந்து வாழும் இந்த ஈழத் திருநாட்டின் மேல் இல்லை. சுருக்கமாகச் சொன்னால் இந்த மரகத மணித்திரு நாடுதான் நமது தாயகமென்ற தேசிய உணர்ச்சி இல்லவேயில்லை. இதுவரையிலும் இந் நாட்டுத் தமிழ் மக்கள் தமிழ் நாட்டைத் தான் தாயகமாகக் கருதி வருகிறார்களே தவிர நாம் பிறந்து வளர்ந்து வாழும் இப்பொன்னாட்டைத் தாயகமாகக் கருதவில்லை. (இந் நாட்டைச் சேய்நாடு என்று அழைக்கிறார்கள்). இந்தப் போக்கின் விளைவால் தான் தமிழ் உணர்ச்சிக்குச் சரியான அடிப்படை ஏற்பட முடியவில்லை. இந்த நிலை ஏன்?

மேலே குறிப்பிட்டது போல அரசியல் இயக்கத்தால் தூண்டப்பட்ட தமிழ் உணர்ச்சி அந்த அரசியலின் போக்கை ஒட்டியே வளர வேண்டியிருக்கிறது; வளர்ந்தும் வருகிறது. அரசியல் இயக்கமோ இனப்பற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. எனவே, தமிழ் உணர்ச்சியும் நாட்டுப்பற்றை அடிப்படையாகக் கொள்ளாமல் இன உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இவ்வாறு கூறுவதால் இனப்பற்று இருக்கக் கூடாது என்பது அர்த்தமல்ல. தமிழ் உணர்ச்சி இனப்பற்றையும் தாண்டி தேசியத் தளத்தில் வேர் கொள்ள வேண்டும். அவ்விதம் வேர் கொள்வதன் மூலம் தமிழ் உணர்ச்சி முறையாக ஆரோக்கியமாக வளர முடியும். அப்படியானால் தமிழ் உணர்ச்சிக்குப் பின்னணியாக - தூண்டுகோலாக -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருக்கும் அரசியல் இயக்கமும் தேசிய அடிப்படையில் இயங்க வேண்டுமல்லவா? என்று கேள்வி எழுகிறது. ஆம். சுருங்கச் சொன்னால் தமிழ் மக்களின் அரசியல் இயக்கம் தேசிய அடிப்படையில் வேர் கொள்வதன் மூலம் தான் தமிழ் உணர்ச்சியும் வேர் கொள்ள முடியும் வேர் கொள்ளவும் வேண்டும்.

இந்த அடிப்படை உண்மை இன்னும் உணரப்படவில்லை. ஒருவேளை உணரப்பட்டிருந்தாலும் அது மறைக்கப்படுகிறது அல்லது மறக்கப்படுகிறது. அது மட்டுமல்லாமல், அதற்கு எதிராக தவறான முறையில் தமிழ் உணர்ச்சி வளர்க்கப்படுகிறது. உதாரணத்திற்கு மொழியின்மேல் உள்ள தமிழ் உணர்ச்சியை எடுத்துக் கொள்வோம்.

இன்று தமிழ் மக்கள் மத்தியில் மொழி உணர்ச்சி 'பிரவாகம்' எடுத்து ஓடுகிறது. "தமிழ்! தமிழ்! தமிழின்றேல் தமிழரில்லை" என்ற முழக்கம் கேட்கிறது. தமிழைப் போல் பிறிதொரு மொழியில்லை! தமிழ் ஆதிசிவன் வாய்மொழி! கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த தமிழ்! எல்லாம் இதன் பாலுள! இதில் இல்லாதது வேறில்லை! தமிழ். அமுதினை விட மேலானது! - இவ்வாறெல்லாம் பேசப்படுகிறது; எழுதப்படுகிறது.

## குருட்டுப் பக்தி மொழியை வளர்க்காது

மொழிப்பற்று இருக்க வேண்டியது அவசியம். அம் மொழிப் பற்று யதார்த்தபூர்வமான - விஞ்ஞானரீதியான - உண்மையைத் தழுவிய தெளிவான கருத்தோட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் மேற்கூறிய புகழுரைகள் தமிழ் மொழியை புனிதமான அந்தஸ்தில் - பூஜைக்குரிய நிலையில் - கடவுளின் ஸ்தானத்தில் - கொண்டு போய் நிறுத்தியுள்ளன. எனவேதான், தமிழ் மக்கள் மொழியைத் தவிர வேறு எதையும் முதன்மைப்படுத்திச் சிந்திக்க மறுக்கிறார்கள். இந்த நிலையும், இந்தக் கருத்தோட்டங்களும் விஞ்ஞான உண்மையைப் புறக்கணிப்பதோடு, தமிழ் மக்களை நவீன சிந்தனையோட்டங்களிலிருந்தும் அதாவது விஞ்ஞான ரீதியில் சிந்திப்பதிலிருந்தும் திசை திருப்பி விட்டிருக்கின்றன. எனவே தான் மொழிப்பற்று குருட்டுப் பக்தியாக உருவெடுத்து நிற்கிறது.

மொழி சுயமாக இயங்க முடியாது. அதற்கு வடிவமும், பொருளும், செயலும் தேவை. இந்த மூன்றுங்கான் மொழியை உருவாக்குகின்றன. இயங்கச் செய்கின்றன. இவை மூன்றும் இல்லாவிட்டால் அது வெற்று ஓசைதான். ஓசை மொழியாகா? ஆனால் தமிழுக்கு அளிக்கப்படும் "சிறப்புரைகள்" தமிழ்மொழி ஏதோ மனித சக்திக்கு அப்பால் தனித்து நின்று சுத்த சுயம்பிரகாசமாய் இயங்கும் தன்மை பெற்றது என்ற பொருளைத் தருகின்றன. மனிதன் இல்லாமல் கூட மொழி இருக்க முடியும், இயங்க முடியும் என்ற முடிவுக்குக் கொண்டு செல்லும் இவ்வாதம் மனித அறிவைக் கேலி செய்யவில்லையா? தமிழின்றேல் தமிழரில்லை என்ற வாதம் மொழி தான் மனிதனைச் சிருஷ்டித்தது என்ற முடிவுக்குக் கொண்டு போய் விட்டதா? இந்த வாதம் தொப்பியின்றேல் தலையில்லை என்ற பொருளற்ற முட்டுவாதத்தில் கொண்டு நிறுத்தாதா?

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த தமிழ் என்று கூறப்படுகிறது. இது உண்மையல்ல. கல்லும் மண்ணும் தோன்றியதற்குப் பின் மனிதன் தோன்றினான். மனிதன் தோன்றிய பிறகு தான் மொழி தோன்றியது. மனிதன் தோன்றுவதற்கு முன்பு மொழி தோன்றியது என்ற வாதம் தாய் தந்தையருக்கு முன்பு மகன் தோன்றினான்; தலைக்கு முந்தி தொப்பி தோன்றியது என்ற முறையைத் தள்ளிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் அது அல்ல. அவ்விதம் விவாதிக்கவுமில்லை. இது உண்மையல்ல என்பதும் தெரியும். ஆனால் தமிழின் தொன்மையைச் சுட்டிக் காட்டத்தான் இவ்வாறு மிகைப்படக் கூறப்படுகிறது என்பதும் எனக்குப் புரிகிறது! ஆனால் இவ்வாறெல்லாம் நான் ஏன் குறிப்பிட வேண்டுமென்றால் மொழி உணர்ச்சி எவ்வாறு வளர்க்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டத்தான். நமது தமிழ் மக்களின் தாய் மொழி ஞானம் திசைதவறிப் போகிறதே என்பதை அறிவுறுத்தத்தான்.

மொழி கருத்தை வெளியிடும் ஒரு சாதனம். மனிதன் தோன்றிய பிறகு மனிதனால் சிருஷ்டிக்கப்பட்டுப் படிப்படியான ரீதியில் வளர்ந்த ஒரு சாதனம். தமிழ் மொழியும் அவ்வாறான சாதனம் தான். எனவே, அதைப் பூஜைக்குரியதாகவோ, புனிதத் தன்மை படைத்ததாகவோ கருதக்கூடாது. அதற்கு 'ஸ்தோத்திரம்' பண்ணி அஜீரணத்தை உண்டாக்கக் கூடாது. மாறாக, அச்சாதனத்தைத் துருப்பிடிக்க விடாமல் காக்க வேண்டும். தேய்ந்து அழுக்கடைய விடக்கூடாது. நமது தாய் மொழியை அதன் தன்மைக்கு ஏற்ப ஜீவ சக்தியூட்டி வளர்க்க வேண்டும். அதை வாழ்வுக்கு வளம் தேடும் அற்புதக் கருவியாக மாற்ற வேண்டும். இதற்கு வழியென்ன? வாழ்க்கையில் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டு வருவதன் மூலம் தான் இதைச் சாதிக்க முடியும். வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படுவதன் மூலம் புதிய புதிய எண்ணங்கள், அவற்றை வெளியிடும் புதிய புதிய சொற்கள் பிறக்கின்றன. மொழி வளர்கிறது. ஆரோக்கியமாக வளர்கிறது. இவ்விதம் வளரும் மொழி வாழ்க்கையில் மேலும் புதுமை காணும், வளம் காணும் கருவியாக நின்று செயலாற்றுகிறது. வாழ்க்கையில் மாற்றங்கள் நிகழ வேண்டுமானால் தேசிய நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். தேசிய நிலைமைகளில் மாற்றங் காண மொழியின் மேலுள்ள தமிழ் உணர்ச்சி தேசியத் தன்மை கொண்டதாக வேண்டும். மொழியில் மட்டுமல்ல கலை, இலக்கியம், கலாசாரம் எல்லாவற்றிலும் மேவி நிற்கும் தமிழ் உணர்ச்சி ஆரோக்கியமான - ஆக்க ரீதியான - உணர்ச்சியாக வளர வேண்டுமானால் அதற்குத் தேசிய அடிப்படை மிகமிக அவசியம். அல்லாதவரை, தமிழ் உணர்ச்சி வெறும் கொட்டுமேளம் தான்!

நன்றி :
தினகரன் தமிழ் விழா மலர்
1960 சித்திரை

---

**எங்கே?**

இந்த வறுமைபோலல்லாத மாலைப்
பொழுதில்
இந்த இளைஞன் எங்கே போகிறான்?
தனது இடுப்புப் பட்டியிற் செருகிய
தண்ணீர்க் குடுவையுடனும் ஒரு
துண்டுடனும்
அவன் கடலுக்கா போகிறான்?
இந்த இளைஞன்...

ஜமாலுடீன் பூஸ்டி

**பேரறிஞன்**

குதிரை முச்சிரைக்க,
மலையிலிருந்து மீளுமெனின்
அம்மா, அது அடுத்த தீரம் கொடு
புதிய குதிரை வீரனுக்காக.
அதன் கடிவாளத்தைச் சீர் செய்.

கண்ணீர் உன் விழிகளை மங்க வைக்கக்
காயங்கள் உன் முகத்தை
களங்கப்படுத்தின்
அம்மா, என் புதைகுழியைத் தேடாதே
விடுதலை பெற்ற நாடு
வாழுகிற உன் மகனின்
வாழுகிற படிமம்

பஹேர் கஸ்லோசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதுளை சேனாதிராஜா



# புதுசா ஒரு தெரு

‘‘ஒங்களயெல்லாம் பாத்தோன எம்புட்டு கவல சொல்லிடலாமுனு தோணுச்சி... அதா... சொல்லிடுறன்... மாரியம்மா தாயே... நேத்து வரப்போ பெரச்சனை கொஞ்சம் கவலதான். கொழும்புல போலீஸ்காரங்க, ஆம்பிளைங்க பலர் கிப்பாட்டி எங்க இருக்கிறது கேட்டா நா தொலைஞ்சேன். அப்படி வருதுமா ஒண்ணுமில்ல. முந்தாநாளு நா அது நடந்திச்சி. லொட்ஜுக்கு வந்த போலீஸ்காரங்க எங்க கடய தட்டி எங்க எல்லாரையும் எழுப்பி ஐடி கேட்டாங்க. போலீசுல பதிஞ்சிருக்கான்னு கேட்டாங்க. ஒவ்வொருத்தரையா நிக்க வச்சி கேள்வி கேட்டாங்க. நம்ம மேனேஜருதா பதில் சொல்லிகிட்டு இருந்தாரு. எடையில மேனேஜரு அவங்களோட பேசிபுட்டு கேள்விக்கு மேல கேள்வி கேட்டு எங்கள கொழப்புனாங்க. எங்கிட்ட வாறப்போ எம்புட்டு சரீரம் எல்லாம் நடுங்கிச்சு. நெஞ்சு படபடன்னு அடிச்சுகிச்சு. பதில சொல்லுறதுக்கு வார்த்த வரல. நா ஒருநாளு தொலஞ்சா யாருக்கு என்கே புரியல எ இப்பிடினு?

‘‘நீ... இங்க வந்து எப்ப’’னு ஒருத்தர் ரொம்ப அதட்டிகேட்டாரு. நா ஒரு நாலு வருஷமானு சொன்னேன். பொறகு நாங்க போலீஸ்ல பதிஞ்ச துண்ட அவரு பாத்தாரு. அத மேனேஜர்தான் கொடுத்தாரு. ‘‘நீ இங்க என்னா செய்யிறது’’னு என்கிட்ட திருப்பிகேட்டாங்க.

‘‘நா கடையில எடுபுடியா செஞ்சிகிட்டு இருக்கிறேன்’’னு சொன்னேன். என்ன கேள்வி கேட்ட போலீஸ்காரரு என்ன மேலுங்கீழும் பார்த்துபுட்டு ‘‘நீ எங்க இருந்து வாரது’’னு கேள்விமேல கேள்வியா கேட்டாரு. எனக்கு பயமுன்னா அப்படி ஒரு பயம். இது நா மொத தடவ போலீசு என்கிட்ட கேள்வி கேக்கிறது. அப்புறமா எனக்கு எம்புட்டு பயம் இருக்குமுனு கேக்கிறேன்?

‘‘பதுளை’’னு சொன்னேன். அந்த போலீஸ்காரரேன் ‘‘பதுளையில இருக்கிறது சொல்லுற. அங்க இருக்கிறதுக்கு ஆதாரம் வச்சிருக்கியானு’’ அதட்டி கேட்டாரு. ‘‘நா இங்க எம்புட்டு நாளுமில்ல அங்கதா இருக்கு. நா பொறந்தது அங்கதாங்க’’னு சொன்னேன். அங்க வந்த போலீஸ்காரங்க என்னய ஏதோ கதைச்சுபுட்டு என்ன பொலிஸ்க்கு கூட்டிகிட்டு போகணுமுனு சொல்லி வச்சாங்க.

நா ஓ...ன்னு கத்தி அழுதுபுட்டேன்.

‘‘விசாரிச்சிபுட்டு விட்டுடுவோம்’’னு சொன்னாங்க. என்னாத்துக்கு என்ன கொண்டுபோறாங்கனு தெரியல. நா என்னா குத்தம் செஞ்சேனு தெரியலயே? என்னோட இருந்த பொடியனையும் கொண்டுபோனாங்கன்னு சொன்னாங்க. அந்த பொடியன் வவுனியாவாம். அவனும் ரொம்ப பாவம் தாயே. நாங்க அழுதுகிட்டே ஜீப்புல ஏறி போனோம். பொலிசுல வச்சு என்ன ரெண்டு நாளா என்னென்னமோ கேள்வி கேட்டாங்க. எனக்கு தெரிஞ்சத சொல்லிபுட்டேன். கடசியா எனக்கு தோட்டத்துல இருந்து கொண்டு வந்து இருக்கணும் இல்லாட்டி திருப்பி அனுப்ப மாட்டோமுனு சொல்லிட்டாங்க. அங்க மேனேஜர கூப்பிட்டு எம்புட்டு விசயத்த சொன்னாங்க. அப்புறமா நா ஊருக்கு பொறப்பட்டு இப்ப பஸ்ல வந்துகிட்டு இருக்கேன். ஐயோ... ஒன்னை சொல்ல மறந்துபுட்டேன். பொலிசுல இருக்கிற நேரத்தில எம்புட்டு உசுரு அவங்கிட்ட இல்ல இருந்திச்சி தெரியுமா? பேசாம போயிகிட்டு இருந்த பஸ்ஸு நின்னுருச்சு. ‘‘பயிண்ட, இக்மன பயிண்ட, பேக் எக்கக பயிண்ட’’னு பஸ்க் கண்டக்டரு சத்தம் போடுறான்! கத்துறான்! எனக்குன்னா நெஞ்சு பகீருன்னுச்சி. பேக்க தூக்கிகிட்டு பஸ்ஸ விட்டு இறங்கி வெரசா நடந்துகிட்டு போறேன். எம்புட்டு நேரம் வந்தோன ஆம்பிளை ஒருத்தன் எம்புட்டு ஐயா மாதிரி பாத்துபுட்டு எம்புட்டு மூஞ்சிய பாத்தான். பொறகு ‘‘எங்க இருந்து வாரேனு’’ கேட்டான். நா ‘‘கொழும்பில இருந்து’’னு சொன்னேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அங்க என்ன பண்ணிக்கிட்டிருக்க''னு கேட்டான்.

''கடையில எடுபிடி வேலை செய்யிறேன்''னு சொன்னேன். எனக்கு அதில சொல்லுறதுக்கே ரொம்ப பயமா இருந்துச்சி. ஒம்புட்டு தூரம் படிச்சி இருக்கியானு கேட்டா நா என்ன சொல்லுவேன். அதுக்கு [illegible] நெனைச்சாலும் மனசு கேட்குதில்ல. ''கடையில வேலசெஞ்சா அதுக்கு அத்தாட்சி இருக்கா''னு கேட்டான். நா ஒடனே மேனேஜரு குடுத்த துண்ட எடுத்து காண்பிச்சேன். அந்த துண்டு இங்கிலிசில இருந்திச்சி. அத ஆமிகாரன் அத பாத்துபுட்டு ஒடனே திருப்பி எனக்கு கொடுத்துட்டான். [illegible] ஊருக்கு வந்திச்சி. [illegible] பொட்டி [illegible] ஒரு மாதிரியா [illegible] இருந்திச்சி. நாட்டுல பள்ளமா [illegible] நாட்டுமரமெல்லாம் தாண்டி நடக்கணும். இரவுல நிலவும் போல நடந்தா அப்புறமா ரோட்டு வெளிச்சி வரும். அப்படியே தேயிலைமல ஆரம்பிச்சா தொங்கல் இல்லாம போய்கிட்டே இருக்கும். எந்தப்பக்கம் திரும்பிபாத்தாலும் பச்சபசேனு கண்ணுக்கு குளிர்ச்சியா இருக்கும். நடுவுல தாருரோடு, மண்ணுபாத எல்லா இருக்கு. நாங்க தாருரோடுல நடக்குறது கொறவு. ஏனா அது தூரம் கூட. மண்ணுபாத நாங்க டக்குனு வைத்துக்குபோய் சேர்த்துபுடலாம். நா இப்ப மண்ணு ரோட்டுல தான் போய்கிட்டு இருக்கேன். அந்தா தெரியுதே சின்னூரான்டா பாலம். அதுக்கு கீழ ஓடுற ஆத்தபாருங்க. ரொம்ப அழகா இருக்குதில்ல ''களகளனு'' சத்தம்போட்டுகிட்டு வெள்ளவெள்ளயா நொரய நொரய தள்ளிக்கிட்டு வந்து கல்லுலபட்டு [illegible] அப்புறம் [illegible] தண்ணிக்குமேல அப்பிடியே [illegible] தண்ணிக்குள்ள போகாம [illegible] சத்தம்போட்டுகிட்டு [illegible] தண்ணிக்கு மேல பாஞ்சி பாஞ்சி போகும். அத நாங்க செஞ்சி வெளயாடிகிட்டிருப்போம். அப்புறம் ஆத்த தண்ணிக்குள்ள ரெண்டு பக்கமா புடிச்சிக்கிட்டு குட்டி மீனு புடிப்போம். இங்க இருந்தா எப்படியெல்லாம் இந்த ஆத்துல வௌயாடலாம். ஆனா என்னபண்ணுறது விட்டு கண்டமுறு கொழும்புக்கு வேலைக்கு போனா போலீசுக்கு புடிக்குது. எனக்குன்னா சத்தமாக ஒரு மண்ணாங்கட்டியும் புரியல. ஸ்கூலுல்ல படிச்சப்பவும் அப்பிடிதான் மாஸ்டர். சொல்லிக் கொடுத்தா ஒரு எழவும் புரியமாட்டேனிச்சு.

நா ஆத்துல [illegible] பாலத்தில நின்னுகிட்டு [illegible] சொகமா இருக்குமுனு நெனைச்சாலும் எம்புட்டு பேரச்சன பேரிக இல்ல. சரி பெறகு பாத்துகிறலாம் முனு நெனைச்சிகிட்டு பேசாம நடந்துபோறேன். இடது பக்கமாக [illegible] நடக்க வேணும். [illegible] இருக்கிறாரு. சாமி [illegible] மரங்கள் இருக்கு. [illegible] கருங்கல்லுல அவரு இருக்காரு. சின்னவயசுல இருந்தே அவரு இங்கதான் இருக்காரு. [illegible] நா போனேன். முனீஸ்வரன்சாமி என்ன பாத்துகிட்டு இருக்கிற மாதிரி தெரியுது. [illegible] நல்லா பாக்கிறேன். யாரோ சாமிக்கு புதுசா [illegible] அதுல கொஞ்சம் குங்குமம் வைச்சி இருக்குது. [illegible] பக்கத்துல இருக்கிற [illegible] ஒரு தேசிக்கா குத்தி இருக்கு. அதுக்கு [illegible] இருக்குது. நா சாமிய பாத்து கும்பிட்டு பெறகு கல்லுல கருப்பு [illegible] நெத்தியில பூசிக்கிறேன். ''முனீஸ்வரா எம்புட்டு பிரச்சனை தீர்த்து வைய்யினு வேண்டிகிட்டு மண்ணுபாதயில நடக்கிறேன். [illegible] எம்புட்டு பயம் தெரியுது. அத பாத்தாக்க எனக்கு எம்புட்டு சந்தோஷம் தெரியுமா? [illegible] பாத்தமாதிரி ம்... பீலியில குளிச்சமாதிரி ம்... [illegible] இருந்த மாதிரி..ம். இது எல்லாத்தையும் விட [illegible] நாம காலங்காலமாக [illegible]

[illegible] ஏம்புட்டு ஆத்தா சந்தோசப்படுத முன்னுக்கு இருக்குமே சிமெண்டு கட்டு அதில உட்கார்ந்துகிட்டு வானத்த பாத்துகிட்டு இருக்கு. என்னாச்சினு எனக்கு [illegible] ஆத்தாவோட தேயில கூடய இன்னும் ஆணியிலமாட்டல. [illegible] ஓடுது அத கூட நிப்பாட்டாம ஆத்தா அப்படி என்ன யோசிக்கிறாளோ தெரியலையே? நா கிட்டபோயி ''ஆத்தாவு'' கூப்பிட்டேன். ஆத்தா என்ன பாத்துபுட்டு ஓடி வந்து கட்டிபுடிச்சிகிட்டா. ''என்னடா [illegible] நீ ஏதோ கதைச்சுகிட்டு மாட்டிகிட்ட மாதிரி தெரிஞ்சிச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே நேரைவுட இருந்தார் போல. அது மட்டுமில்லே இப்ப இங்க என்னைடயை கோவில் கொழுந்த வெவரு சின்ன கூட ஆத்தி போய் வாறேறு சொல்லிப்புட்டாங்க. வேல கூட. நா கவலைப்ப போயிட்டேன். காலும் கையும் விளங்கேல்லை தெரிஞ்சுது"னு சொல்லி அழுதிச்சி. எம்புட்டு அழுதா அழுதா நா தாங்குவேனா? நானும் அழுதே. அப்புறம் ஆத்தா கண்ண தொடைச்சிகிட்டு "கவலை படுறது சொல்லிக்கொள்ளாம வந்துட்டியே தம்பி பிரச்சனையா" னு எங்கிட்ட கேட்டா. நா ஆத்தா கவலைப்படுவாளு உண்மைய சொல்லாம "அப்படி" சொல்லி மறைச்சிட்டேன். இல்ல... இல்ல... பொய்யை சொல்லிப்புட்டேன். நா ஒரு மடையன். பெரிய ஊர் கண் பெத்த ஆத்தா கிட்டயே எவனாவது பொய் சொல்லுவானா? சாதிக்கப் போய் பொய் சொல்லுவானா. அவனுனா கவலதா. ஆனா எனக்கு மனசுக்குள்ள உண்மைய சொன்னா ஆத்தா மனசுக்குள்ள நொந்துபோவான்னு நெனச்சேன்.

"ஐயா வந்தோன சொல்லிபுட்டு ஆகவேண்டியதைப் பார்ப்போம் னு நெனைச்சிபுட்டு தூக்கிகிட்டு வந்த பேக்க ஆத்தா கிட்ட கொடுத்துபுட்டு பைக்குள்ள வச்சிட்ட இருந்த பிஸ்கட் பொட்டல கூட வெளிய எடுத்தேன். சாம்பல் நெறமும் வெள்ளையுமா புள்ளிபோட்ட கோழி பெருசா வளர்ந்து மத்த கோழியோட "கொக்..கொக்..னு" கத்திகிட்டு பறந்து பறந்து புல்ல தின்னுகிட்டு இருக்கு...ம். அம்புட்டு வளர்ந்து முன்னால வளர்த்த கோழி இல்லாமலேயே ஆராமத்தில பெருசா வளர்ந்திருச்சி. அதும் முட்டையில்ல எப்படி சுதந்திரமா சுத்தி திரியுது? எங்களுக்கு இப்படி முடியுமா... ஏ.. முடியல.. எனக்கு தெரியல ஆருக்கு. இந்த மாதிரி குண்டெல்லா போட்டு அழிச்சு பண்ணுறாங்க எனக்குனா ஒண்ணுமே புரியல பெரிசா தெரிஞ்சது. ம். "ராசா உன்னைப்பா... தேத்தண்ணி வைச்சு தாரேன்"னு எம்புட்டு ஆத்தாவைக் கூப்பிட்டா. நா..... ஸ்டோப்பில போய் குந்திகிட்டேன். ஒடம்பெல்லாம் வலிக்குது எனக்கு. முன்னால இருக்கிற செவத்துல மாட்டின காந்திபுட்டு படத்தில அவரு சிரிச்சிகிட்டு இருக்காரு. எங்க நெலம சிரிப்பாயிருக்கா இருக்கு? தேத்தண்ணிய குடிச்சிகிட்டு இருக்கிற நேரத்தில எம்புட்டு ஐயாவும் வந்தாரு. என்ன பார்த்துபுட்டு

"எப்படா வந்த.. ஆருக்கும் விசேசமா.. சொல்லிட்டு வரப்படாதா"னு என்ன பார்த்துதான் கேட்டாரு. "ஐயாவே... நா.. கேட்டுபுட்டேன் ராசாகிட்ட. ஆனா அவன் சரியா ஒன்னும் சொல்லுறான் இல்ல" னு ஆத்தா குசினியில இருந்து வந்தப்போ சொன்னா.

"ஐயா அப்படி சொல்லுறது"னு நா சங்கடப்பட்டேன் "சொல்லு சொல்லு... ஏ கிட்ட சொல்லாமவுட்டுட்டா எப்படி." ஐயா தா இப்படி கேக்கிறவரு.

நா என்ன நடந்திச்சோ அத்தனையும் "புட்டுபுட்டு" அவுத்து வச்சிப்புட்டேன்,

ஐயாவும் ஆத்தாவும் கண்கலங்கிட்டாங்க. ஆத்தா என்ன கட்டிப்புடிச்சி அழுதா. ஐயா கவலை தொடர்ந்துகிட்டாரு. அப்பதான் எம்புட்டு அக்காவும் தம்பியும் ஸ்கூலுக்கு போயிட்டு வந்தாங்க. என்ன பார்த்து அவங்களுக்கும் என்னமோ ஏதோ நடந்திருக்குன்னு அதிர்ச்சியா பாத்தாங்க. அக்கா கிட்ட வந்து "அண்ணா எப்படி இருக்கிற அண்ணே, என்ன கொண்டுவந்த"னு எப்படி அண்ண கேட்க தெரியுமா? நா முடிவோட கொண்டு வந்த பேக்கிலிருந்து பிஸ்கட் பெட்டியும் சொக்லெட்டும் அவங்களுக்கு கொடுத்து புட்டு "அக்காவி தம்பிக்கும் கொடுத்துபுட்டு தின்னு சரியா"னு சொல்லி அனுப்புட்டு தலைய குனிஞ்சிட்டிருந்தேன். ஐயா அண்ணே, கோவம் வந்திருச்சு இப்படி கவல வந்திருக்கு அவரு புரியல அவரு திரும்பிப்பார்த்தா வெளங்கிகொண்டாரு மாதிரியா இருக்கு. "பெரிய தம்பி வா தலைவரு வீட்டுக்கு போயிட்டு வருவோம்"முனு என்ன அழைச்சிகிட்டு போனாரு. தலைவருட்டு வீடும் எனக்கு தெரியும். ஊருக்கு நடுவில இருந்து அப்படியே எறங்கி பெரும்பாதையில தெக்கு பக்கமா மண்ணு ரோடும் ரோடுபக்கமும் இருக்கு. அப்படியே போனா அரிசிமில்லுக்கு பக்கத்தாண்டி கிட்டு போய் தலைவருட்டு வீட்டுக்கு பெரிய மதில் போகனும். நாங்க "விறுவிறு"னு நடந்து போனோம்.

"தலைவரு வீட்டுக்குள்ள தண்ணிப்போட்டுகிட்டு பெருத்த ஒண்ணும் கவலைப்படாம ஏதோ"னு ஐயா சொன்னபடி நாங்க ரெண்டுபேரும் அரிசி மில்லிக்கிட்ட வந்துட்டோம்.

அரிசி மில்லுகிட்ட தலைவரு நின்னு வேலையாட்களோட கதைச்சிகிட்டு இருக்காரு. நாங்க போயி பக்கத்தில நின்னுகிட்டோம். தலைவரு எங்கள பார்த்து ஆச்சரியப்பட்டாரு.

"என்னா மாரிமுத்து பொடியனையும் கூட்டிகிட்டு வந்திருக்க. எப்போ... பொடியன் எப்ப கொழும்பில இருந்து வந்தான்"னு ஐயாவ பார்த்து கேட்டாரு.

"ஐயா தலைவரே. இவனுக்கு ரொம்ப பிரச்சனையா போச்சு. ஒங்களதா பாக்கவந்தோம்"னு ஐயா தலைவருகிட்ட ஒரு மாதிரியா சொல்லிகிட்டு இருந்தாரு. என்னோட கொழும்பில நடந்ததையும் சொன்னாரு. "அடப்பாவமே... இப்படி கொழும்பில நடந்ததா. இனிமே தொழிலோட நின்னுகிட்டு போட்டோ எடுத்து வச்சிக்கிட்டா... நாம போலிஸ்காரங்கள போல தெரியுது... ம்...நா நொண்டிட்ட போயிட்டு கதைச்சுபுட்டு லெட்டர் எழுதிறேன்"னு சொல்லிபுட்டு, "பெரிய நீ... போ... இந்த வரியந்த முடிச்சுகிட்டு அப்புறம் நாளைக்கு சாயங்காலம் வந்து பாரு"னு அவருகிட்ட சொல்லிபுட்டு என்ன கூட்டிக்கிட்டு தொழு பக்கமாவுக்கு போனாரு.

தொரைங்களா எங்க தோட்டத்தில எல்லாருக்கும் மத்தியில தான் இருக்குது. ரொம்ப பெரிய பங்களா. பச்சை கலரு தகரத்துக்கு பெயின்ட் அடிச்சு. சுத்தி சுத்தி பெரிய பெரிய ஜன்னலு கதவு எல்லாம் வச்ச பாக்க ரொம்ப "பவுசா" இருக்கும். பங்களாவ சுத்தி எத்தனையோ, டேலியா, காசினேசன்னு சக்கரமா பூத்து பூத்து பார்க்க ரொம்ப அழகா இருக்கும். தோட்டத்தில நாலுமாடு இருக்கு. அதுக்கு தொழுவட்டு முன்னால பெரிய தொழு தெரியுது, ஏதோ வேலைக்காரர்கள் அத கவனிப்பாங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்ப நாங்க பாத்துக்க அவங்க ஏகவாங்க. நாங்க ஒழிஞ்சிறு பாப்போம். ரொம்ப நல்ல வெள்ளைக்கார இருந்தாரில்ல. தொரவுட்டு பங்களாவுக்கு போயிட்டோம். வெள்ள பனிக்கட்டியைப்போல அது தெரியுது. பங்களாவை கிட்ட நின்னு போய் பாத்தோனயே எனக்குள்ள ஏதோ மரியாத வந்த மாதிரி தெரியுது. கொஞ்சம் பயமாகவும் இருக்குது. வெயிலுகாலமிறி இல்லாம ரொம்ப சுத்தமா இருக்கு. தலவரு வெளியேட்டு பங்களா கேட்ட தட்டுறாரு. ரெண்டு நாய் "வள்ளு"ன்னு குலைக்கிது. நல்லா தின்னு தின்னு வெள்ளையும் கறுப்புமா கொழுத்துப்போய் இருக்குது.

"யாரு." பங்களா வேலைக்காரன் கதவ தொறந்துகிட்டு வெளிய வந்து எங்ககிட்ட வாரான்.

"தொர துரையை பாக்கனும்"

"ஆமா இப்பதா... வந்தாரு.. தலவரு கொஞ்சம் உள்ளவந்து நில்லுங்க" தொறபங்களா கேட்டுக்குள்ள வந்து நின்னுகிட்டோம். தொரவுட்டு நாய்க வீட்டுக்குள்ள இருந்து கொரச்சிக்கிட்டே இருக்குது. காங்கமாதிரி தொழிலாளிகளை கண்டா அதுக எப்பவும் இப்படிதான்... தொழிலாளர்க்கு நேரா கொலைக்கும். நாங்க கூட்டுக்குள்ள இருக்கிறோமுன்னு தெரியல. அப்படி பார்த்தா நாங்களும் தெறந்த கூட்டுக்குள்ள இருக்காப்பிடிதா தெரியுது. தொர கதவ தெறந்துகிட்டு வாராரு. அப்பிட்டு தெனப்பும் சட்டுனு நின்னுப்போகுது. எங்கள ஒரு மாதிரியா பாக்கிறாரு. கண்ணுல கோவம் இருக்கு. மொகத்த சுழிச்சிகிட்டு வச்சிருக்காரு.

"என்ன விஷயம் மேன்..." தொர தலவருகிட்ட கேட்கிறாரு.

"சேர்... இவரு எங்க யூனியன் மெம்பரு... மத்தவரு இவருட்டு புள்ள ராஜன். இவருட்டு புள்ளக்கு வேலைக்காரனா போயிட்டு வாரான்..." தலவர் அவர பாத்துகிட்டு சொன்னாரு.

"இங்க பாருங்க.. தலவரு.. இப்பதான் நா... வீட்டுக்கு வந்தது. ரெஸ்ட் இல்ல. நாளைக்கு ஆபிஸ் வந்து பாக்கிறது"ன்னு தொர சொல்லுறாரு.

"சேர் எங்கள மன்னிக்கனும். இவருட்டு புள்ளயுட்டு பெரச்சன பெரிசா போச்சு அதுதான்..." தலவரு.

"என்ன பிரோப்ளம் மேன். இந்த பய்யன் தோட்டத்துல வேல செய்யுதுதானே. அப்புறம் என்ன மேன் புரப்ளம்"

"சேர்... இவருட்டு புள்ள தொழிலில வேலை செய்யிறான்..." ன்னு தலவர் சொல்லி முடிக்கிறதுக்கு முன்னாடியே தொர,

"ஆங்... இந்தா பய்யன் தோட்டத்தில வேலசெய்யாட்டி நா என்ன மேன் செய்யிறது. ஐ கென்ட் ஹெல்ப் மேன்..." ன்னு தொர என்னமோ சொல்லுறாரு.

"சேர்... நீங்க மனசுவச்சா எல்லாம் சரி சேர்" தலவரு கெஞ்சிறாரு.

"வொட் புரொப்ளம் மேன். குயிக்லி டெல் மீ" தொரதான் சொல்லுறாரு.

"சேர்... பொலீஸ்காரங்க இவருட்டு இந்த பையன புடிச்சிகிட்டு போயிட்டாங்க"

"வை மேன்... இங்க இந்தா பொய் நிக்குது"

"சேர்... இது போன கிழமை மூணு நாளுக்கு முன்னால்ல இப்ப பொலீஸ்ல பதிவு கேக்குறாங்க"

"ஸோ... வட் யூ மீன்"

"இங்க தோட்டத்துல வசிக்கிறதா... பதிவு இருக்கணும்"

"ஸோ... ஸோ... ஐ கென் ஐ கிவ்"

"சேர்... அப்படி சொல்லிடாதீங்க" கெஞ்சினாரு தலவரு. எனக்கு நெஞ்சு படபடப்பு நடுங்குது. கெட்டது தொர இந்த சனங்க பணியுறது? முன்னுக்காரன் பாதிரியாரு முன்னுக்கு வந்து. வேண்டிக்கிட்டேன். மாரியாத்தா எல்லாம் சரியாகனும்.

"என்ன மேன்... இந்த பொய் தோட்டத்துல வேல செய்யாமலேயே இங்க ரெஜிஸ்டர்னு லெட்டர் தருவேன். பட் இந்த பொய் கவர்மெண்டுல தொழில் செஞ்சிகிட்டு இருந்தா. ஐ கென் ஐ கிவ்"ன்னு தொர சொல்லிப்புட்டு உள்ளே போக போனாரு.

"சேர்" தலவரு வேகமா கத்தினாரு. பெரிய சத்தத்தில தொர திரும்பிபார்த்து எங்கள மொறச்சாரு.

"என்ன... சவுண்ட்... மேன்"னு கேட்டவாறு தலவர பாத்துகிட்டு தொர.

"சேர்... இவருட்டு அப்பா தகப்பன் ஒ... பரம்பரபரம்பரையா இந்த தோட்டத்துல வேல செஞ்சி தேயிலைக்கு ஒரமா போயிட்டாங்க. இன்னும் பரம்பரை தொழில வையில வேல செஞ்சிக்கிட்டு இருக்கிறதுபோதா? இங்க இருக்கிறோமுனு நிரூபிக்க வேற என்ன சேர் வேணும்? இவங்க மாதிரி பசங்க வெளியில போயி வேலசெஞ்சா தோட்டத்துல விலாசம் இல்லேனு போதுமா சேர்? நல்ல கத இது! நீங்கதான் இங்க புதுசு நாங்க பரம்பரபரம்பரையா ஆண்டாண்டுகாலமாக இங்கன இருக்கோம்"னு தலவரு தொரய வார்த்தையில பொரட்டி எடுத்தாரு. அவருக்கு கோவம் நல்லா வந்திருச்சி.

அம்மாவே "பளபளனு" இருக்கிற ஆளு. கோவத்துல கண்ணெல்லாம் தக்காளிபழமாட்டம் செவந்து போச்சி. கன்னமும் செவந்திருச்சி.

"ஏய் தலவர் ஏங்கிட்ட வைப்பன்னை வாரியா. உனக்கு எதிரா என்னை எதிர்க்க முடியும் மேன்" னு தலவர பேசினாரு.

"சேர்... ஒங்களுக்கு உண்டான மரியாதைய நாம எல்லாமும் கொடுத்துகிட்டு தா இருக்கோம். அதுல ஒரு சந்தேகமும் வேணாங்க. ஆனா எங்களுட்டு மரியாதைய அடகுவைக்க முடியாது"னு தலவர் விடாம சொன்னாரு.

"ஓ ... நீ பெரிய சங்க ஆள். இப்படி நான் சொல்லுறேன். ஒன்னுட்டு மினிஸ்டருக்கு நா சொல்லுறது நீ.. பெரிய கஷ்டப்படுவது"னு தொரதான் இப்படி சொல்லுறாரு.

"சொல்லுங்க சேர்... நல்லா சொல்லுங்க.. அதுக்கா நா பயப்படமாட்டேன். எனக்கு எங்கட தொழிலாளிக முக்கியம். நான் நாங்க அவங்களோட தொழிலால தான் ஜீவிக்கிறோம். காலங்காலமாக அவங்களோட நா பழகிகிட்டு இருக்கோம்"னு தலவரு பதில் சொன்னாரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிரசிடன் மாருவீட்ட கலைக்கிறாருனு தெரியுமா"
"தெரியுது சேர்... ஏங்கள பாத்து பயந்த காலமெல்லாம் போச்சு சேர். ஏங்கட கடமைய சரியா செஞ்சா நாங்க போயிட்டே இருப்போம். இல்லாட்டி எங்களுக்கு தெரியும்சேர் என்னா செய்யிறதுனு" தலைவர் முக்க கனைக்கிறாரு.
"நா... பொலிசுக்கு போன் பண்ணுறது நீ கரைச்சல் தாரது"ன்னு தலைவர பாத்து நேரா சொன்னாரு.
தலைவரு சிரிச்சாரு. பெறகு சொன்னாரு:
"பேசா சொல்லுங்க. ஒங்களுக்கெல்லாம் சேர், பொலிசுவுட்டா யாரு இருக்கா. ஆனா ஒன்னுரு சேர் நீங்க இங்க பண்ணுற வேலைய நா சொன்னா எத்தன நேரமாகும்"னு சொன்ன தலைவர் தொரைய கண்ணிமைக்காம பேசுறாரு.
"என்னா பேசு... நீ... கதைக்கிறது.. என்னா பேசு என்ன செய்ய முடியும் ஒன்னால" தொர தலைவர ஒருமாதிரியா பாத்தாரு.
தலைவரு திரும்பியும் சிரிச்சாரு. எனக்கே ஆச்சரியமாக இருந்திச்சி. நாங்க நடுங்குற தொரகிட்ட எப்படி இவரு சண்ட போடுறாருனு.
"சேர்... நாளு பேரு கானம போறதுனா எத்தன பெரியாரு இந்த லயத்துக்கு வந்திருக்கு. ஸ்டோருல வேலசெய்யிர எனக்கு தெரியாதா நீங்க இதுக்கு பேரின் நுச்சி"னு ஒரு பிடிபிடிச்சாரு தலைவரு. தொர அதுநாள் கெட்டு அரிவுங்கெட்டு அப்பாவிய சட்டுனு நின்னுட்டாரு.
ஒரு நிமிஷம் சத்தமே வரல. அப்புறம்,
"நாளைக்கு காலையில ஆபிசுக்குப்போயி பெரிய கிளாக்கிட்ட சொல்லு ஆனையும் கோடு"னு சொல்லிட்டு அவரு விருட்டுனு பங்களாவுக்குள்ள போயிட்டாரு.
தலைவரு எங்கள பாத்து சிரிச்சாரு. நாங்க நூபர அவர பாத்து பெருமப்பட்டோம். எனக்கு அவரு சிங்கம் மாதிரி தெரிஞ்சாரு. அவரு கொழும்பில் வேல பாத்து பொலிஸ்காரன் வந்து அவருகிட்ட கேள்விகேட்டு மாட்டிக்கிட்டா. எப்படி முழிப்பாருனு நெனைக்கையில சிரிப்பு சிரிப்பா எனக்கு வருது.
"நாளைக்கு வாங்கி குடுத்துபுடுவோம்" தலைவரு சொல்லிட்டு நாங்க மூணுபேருமா பங்களா படியில இருந்து எறங்கி நிம்மதியா வரோம். நாம எல்லா பெரச்சனையும் எடுக்கிற பங்களாவில விட்டுத்தான் வாறோமுனு நா நெனைக்கிறேன். மணி காலையில பத்துமணி ஆகி இருக்கும்.
தலைவரு எம்புட்டு வீட்டுக்குவந்தாரு.
"ஒங்கப்பன் இருக்கானா"னு கேட்டாரு.
"கடைக்கி சிறு போயிருக்கு"ன்னு நா அவருக்கிட்ட ரொம்ப மரியாதையா சொன்னேன்.
"சரி.. சரி. இந்த லெட்டருல நீ கேட்டது எழுதியிருக்கு. ஒங்கப்பன்கிட்ட சொல்லிரு. எங்க ஆத்தா?"னு என்கிட்ட லெட்டர குடுத்துக்கிட்டு கேட்டாரு.
"ஆத்தா அங்கா"னு நா காட்டிட்டேன்.
ஆத்தா சீலையில கைய தொடச்சிக்கிட்டு வந்தா.
"வாங்க அண்ணே.... என்ன காரியமும் சொகமா முடிஞ்சிச்சா அவரு சொன்னாரு"னு ஆத்தா சொல்லிச்சி.
"ஆமா பின்ன நா போனா அப்பா விட்டுருவேனா எடுத்த காரியத்த நொங்ககாமா விடமுடியுமா ஆச்சி? அதுபட்டுமில்ல ஒம்புட்டு புருஷ ஏம்புட்டு கூடானா சரி நா போறேன். பெறகு வந்து பாக்க சொல்லு. இல்லனானு வேலக்கு போகல்லபா"
"இல்லண்ட இவே இன்னைக்கு கொழும்புக்கு போறான். வழியனுப்புறதில்ல. அதான்"னு ஆத்தா சொல்ல தலைவரு படியில எறங்கி போயிட்டாரு.
போயிக்கிட்டே எனக்கு கேக்கணுமுனு பேசமாக சொன்னாரு:
"தம்பி.. பத்திரமா போப்பா. அங்க போயி நின்னவனுக்கிட்ட எல்லா சும்மா புழுகி திரியாத புரிஞ்சுதா".
நா சரிங்கிற மாதிரி தலைய ஆட்டிக்கிட்டேன். அப்பாவும் ஆத்தாவும் என்ன வழியனுப்பி வச்சிட்டாங்க. நா பேக்க தூக்கிட்டு மேலயில மலையில மண் பாதையில எறங்கி மரத்துக்கெல்லாம் தாண்டி முனீஸ்வரன் சாமிகிட்ட வந்துபுட்டேன். சாமி நா பாக்கிறப்போ சிரிச்சிகிட்டு இருக்கிற மாதிரி எனக்குப்படுது. நா "சாமியே நா சொன்னமாதிரி நீ செஞ்சுபுட்ட" அதனால இப்ப நா ஒன்ன கும்பிடப்போறேன்"னு சொல்லிப்புட்டு கூடத்துபத்த வச்சி சாமிக்கு பக்கத்தில இருந்த கருங்கல்லுமேல வச்சிட்டு குடத்து நெருப்பு கல்லால மூணுமொற சுத்தி ஒத்தி வச்சிப்புட்டு நடக்கிறேன். திரும்பியும் அங்க நா பாக்கிறேன். ஆத்துல குளிச்சுகிட்டு வாற ஒருவரும் என்ன பாத்து சிரிக்கிறமாதிரி தெரியுது.
"நா இன்னொருநாளைக்கு வந்து இறங்கி குளிக்கிறேனு" நெனைச்சிட்டு நா நடந்து போறேன்.
அரமணி நேரமா நடந்து தோட்டத்த விட்டு ரோட்டுக்கு வந்திட்டேன். பஸ் வந்துச்சு. அதுல ஏறி டவுனுக்கு வந்துட்டேன்.
கொழும்புக்கு போற பஸ்சுக்கு மட்டும் காத்துக்கிட்டு கெடந்தமாதிரி நின்னுகிட்டு இருந்துச்சி. நா பஸ்ல ஏறி டிக்கட் பார்த்து ஒக்காந்துக்கிட்டேன். பேக்க காலுக்கு கீழ வச்சிப்புட்டேன். அப்படி தானுங்க இப்பெல்லாம் வச்சிக்கிறணுமாம் சொல்லுறாங்க. அதான். ஒய்யாரமா சன்னலுக்கு பக்கத்துல கால நீட்டிப்போட்டுகிட்டு ஒக்காந்துக்கிட்டேன். எனக்கு ஒருபயமும் இப்ப இல்ல. என்ன இருந்தாலும் ஒருமயிரும் பண்ண முடியாது. ரொம்ப சந்தோஷமாக இருக்கேன். எனக்கு கெடச்ச துண்ட பத்திரமா சோப்பில வச்சிருக்கேன் தெரியுமா? அத தடவி தடவி பார்த்துக்கிறேன். வந்த காரியம் சொகமா முடிஞ்சிட்டு. எனக்கு இனி ஒரு பெரச்சனையுமில்ல.
"சீட்டுல கால நீட்டி போட்டுகிட்டு ஒய்யாரமா சன்னலுக்கு பக்கத்துல ஒக்காந்து கொழும்புக்கு போற புதுதொர யாராம்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவிரித்தாடும் வறுமைக்குப் பூச்சூடுகிறது பூகோளமயம்

க. சுகேசனன்

அவரவர் வயிறும் நிரம்பாத நிலைமை
அவசரவாசியாய் குறைக்கும் திட்டம்
அவனியில்,
ஆளும் போட்டிப் பொய் தவிர்க்க
இரண்டாவதாய் உதித்தவன்
'அவனிக் காத்தான்' அறிவிக்கின்றான்
'மிலேனியம் அபிவிருத்தியாம்'

காத்தானிடம் கூடிய
நாட்டுத் தலைவர்கள் கூடினர்,
ஏதேதோ - பேச்சுக்கள்,
அறிக்கைகள்,
ஆலோசனைகள்,
தீர்மானங்கள்,
இறுதியில் திட்டங்கள்,
இதற்கோ காலவரையறை
கால் நூற்றாண்டு-
காத்தானின்.
உலகியல் அறிஞர் குழு சிலர்
ஒதுங்கினர்
அப்பப்பா - இகழ்ச்சிகள்,
கண்டனங்கள்,
கட்டுப்பாடுகள்,
பொதுவாகவும் பொருந்தாத பொய்யுரைகள்,
எல்லாம் அவர்களுக்கு,
ஏனையோரில் பக்கமிருந்து

திட்டமோ நடைமுறையில்
கஷ்டங்களோ பல நூறு
ஒவ்வொன்றாய் நிறைவேற
'அவனிக் காத்தான் பொருத்தமாய்' விஜயம்
குழுக்கள்,
ஆய்வுகள்,
பிரேரணைகள்
மேன்மேலும் ஆலோசனைகள்

அடுக்கடுக்காக கட்டங்கள் நிறைவேற
பல்வேறு உதவிகளாம்
முதலாளிகள் உதவி,
பண்ட உதவி,
பண உதவி
இன்னும் பல... முடிவோ இல்லை
நாட்டினில்,
திட்டங்கள் மாற
மாற்றங்களோ பலப்பல -

கல்வியில், சுகத்தில்
பயிர் வளர்ப்பில், மிருக வளர்ப்பில்
பாதை, கட்டிடம்
நகரம், தொழிற்சாலைகள்
அனைத்திலும் விஸ்தரிப்பு
புதுப்புது நிர்மாணங்கள்

வளமான நிலம் விழுங்கி
வளர்ந்து நிற்கும் நீர்த்தேக்கங்கள் -
தொழிற்சாலைக்கு மின்சாரமாம்!
பயிருக்கு நீராம்!"

எங்கும் வேகம், எதிலும் வேகம்
அனைத்திலும் தொழில்நுட்பம்
அனைவருக்கும் தொழில்நுட்பம்

காத்தானிடம் மந்திரங்கள் ஏராளம்...!
அவற்றில் ஒன்று
'செய்ந்நன்றி மறந்தால் செம்மையாயிருக்கும்'
உதவிகள் பெறின்
கேட்பது வேண்டும்
மறுத்தல் தடை
இதென்ன 'சிம்பல்'
இலக்கை அடைய வைக்கப் போமா?
மறுத்தல் தகுமோ?

காலம் கரைந்து
கனியாய் பெற
கால்வாசி இருக்கும் வேளையில்
அவனிக் காத்தான் அறிக்கை தந்தான்
''சொன்னதைச் செய்தீர்
வாழ்த்துக்கள் - நன்று நன்று''
''வறியோர் தொகையில்
வீழ்ச்சி, வீழ்ச்சி''

''இன்றைய கணக்கு
உலக சனத்தில் -
வறியோர் - 140 கோடி''
'' ஹம், ஹம், அப்படியா...''

''உஷ்...!
சத்தம் போடாதே
அவனிக் காத்தான் காதில் விழும்
இரகசியம், ஆனால் உண்மை
'ஒதுங்கியோர் மட்டுமே உயர்வாய் -
உள்ளனர்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசிய கலை இலக்
# தேசிய மாநாடும் 35வ



சமூக மாற்றத்திற்கான நீண்ட பயணத்தில் கலை இலக்கியத்தை பயன்படுத்துவதை வரையறுத்த 1973ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தேசிய கலை இலக்கியப் பேரவையின் தேசிய மாநாடும் 35வது ஆண்டு விழாவும் கடந்த ஆனி 23,24ம் திகதிகளில் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் இடம் பெற்றன. 23ம் திகதி காலை பேராளர் மாநாட்டைத் தலைமைக் குழுவினரான இ. முருகையன், பேராசிரியர் சி. தில்லைநாதன், சி. சிவசேகரம், கலாநிதி ந. இரவீந்திரன், ஜெ. சற்குருநாதன், விமலினி சந்திரசேகரம் ஆகியோர் வழி நடத்தினர். செல்வி சு. கௌரி பேரவைக் கீதத்தைப் பாட சிவேந்திரன் பிரேம் மௌன அஞ்சலியுடன் பேரவையில் மறைந்த முன்னோடிகள் நினைவு கூரப்பட்டனர்.





வரவேற்புரையை சோ. தேவராஜாவும், ஆரம்ப வாழ்த்துரையை இ. முருகையனும் தலைமையுரையை





சி. சிவசேகரமும் வழங்கினார்
முன்வைக்கப் பட்ட பேரவையின்
திருத்தங்களை ன் பேராளர்களி
தொடர்ந்து சோ. தேவராஜா மாநா
அறிக்கை சமர்ப்பிக்கப் பட்ட
வெளியாட் பிரதேச அறிக்கை
பட்டன். அவற்றையும் முன்வைக்கப்பட்ட
"புதிய ஜனநாயகம், புதிய
அறிக்கைகளுடன் மக்கள் கலை
முன்னெடுப்பு














Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...கியப் பேரவையின்
# ...வது ஆண்டு விழாவும்

பி. மணிவண்ணன்















...ார். அடுத்து ந. இரவீந்திரனால்
...் யாப்பு (அமைப்பு விதிகள்) சீர்செ...
...ரினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது
...ாட்டு அறிக்கையை சமர்ப்பித்தார்.
... தொழிற்பட்டமை, [illegible] பழுப்பான,
...ுகள் அங்கந்த முன்னெடுக்கப்
...ட உள்ளமையையும் சுட்டிக் காட்டின
... காரும், புதிய பனைபாடு" என்ற
...லை இலக்கியக் கோட்பாட்டை

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கருவாக்கில் காலகம் கவகான ஒரு நடைமுறைப் படுத்து வருவதையும் கலை இலக்கிய பண்பாட்டுத் தளத்தில் தேசியக் கலை இலக்கியப் பேரவை வகிக்கும் வகிபாகமும் கொண்ட நிலைப்பாட்டை. தொடர்ந்து முன்னெடுத்து வருவதையும் வெளிக்காட்டி உறுதிப்படுத்தப்பட்டன. பேரவை பயணப்பாதையில் தொடங்கப் பெற்றதும் ஆரம்ப



முதல் நடைபெறவிருக்கும் முறையில் மக்கள் இலக்கியத்தின் பன்முகத்தன்மையை வலியுறுத்திக் கொழும்பு, மலையகம், வவுனியா, கிழக்குப் பகுதிகளில் முன் பணிகளை முன்னெடுத்து வந்துள்ளமையும் சுட்டிக் காட்டப்பட்டது. அறிக்கைகள் பெருமளவினால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதிருப்தை வேலைத் திட்டங்கள் கலந்துரையாடி முடிவாக்கப்பட்டன.

நிறைவாகப், பேரவையின் நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: கவிஞர் இ. முருகையன்.





உப தலைவர்கள்: சி. சிவசேகரம், பி. ..., ஜெ. சற்குருநாதன், பொதுச் செயலாளர்: சோ. தேவராஜா, பொருளாளர்: செ. நந்தகோபால், இலக்கியச் செயலாளர்: க. தணிகாசலம், கல்விச் செயலாளர்: ந. இரவீந்திரன், விநியோகச் செயலாளர்: த. முகுந்தன், நாடகச் செயலாளர்: செ. குமாரலிங்கம், மலையகச் செயலாளர்: வி. சந்திரசேகரன், கொழும்புச் செயலாளர்: மாவை வரோதயன், யாழ்ப்பாணச் செயலாளர்: க. சிவரஞ்சன், வவுனியாச் செயலாளர்:





ந. பிரதீபன், மட்டக்களப்புச் செயலாளர்: த. செபாஸ்ரியன், மேலும் நால்வர் செயற்குழுவிற்குத் தெரிவாகினர்.





மாலை 5 மணிக்கு மாநாட்டின் நிறைவை அடுத்து மாலை 6 மணிக்கு 15வது ஆண்டு சிறப்பு மலர் (புது மெருகும்) பேரவைத் தலைவர் முருகையனால் வெளியிட்டு வைக்கப்பட்டது. ஆரம்ப உரையை செ. குமாரலிங்கமும் வெளியீட்டு உரையைப் பேராசிரியர் சோ. சந்திரசேகரமும் ஆற்றினர்.





தொடர்ந்து மக்கள் கலை போராட்டமும் படைப்பும் நிரியல்ல காதல் நடனங்கள் பற்றிய அறிமுக உரையும் மக்கள் களரியின் உலைக்குக்களை பிரதேச நாடகக் குழுவினரின் 'தூவம்' 'கண்களின் ஊம்' ஆகிய நாடகங்களும் இடம் பெற்றன.

(மாநாட்டு நிகழ்வுகள் பற்றி அடுத்த இதழில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவுலகின் நீட்சி

சந்திரலேகா கிங்ஸ்லி


பழங்கதைகள் பல பேசி
பழமையை நீ சுமந்து
பண்பாட்டுப் போர்வைகளையும்
கலாசாரக் காவலையும்
நிலவுலகின் நீட்சியென
நீ நினைத்து காலம் போய்
தொலை தூரம் போயினவே.

பெண்மையாய் மென்மையாய்
கற்பு காவியமாய்
விரித்து கொள்கையும் கோட்பாடும்
கொஞ்சும் அழகுகளாய்
பதித்த அணிகலன்கள்
பாவை உன் அங்கமாய்
பாவித்த காலம் போய்...
தொலை தூரம் போயினவே.

பொங்கி நிமிர்ந்து
நிலவுலகின் கொடுமைகளை
வஞ்சகரின் அடக்குமுறைகளை
மெலிதாக வந்திருந்து
வலிதாகக் கொல்லும்
வரலாற்று ஒடுக்கு முறைகளை
சொல்லும் உன்
குரல் ஓங்க உரக்கச் சொல்
சொல்... சொல்...
சொல்லிக் கொண்டேயிரு
உலகத்தின் நீட்சி வரை
உன் மூச்சு உள்ளவரை

இவற்றூடே...
கோரமாய் கொல்லப்பட்ட
கிருஷாந்தியை நினை
கொடுமையின் உச்சமாய்
குதறிக் கற்பழிக்கப்பட்ட
உமாதேவியை நினை
செங்குருதி சிந்தச் சிந்த...
செம்மணியில் புதைக்கப்பட்ட

போராளிகளின் சரித்திரம் புரட்டிப்பார்!
செஞ்சோலை தனில் பாலை
சிதறிப்போன அக்கிரமம் கருத்திற்கொள்
குண்டுகள் துளைபுண்டு
கோரமாய் மாண்டு போன
தோழியரின்
வரலாற்றை வாசித்துப்பார்
வர்க்கங்கள் ஒன்றாய் பலவாய்
வாழ்க்கையின் வசந்தங்கள்
களவாடும் கொடுமைகளை
நேசம் பூக்கும் பூமியின் வேர்களில்
வர்க்கங்கள் ஒன்றாய் பலவாய்
ஒன்றை ஒன்று நசுக்கித் தின்று
வாழ்க்கையின் வசந்தங்களை
களவாடும் கொடுமைகளை உரைப்பாய்
அவற்றுக்கு எதிராக
ஓங்கி உரக்கச் சத்தமிடு
பாறைகள் பிளந்து
விருட்சங்கள் வீறு கொண்டெழ
ஓங்கி உரக்கச் சத்தமிடு
சாகும் வரை சத்தமிடு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளக்கும் திரியும் நெருப்பும்

நிலாக்கீற்றன்

திரிகள் கூடி
தீபமாவதை மறந்து
விளக்கினில் ஏறுமா

ஏறிய திரிகள்
எண்ணெயில் ஊறி
நெருப்புடன் கூடுமா

நெருப்புடன் கூடினால்
நெஞ்சம் முடிக்க
வெளிச்சம் பரவுமா

திரிகளில்லை
மானிட மனங்களில்
மகிழ்வுகள் வருமா!

தீபங்கள் ஏற
விளக்கு வேண்டும்
விளக்கு என்பது
வளர்ந்த தேசம்
வளர்ந்த நேரம்
வழங்காமல் கிடக்கு

இன்றும்
விளங்காமல் கிடக்கு

விளக்கை முதலில்
விளக்க வேண்டும்
விளக்கை விளக்க

விலங்கும் ஏதும்
இருப்பின் விலக்கு

புரிதலைப் போட்டு
வலையைத் தோய்க்க

பூதம் வந்தால்
பரிகரி

புரிதலைக் கரைத்திடும்
பூதம் வந்தால்
பரவாயில்லை

விளக்கை நல்லா
விளக்கச் சொல்லி
விளக்கமாய்ச் சொன்னால்

விளங்கிக் கொள்ளும்
வழங்காமல் கிடக்கும்
எங்கட விளக்கு
விளக்கிலே ஏதும் விளங்கும்

நல்லாத் துலங்கும்
பிரச்சனை
திரிகள் விளக்கில்
புரளாத வரை

திரிகள் யாவும்
புரிவுடன் வரும்
விளக்கில் ஏறவும்
எண்ணெயில் ஊறவும்
நெருப்புடன் கூடவும்

நன்றாய்த் தொகுத்து
எல்லாம் ஏற்ற
நன்றாகத் திரிகள்

திரிகள் ஏறினால்
எண்ணெய் ஊற்ற
எண்ணற்ற கரங்கள்

எண்ணெய் ஊற்றவோ!
மண்ணை ஊற்றவோ!

ஊற்றிய எண்ணெய்
விளக்கில் விழுமோ!
திரியில் விழுமோ!
தீயில் விழுமோ!

விளக்கில் மட்டும்
எண்ணெய் விட்டிடும்

விழுந்த எண்ணெயில்
திரிகள் ஊறட்டும்

ஊறிய திரிகள்
நெருப்புடன் கூடட்டும்

திரியையும் தீயையும்
சந்திக்க வைக்க
சிந்திக்க வைக்க
சிந்தனையாளர் வரட்டும்

நெருப்பும் திரியும்
நெருக்கம் கொள்ளட்டும்
விளக்கில் மட்டும்
விட்டிடும் எண்ணெய்

தீபம் ஒளிர
திருநாள் மலர
காத்திருப்பதா!
கரம் கொடுப்பதா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க எழுதுவினைஞன் ஒருவனின் மரணம்

அன்ரன் செகவ்



(பிரசித்தி பெற்ற ரஷ்யச் சிறுகதை ஆசிரியரான Anton Chekov ரஷ்யப் புரட்சிக்கு முந்திய முற்போக்காளர். தமிழில் சிவானந்தம்)

இதமான காலைப் பொழுதொன்றில் இவான் டிமித்திரிச் செர்வியக்கோவ் எனும் அருமையான அரசாங்க எழுதுவினைஞன் ஒருவன் ஆர்க்கேடியா அரங்கின் முதலாம் ஆசனங்களின் இரண்டாம் வரிசையில் அமர்ந்தபடி க்லோசஸ் டெ கோர்னவி அரங்க நிகழ்வைத் தனது தொலைநோக்கியூடாகப் பார்த்துக் கொண்டிருந்தான். நோக்கியவாறே ஆனந்தத்தின் உச்சியை எட்டிவிட்டதாக உணர்ந்தான். "ஆனால் திடீரென்று". கதாசிரியர்கள் சொல்வது சரி: வாழ்க்கை வியப்புக்கள் நிறைந்தது தான்! ஆனால் திடீரென்று அவனது முகம் சுழித்தது, அவனது கண்கள் மறைந்து போயின, அவனது சுவாசம் தடைப்பட்டது... அவன் தனது தொலைக் காட்டியைக் கண்களிலிருந்து அகற்றிக் குனிந்தான்... "அச்சு!!". நீங்கள் நினைப்பது போல, அவன் தும்மினான். எவரும் எங்கேயும் தும்முவது கண்டனத்துக்குரியதல்ல. விவசாயிகள் தும்முகிறார்கள். பொலிஸ் மேலதிகாரிகளும் தும்முகிறார்கள். சிலசமயம் அதிகாரிகளுங் கூடத் தும்முகிறார்கள். பவிசுள் எல்லாருமே தும்முகிறார்கள். செர்வியக்கோவ் எவ்வகையிலும் குழப்பமடையவில்லை. தனது கைக்குட்டையால் முகத்தைத் துடைத்தான். பண்பான ஒரு மனிதன் போன்று தனது தும்மலால் யாரையும் குழப்பி விட்டேனோ என்று சுற்று முற்றும் பார்த்தான். அப்போது அவனைக் குழப்பம் மேற்கொண்டது. அவனுக்கு முன்னால் முதல் வரிசையில் அமர்ந்திருந்த ஒரு முதியவர் கவனமாகத் தனது வழுக்கைத் தலையையும் கழுத்தையும் தனது கையுறை ஒன்றால் கவனமாகத் துடைத்தபடி தனக்குள் வைதபடி முணுமுணுக்கக் கண்டான். அந்த முதியவர் போக்குவரத்துப் பகுதியிற் பணியாற்றும் பொதுத்துறை மேலதிகாரி பிரிஸ்ஷலோவ் என்று செர்வியக்கோவ் அடையாளங் கண்டான்.

"நான் அவர் மீது எச்சில் தெறித்து விட்டேன்" என்று செர்வியக்கோவ் நினைத்தான். "அவர் எனது பகுதியின் தலைவரல்ல என்றாலும் இது சங்கடமானது. நான் மன்னிப்புக் கேட்க வேண்டும்".

செர்வியக்கோவ் ஒருமுறை இருமினான். முழு உடலையும் முன்னால் சாய்த்து மேலதிகாரியின் காதினுள் "மாட்சிமை தங்கிய ஐயா, மன்னிக்க வேண்டும். நான் உங்கள் மீது எச்சில் தெறித்து விட்டேன்" என்று குசுகுசுத்தான்.

"பரவாயில்லை. பரவாயில்லை".

"கருணையோடு என்னை மன்னிக்க வேண்டும்... நான் வேண்டுமென்று செய்யவில்லை"

"ஆ. பேசாமல் இரும்! என்னைக் கேட்க விடும்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செர்வியக்கொவுக்கு திகைப்பாகி விட்டது. முட்டாள் போல புன்னகைத்தவாறு மேடையை நோக்கத் தொடங்கினான். நோக்கிய போதும் அவனால் ஆனந்தத்தில் உச்சத்தை உணர முடியவில்லை. அவனது மனச் சங்கடம் அவனை அல்லற்படுத்தியது. இடைவேளையின் போது பிரிஸ்ஷலோவை நோக்கிச் சென்று அவருக்கு அருகாக நடந்து தனது வெட்கத்தை மீறி முணுமுணுத்தான்:

"மாட்சிமை தங்கிய ஐயா, உங்கள் மீது எச்சில் தெறித்து விட்டேன். மன்னிக்க வேண்டும்... பாருங்கள்... நான் அவ்வாறு விரும்ப..."

தனது கீழுதட்டைப் பொறுமையின்றி அசைத்தவாறே "ஆ, அது போதும்... நான் அதை மறந்துவிட்டேன். நீ அதையே சொல்லிக் கொண்டு போகிறாய்" என்று மேலதிகாரி கூறினார்.

"அவர் மறந்து விட்டார், ஆனாலும் அவரது கண்ணில் ஒரு கொடுமையான ஒளி தெரிகிறது" என்று நினைத்தவாறே செர்வியக்கொவ் சந்தேகத்துடன் மேலதிகாரியை நோக்கினான். "அவர் கதைக்க விரும்பவில்லை. நான் வேண்டுமென்றே செய்யவில்லை என்று... இது இயற்கை நியதி என்று... நான் அவருக்கு விளக்கப்படுத்த வேண்டும் அல்லது நான் வேண்டுமென்றே துப்பினேன் என்று அவர் நினைப்பார். அவர் இப்போது நினைக்கவில்லை, ஆனாலும் பிறகு நினைப்பார்!"

வீடு திரும்பியதும் செர்வியக்கொவ் தனது மனைவியிடம் தான் நன்நடத்தை பிசகியது பற்றிச் சொன்னான். அவனது மனைவி அதைச் சில்லறை விடயமாகக் கருதியதாக அவனுக்குத் தோன்றியது. அவளுக்கும் கொஞ்சம் பயம் ஏற்பட்டாலும் பிரிஸ்ஷலோவ் வேறொரு பிரிவில் இருந்தார் என்று அறிந்ததும் ஆறுதலடைந்தாள்.

"என்றாலும், நீர் போய் மன்னிப்புக் கேளும். அல்லது அவர் உமக்குப் பொது இடங்களிற் பழகும் முறை தெரியாதென்று நினைப்பார்" என்றாள்.

மறுநாள், செர்வியக்கொவ் புதிய சீருடையொன்றை அணிந்து தனது தலைமுடியையும் திருத்திவிட்டுக் கொண்டு பிரிஸ்ஷலோவிடம் விளங்கப்படுத்தப் போனான். மேலதிகாரியின் வரவேற்பறைக்குள் நுழைகையில் பல மனுதாரர்களையும் அவர்களிடையே அவர்களை நேர்முக விசாரணை செய்து கொண்டிருந்த மேலதிகாரியையும் கண்டான். பல மனுதாரர்களை விசாரித்த பின்பு கண்களை

# ஏ மாற்றத்தின் வயிறு

வே. தினகரன்

ஏறிடும் மேடைகள் தோறும்
ஏற்பாட்டால் மாலைகள் ஏறும்
கரம் தூக்கிப்பருக்கி முன்னால்
இவர் கூச்சல் 'வளர்ச்சி' பற்றிப்பேசும்
வாழும் மக்களுக்கு முரணாம் - இவர்
வாக்கில் முகம்மலர்ந்து பேசும்
போதும் போலி வேசமெல்லாம்
ஓர் நாளில் அழிந்தழிந்து போகும்
உழைப்பிலும் என்னுயிரின் மக்கள்
உண்மை மகிமையை ஏறும்.

ஓட்டைப் பானையிலே நண்டும்
உருண்டு புரளுவதைக் கண்டோம் - அதன்
ஓசை முழக்கமென்று பேச்சும்
உண்மை பொய்யென்று காண்போம்.
வாழ்க்கை மாற்றும் மீட்பில்லை என்று
வாழ்வெல்லாம் என்ன பயன் உண்டு
துன்பம் என்றுமில்லை என்று
துணிவு கொண்டு எதிர்நின்று
துயர் போகும் தூரத்தே கண்டு
தொலைதூரம் நடந்த துணிவுண்டு.

வாழும் நாட்களிலே நாமும் - பிறர்
போற்றிட வாழ்ந்திட வேண்டும்.
உழைக்கும் மனிதர் எல்லோரும்
உயர்வடைய திண்ணம் கொள்ளவேண்டும்.
யார் நபர் எதைச் சொன்னாலும் - அதன்
உண்மையறிவை கண்டறிதல் வேண்டும்
மாற்றம் நிச்சயமாய் தோன்றும்
மனதில் மாற்றம் வருமாயின்
மன மாற்றம் மட்டும் பயனில்லை
செயல்பாட்டில் மாற்றமில்லையாயின்.

மெய்யும் மறைத்து ஒரு நூறு
பொய்யாய் வசனங்கள் இரு நூறு
உழைப்பவர் பார் யாவிலும்
விடுதலையில்; விளைவுகளில் பேதங்களில்லை
சாதிகள் சொல்லி 'தொழில்' செய்யும்
"பெருந் தலைவர்" சாத்தானின் பிள்ளை.
தேசம் செழித்திருக்க வேண்டி
செயல் மீறும் மனிதர் மேலோர்
துயர் யாது என்றறிந்து சொல்லி
இடர் போக்கி உழைப்பவர் தலைவர்.
எல்லோரும் ஓர் நிறை என்று
சொல்லும் சமதர்மம் புலமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்த்தி செர்வியக்கோவை நோக்கினார்.

''மாட்சிமை தங்கிய ஐயா, நேற்று, உங்களுக்கு நினைவிருக்குமென்றால், ஆர்க்கேடியாவில் நான் தும்மித் தற்செயலாக எச்சில் சிதறி... மன்னி...'' என்று தொடங்கினான்.

''என்ன விழல் கதை... சம்மந்தா சம்மந்தமில்லாதது! உமக்கென்ன வேண்டும்?'' என்று மேலதிகாரி அடுத்த மனுதாரரிடம் திரும்பினார்.

''அவர் கதைக்க மாட்டார்'' என்று நினைத்த செர்வியக்கோவுக்கு முகம் வெளிறியது''. அப்படியென்றால் அவர் கோபமாயிருக்கிறார்... இல்லை. இதைவிட்டு வைக்க இயலாது... நான் அவருக்கு விளக்கப்படுத்த வேண்டும்''.

மேலதிகாரி இறுதி மனுதாரருடன் பேசி முடிந்து தனது அலுவலகத்தின் உள் அறைக்குத் திரும்பிச் செல்கையில் செர்வியக்கோவ் அவரை நோக்கி ஒரு அடியெடுத்து, ''மாட்சிமை தங்கிய ஐயா! மாட்சிமை தங்கிய உங்களைச் சிறிது சிரமப்படுத்துவதென்றால், இது மனவருத்த உணர்வினால் தான்...! நீங்கள் கனிவுடன் என்னை நம்புவீர்களென்றால் அதற்கு ஒரு நோக்கமும் இருக்கவில்லை'' என்று முணுமுணுத்தான்.

மேலதிகாரி ஒரு சோகமான முகம் காட்டியபடி தனது கையை அசைத்தார்.

அறைக்குச் சென்று ''ஐயா, நீர் நன்றாகச் சும்மா கேலி செய்கிறீர்'' என்று சொல்லியபடி கதவைச் சாத்தினார்.

''இதிலென்ன கேலி?'' என்று செர்வியக்கோவ் யோசித்தான். ''அப்படி ஒன்றுமேயில்லை! இவர் ஒரு மேலதிகாரி. ஆனால் இவருக்கு விளங்கமாட்டேனென்கிறது. அது தான் இவருடைய மாதிரி என்றால் இந்தத் திமிர்பிடித்த ஆளிடம் இனி மன்னிப்புக் கோர மாட்டேன். நாசமாகப் போகட்டும். அவருக்கு ஒரு கடிதம் எழுதுவேன், ஆனால் விட்டுவிட மாட்டேன். கடவுளாணை, விட்டுவிட மாட்டேன்''.

வீடு திரும்பும் போது இவ்வாறு சிந்தித்த செர்வியக்கோவ் கடிதம் எழுதவில்லை. யோசித்து யோசித்துப் பார்த்தும் கடிதத்தை வரைய முடியவில்லை. மறுநாள் அவரிடம் சென்று நேரில் விளக்கப்படுத்த வேண்டியாயிற்று.

''மாட்சிமை தங்கிய ஐயாவை நேற்று நான் குழப்பியது'' என்று அவன் முணுமுணுத்த போது மேலதிகாரி தனது கண்களைக் கேள்வி கேட்குந் தோரணையில் மேலே உயர்த்தினார்.

''நீங்கள் சொல்லியருளியது போல உங்களைக் கேலி செய்யவல்ல. நான் தும்மிய போது உங்கள் மீது எச்சில் தெறித்ததற்காக மன்னிப்புக் கோரினேன்... கனவிலும் உங்களைக் கேலி செய்ய நான் நினையேன், நான் உங்களைக் கேலி செய்யத் துணிவேனானால், நாங்கள் எல்லோரும் கேலியில் இறங்கினால் மனிதருக்கு மரியாதையே இல்லாமற் போய்விடும். பிறகு...''

''போய்த் தொலை!'' என்று மேலதிகாரி சீறினார். அவரது முகம் கடுஞ் சிவப்பானது. அவரது உடல் முழுவதும் நடுங்கியது.

அச்சத்தால் விறைத்த செர்வியக்கோவ் ''என்ன?'' என்று முணுமுணுத்தான்.

''போய்த் தொலை!'' என்று நிலத்தில் உதைத்து அதிகாரி மீண்டுஞ் சொன்னார்.

செர்வியக்கோவின் வயிற்றைப் பிய்த்தெடுத்தது. எதையும் காணாதவனாய் எதையுங் கேளாதவனாய் அவன் கதவை நோக்கி விரைந்து வீதியில் இறங்கித் தடுமாறியபடி சென்றான்.... இயந்திரம் போல வீட்டை அடைந்ததும் தனது சீருடையைக் கூடக் கழற்றாமல் சோபா நாற்காலி மீது சரிந்து இறந்து போனான்.

---

# தாயகம்

## வாசகர் வட்டங்கள்

தாயகம் வாசகர்களை ஒன்றிணைப்பதற்காகவும் ஆக்கபூர்வமான விமர்சனங்களை வெளிப்படுத்திப் பரந்தளவில் தாயகம் சஞ்சிகையைப் பிரபல்யப்படுத்தவும் எழுத்தாளர்களையும் வாசகர்களையும் இலக்கிய ஆர்வலர்களையும் அவர்கள் வாழும் பகுதியில் பத்துப் பேருக்கு உட்பட்டதாக வாசகர் வட்டங்களை அமைக்கும்படியும் அவற்றிடையே இணைப்பினை ஏற்படுத்துவதற்கும் தாயகம் ஆசிரியர் குழுவுடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

ஆசிரியர் குழு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னுமோர் தலைமுறைக்காய் வன்மையின் வரலாறு

செம்மலர் மோகன்

தோண்டியெடுத்துத்
தொல்பொருளாய் அடுக்கியதில்
தொடரும் பல ஆராய்ச்சிகள்

ஆண்டையும் மாதமும்
கிழமும் விளைச்சலும்
வாழும் வடிவமுமாய்
வரலாறுகள் யுகங்களை நீளு...

எம் ஏழேழு தலைமுறை
மிச்ச சொச்சங்கள்
இயல்பு வாழ்வு, போராட்டம்
சிறைப்பெனவடுக்கிப்
புருவமுயர்த்திப் புதுமைகளாய்
புனைவோர் இன்னும்.

புதைகுழிகள் என்புகள்
கைகள் தலைகளென
ஒன்றின் வேறாய்
பொருத்தி வியந்து
அவைகளைப் படம்புதும்
புதையலானோர் ஆய்வின் அகழ்வில்

இன்னுமோரேழு தலைமுறை
கடந்தின்று தொலைத்த
இம்மண்ணின் புதுமைப்படும்


இன்னும்...
எம் சோதரர் என்புக் குழிகளும்
மாறுபட்ட தடயங்களும்
விசித்திரமான விஷயங்கள்
சொல்லும்

ஜோடிகள் தசைதாண்டி
என்புகளின் ''டிஎன்ஏ''வென
தடயங்கண்டு பரிசோதிக்கு மீறில்
இதயமற்ற மனிதப்பற்கண்டு
மருண்டிருக்கும்...

வாழ்வின் மேன்மையைச்
சத்தியம் கடமையோடு
நீதி நியாயம் பாடி எம்
தர்ம இலட்சியஞ்செய்
இலக்கியந் தந்த எம்
தந்தையின் தந்தைவழி
மாறுபட்ட மனித குணங்களைக்
கேவலம் கண்டு கலங்கி நிற்கும்
அடுத்துவரும் சந்ததிக்காய்
மாறுபட்ட மனித குணம்
தரமறுக்கும் மீறில்
இனியுமோர் இம்சை
சொல்லும்
ஆய்வுகளின் அகழ்வுகளே
அகற்றிநிற்கும்

# நீயும் நானும்

மோ. இராஜ்மோகனசர்மா



நமது தேசத்தின் கற்பகதருவாம்
வளர்த்ததால் பயனடைந்தோர் பலர்
யுத்தப் போராட்டத்தின்
வக்கிரங்களால் வாடிப் போனவர்கள்
நாம் எத்தனை பேர்கள்?

உன் பயன்களை அறிந்ததால் தான்
உன் இனத்தை அழிக்கிறார்களோ
அல்லது அழிப் போராட்டத்தால்
உன்னை சாகடிக்க நினைக்கிறார்களோ
செல் மேகங்களால் தான்
நீ இப்படியானாயோ என்று பார்த்தால்
இயற்கைக்குக் கூட இரக்கமில்லாமல்
சுனாமியாய் வந்து சூழ்ந்தழித்தது
இன்று நீயும் தனிமரம்
நானும் தனிமரம்
எம்மால் தான்
சுற்றுமும் தளிர்க்கும் இனி...

(நாயகம் இதழின் முன்அட்டைப்
படத்துக்கான கவிதை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழை மரங்கள்

திக்குவல்லை கமால்



அல்லாடிக் கொண்டிருந்த மரீனாவின் கல்யாணப்பேச்சு அல்லாஹ்வின் கிருபையால் ஸ்திரமாகியிருக்கிறது. இருபத்தாறு வயதிலாவது காரியம் சரிப்பட்டு வந்ததையிட்டு இர்பான் நானா தம்பதிக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அவள் பெரிய அழகியோ, அவர்கள் பெரிய வசதி படைத்தவர்களோ அல்ல. "எங்களுக்கு ரெண்டு காம்பராவெண்டாலும் குத்தமில்ல. சொந்தமா வீட்டு வசதி வேணுமிதாங்கோ. எங்களுக்கிட்டேம் இல்ல. ஒங்களுக்கிட்டேம் இல்ல. நாளைக்கி புள்ளகுட்டி கஷ்டப்படுகிறதப் பாக்கேல". மாப்பிள்ளையின் வாப்பா நியாயமான வேண்டுகோள் விடுத்தார்.

"அது நாங்க எப்பிடிச்சரி செய்றோம். முன்னுக்கிருக்கிற காணித்துண்டு பத்தி பேச்சளவு எங்கடதான். நாங்க அடுத்தாளும் போட்டுக்கி. ரெண்டு காம்பரா போட்டுக் கொளாம கலியாணத்துக்கு டேட் தாரல்ல. அவ்வ சரியா" இர்பான் நானா உறுதிபட வாக்களித்துவிட்டார்.

அவருக்கு வேறு பெண்பிள்ளைகள் இருக்கவில்லை. வளர்ந்துவரும் இரு ஆண்பிள்ளைகள் உள்ளார்கள். அதனால் பிரச்சினையில்லாத விஷயமென்றுதான் மாப்பிள்ளை வீட்டார் சம்மதித்துள்ளார்கள்.

"சரி இப்ப பாத்துப் பைக்கிறது சரிவாரல்ல. கொஞ்சம் கொஞ்சமா வீட்டு வேலையத் தொடங்கோணும். அடுத்தாளும் போட்டு ரெண்டு வருஷமாகீட்டு. அதுவாவது செஞ்சி வெச்சது எவளவு லேசன். இல்லாட்டி அதுக்கும் ஒரு கவலைக்குப் போற" இர்பான் நானா மனைவியைப் பார்த்துச் சொன்னார்.

"முந்திமுந்தி பௌண்டேஷனுக்கு மண் நெறக்கோணுமே பத்து டெக்டர் மட்டும் தேவைப்படும். அந்த டைமில பாம் சென்னது எனக்கு நெனவு. சம்பிய சல்லிக்கி முந்தி அதும் செய்யோம்". மனைவி தனது விருப்பங்களைத் தெரிவித்தாள்.

அர்ஷாவின் அப்புவின் டிரக்டருக்கு ஓடர் கொடுத்துவிட்டார்கள். அன்று பகலைப்போ முதலாம் டிரக்டர் மண் வந்தபோது அவர்கள் வியப்படைந்து போனார்கள்.

காணித்துண்டின் இருபக்க வேலிகளோடு வீடுகள் இருந்தன. ஒரு பக்கமாக ஒட்டி மண்ரோடு சென்றது. மறுபக்கமாக ஹாஜியாரின் தென்னந்தோப்பு நீளும்படி கிடந்தது. அந்தப் பகுதி சிறார்களுக்கு அதுதான் விளையாட்டு மைதானம்.

"ரோட்டுப் பக்கத்தால போகேல. காணிப் பக்கத்தால ரிவேர்ஸில எடுத்தா வேலிய கொஞ்சம் வெட்டச் சிப் டெக்டர அப்பிடியே உள்ளுக்கெடுக்கேலும்". டிரைவர் சொன்னான்.

வேலியைக் கொஞ்சம் உடைப்பதுதான் நட்டம். மற்றப்படி எந்தப் பாதிப்புமில்லை. தென்னை மரங்களுக்கிடையால் டிராக்டரை லேசாக எடுத்துவிடலாம்.

"சரி அப்ப அப்பிடிச் செய்வோம்" என்றார் இர்பான் நானா.

முதல் நாள் ஒரு முறையும் இரண்டாம் நாள் மூன்று முறையும் மண் கொண்டு வந்தபோதும் மூன்று துண்டைத்தான் நிறைக்க முடிந்தது. இன்னும் ஐந்தாறு லோட் தேவைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயிருந்தது.

"என்ரை வேலைய தொடங்கப் போறியளோ?" என்றவாறு மாலையில் அந்தப் பக்கமாக வந்தார் ஹாஜியார்.

"ஓ ... கலியாணமெருங்க ரெண்டு கிழமையாவது கொட்டித்தரச் சொல்லியாங்க ஹாஜியார்"

"அப்பிடியா..., கல்லு, மண், சீமெந்தி பெய்த்திருக்கிய வேலக்கி ஜேரி வேலயல்ல...."

"என செய்யவன் அப்பிடிச்சரி செய்யோனுமோன்"

"ஓ வைரமாயிக்கும்" ஹாஜியார் வந்த நோக்கை நிறைவு செய்து கொண்டு நகர்ந்தார்.

அவர் கவலைப்பட்டிருந்த காலமிருந்துண்டு. ஒருநாள் இடத்தை விற்கப் போகிறார்கள், வேண்டிக் கொள்ளலாமென்று உறுதியாக நம்பியிருந்தார் அவர். இதனையும் வாங்கிவிட்டாரென்றால் அந்தப் பகுதி முழுவதும் அவர் கைக்கு வந்துவிடும்.

முப்பது வருடத்திற்கு முன்பு இடிந்து விழுந்த ஒரு பழைய வீட்டை வாங்கிக் கொண்டு வந்து காலடி வைத்தவர்தான் அவர். அதனைத் துப்பரவுசெய்து புது வீடு கட்டினார். அக்கம் பக்கமாக கொஞ்சம் கொஞ்சமாக வாங்கி, இன்னொரு வீடு கட்டி மகளுக்குச் சீதனம் கொடுத்தார். இன்றும் இரண்டு வீட்டுக் கூடியளவு நிலம் பிடித்திருந்தார். அவரது எதிர்பார்ப்பு தவறிப் போய்விட்ட கவலை அவரை விட்டபாடில்லை.

---

இர்பான் நானாவின் மனைவி பக்குத்து வர்க்காரி. நிறைய இனசனம் உள்ளவள். எல்லோரும் தொழில் செய்துகொண்டு வாழ்பவர்கள். வரவு செலவு வந்தால் கைபோட்டுக் கொள்ளும் தன்மை கொண்டவர்கள்.

"நாலஞ்சி ஞாயத்துக் கெழும வெளிக்கிடுவோம். எல்லாரும் ஊரில நிக்கிய நாளேன். நாங்க பெய்த்துச் செல்லியதுதான் அவங்களுக்குப் பெரிசி"

"சரி போம். செம்பர பாக்கப்படாது".

மனைவியின் யோசனையை அங்கீகரித்து விட்டார் அவர்.

நாளைக்கு மண்கொண்டுவர வேண்டாமென்று அர்சலின் அப்புவிற்கு தகவல் கொடுத்து விட்டு, அடுத்தநாள் சுபஹு தொழுததும் இருவரும் வெளிக்கிட்டனர்.

கலியாணப் பேச்சின்போது அவளது உம்மாவும் தம்பியும் வந்திருந்ததால் விஷயம் குடும்ப வட்டாரத்தில் நிச்சயம் அறியப் பட்டிருக்கும்.

"ஆ வாங்கோ வாங்கோ கலியாணமுட்டாரு"

போகுமிடமெல்லாம் இவ்வாறான வரவேற்பு ஆரவாரம் நடந்தது.

"மாப்பிள எப்பிடியான்? எனத்தியன் யாவாரம்? நல்லாத் தேடிப் பாத்தா?" இப்படிப் பலவாறான விசாரித்தல்கள் தொடர்ந்தன.

எவரும் முகம் கோணவில்லை. வரவேற்று மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இர்பான் நானாவுக்கு நம்பிக்கை பிறந்துவிட்டது. அவர் இதுகாலவரையில் கட்டம் குடும்பம் சொந்தமென்று எவரிடமும் கைநீட்டியதில்லை. ஆபத்து அந்தரமென்று எவரும் உதவி செய்யவேண்டிய நிலைமைகளும் ஏற்படவில்லை. சின்னத்தொழில் செய்தாலும் சீராக குடும்பத்தை நகர்த்திய பிரகிருதி மட்டுமல்ல நல்லது கெட்டது வரும்போது மற்றவர்களுக்கு தனது பங்களிப்பை நல்கியிருக்கிறார்.

குடும்ப வட்டத்துக்கு அப்பால் நட்பு வட்டாரத்திலும் கூட பலபேரின் முகங்கள் அவர் மனதிலே தோன்றி மறைந்தன. எப்போதும் உதவிசெய்ய எதிர்பார்த்திருப்பவர்கள்.

"அல்ஹம்துலில்லா நாம் நெனச்சத்தப்பாடு பரக்கத்தாயிக்கி"

"அல்லா எங்கள் வாடபுடுகிய" அவளும் பூரித்துப்போனாள்.

---

அன்று அவர்கள் வீட்டுக்கு வரும்போது நன்றாக இருட்டிவிட்டது. மகன்மார் இருவரும் சாப்பிட்டு விட்டுத் தூங்கியிருந்தனர். உம்மாவும் வாப்பாவும் எங்காவது போய் வந்தால் குடைந்து குடைந்து செய்தி கேட்பவள் மரீனா. இன்று அவளால் கேட்கமுடியுமா என்ன? இருந்தும் இருவரதும் நடவடிக்கைகளில் தெரிந்த மகிழ்ச்சி அவளுக்குப் பல செய்திகளைக் கூறத் தவறவில்லை. மரீனா நித்திரைக்குப் போகத் தயாரானாள்.

இடைவிடாது இருவரும் கதைத்துக் கதைத்தே நேரம் ஓடிக்கொண்டிருந்தது.

"எட்டு போறத்திக்கும் பெய்த்தே செல்லிட்டு வந்திட்டோம். முன்னுக்குவட்டு மனிசனுக்கு செல்லாட்டிச் சரில்லேன். முப்பது வருஷமா பக்கத்தில நிக்கிய நல்ல வசதிகாரன். எதுக்கும் ஹாஜியாருக்கிட்டேம் கொஞ்சம் கேட்டுப் பாத்துச் செல்லுங்கோ" மனைவி வற்புறுத்தி நின்றாள்.

"வசதிக்கிய மனிசன்தான். பேசுவதற்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தான். ஆனா தாருக்காவும் உதவி செய்யென்டு நானொன்டா கேள்விப்படேல்ல". இர்பான் நானா துறை விருப்பக் குறையை வெளிப்படுத்தினார்.

"செல்விச் செல்லியா மனிசருக்கு உதவிசெய்த? ம்... தாறபோதும் கதயால எங்களுக்கு வேலில்ல.. நாங்க செல்வியத்தச் செல்லேலும்."

"முனி செய்த எப்பிடிப் போனாலும் எங்கட காணித்துண்ட எப்பிடிச்சரி வருக்குக் கொண்டாத்த.... சந்தில வரணும் ஆள்போட்டு ஆள்போட்டுப் பேசினன். எங்களுக்கும் ஒரு கொமரிக்கி. அவளக் குடுக்கச் செல்லேல தேவப்படுமென்டு யோசின பண்ணல்லேன். மருதுவங்க எப்பிடி நாரபார போனாலும் குத்தமில்ல. நாங்க நல்லா சக்கோனும்... அன்ன அந்த ஜாதி கொளும்."

"ம் இனி நாங்க விக்கப்போறென்டு ஊருசரி செல்லிக்கும்.... சரி சரி அத உடுங்கொ. அவரு பக்கிர் போகமுந்தி நாலைஞ்சி வெள்ளக்கி எதுக்கும் பெய்த்துப் செல்லுங்கோ"

"ம்... சரி சரி" மனைவியின் அச்சரிப்புத் தாங்க முடியாமல் சம்மதித்தான்.

இரவு பதினொரு மணியாகிவிட்டது. பேசிப்பேசி நேரம்போனதே தெரியவில்லை. ஜன்னலை சாத்தச் சென்றபோது நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டு மாமரத்திலிருந்து வெளவால்கள் சடசடத்துப் பறந்தன.

மனைக் களைப்பு அவர்களை நிம்மதியான தூக்கத்தில் ஆழ்த்தியது. சுபஹூக்குச் சொன்ன பாங்கு அவர்களின் செவியைத் தட்டவில்லை.

அவர் சுபஹூ தொழுதுவிட்டு யாஸீன் ஓதி முடிக்கையில் அவள் கோப்பிக் கோப்பையோடு வந்தாள்.

"ஹாஜியாரும் தொழுதிட்டு வந்தா ஆறுமணியாகும் காட்டப் பேக்கோர்ட்டில சந்திக்கேலா நிக்கிய....." அவள் மீண்டும் ஞாபக மூட்டிவிட்டுச் சென்றாள்.

பொலபொலவென்று விடிந்துகொண்டு வந்தது. இர்பான் நானா ஹாஜியாரைச் சந்திக்க வெளியிறங்கினார்.

அவருக்கு திக்கென்றது. ஒரு கணம் அதிர்ந்துதான் போனார்.

"இங்க வாங்கொ... கொஞ்சம் ஓடி வாங்கொ" சத்தமிட்டு அழைத்தார் மனைவியை.

என்னவோ ஏதோவென்று ஓடி வந்தவளுக்கு ஒன்றும் சொல்ல வேண்டிய தேவை இருக்கவில்லை.

நேற்று இருட்டியபின் வந்தவன் கண்களில் படாத காட்சி.

தென்னை மரங்களுக்கிடையிடையே அழகாகக் சூழ் நெருங்கச் சின்னச்சின்ன வாழைமரங்கள் நடப்பட்டிருந்தன. இனி அதற்கூடாக ட்ரக்டர் அல்ல சைக்கிள் கூடப் போகமுடியாது.

"அவரத்தால கல்லுமண் கொண்டு போனென்டு வைக்கலுக்கு நட்ட மொன்டுமில்ல.. ம்... கல்பில ஈடமில்ல. இப்ப ரோட்டில மண்ணைக்கொட்டி ஆள்போட்டிழுக் கவேணும்... இதுமொரு செலவேல".

அவள் ஒன்றுமே பேசாமல் கீழே பார்த்தபடி நின்றாள்.

# அகழுகி

**இதயராசன்**

அலைபாயும் உணர்ந்த ஞானியாய்
கண்களை மூடித் தியானத்தில்
மனத்திரையில் வர்ணக் கலவையாய்
அடக்கி வைத்த ஆசைகள்
தலையை நீட்டி நீட்டி நர்த்தனமிடும்
உடலும் உள்ளமும்
குருஷேத்திரமாய் குருதி சிந்தியபடி.

ஒழுக்க போதனையில் ஒருமுகமாகி
பருவத்தின் தேவைகளைப் புறந்தள்ளி
மாயக்கோட்டை கட்டி - அதில்
புகுந்து விளையாடும் 'அகழுகியாய்'
போலி வேஷங்கள் பல புனைந்து
சூழலை மூடிக்குச் சுதந்திரம் இழந்து
தன்னையே ஏமாற்றும்
தகடுத்தனங்கள் நமக்குள்ளேயே!

எண்ணச் சமநிலையில்
இழிநிலை வாய்த்தமையால் - நம்மை
புனிதருள் புனிதராய்ப்
புனைந்து பிரபஞ்ச சஞ்சாரியாய்.
வட்டத்துள் வட்டமிட்டு
மனச்சிறையில் கைதியாய்.
'ஆசைக்' குணம் கொண்டு
முரண் நிலைகளில் முடமிழந்து
தற்கொலை முனையில்
தஞ்சமயிர் சேர்ப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசகர் மடல்கள்

கடந்த ஏப்ரல்-ஜூன் தாயகம் இதழில் வெளிவந்த ''படைப்பிலக்கியமும் பல்கலைக்கழகங்களும்'' அங்கீகாரத்துக்கான ஆவல் என்ற கட்டுரை தொடர்பாக:

திரு. சிவசேகரத்தின் கருத்துக்களுடன் முற்று முழுதாக உடன்படும் நான் சில மேலதிக விபரங்களையும் விரும்புகின்றேன். அண்மையில் எனது நண்பர் ஒருவர் ''நேற்று நான் ஒரு வெள்ளைக் காகம் பறந்ததைக் கண்டேன் என்று ஒரு உயரதிகாரி சொன்னால் அவருக்குக் கீழே இருப்பவர் 'நானும் பார்த்தனான் சேர், குருவிப் பறந்தது' என்று சொன்னால் தான் சீவிக்கலாம். இல்லாவிட்டால் சீவிக்க முடியாது'' என்றார். ஒருவர் எவ்வளவு பெரிய அறிவாளியாக இருந்தாலும் அவரது பெயருக்குப் பின்னால் ஒரு நீளமான வால் இல்லாவிட்டால் அவர் செல்லாக் காசே. அதே நேரம் ஏற்கனவே கூறியது போல் வெள்ளைக் காகம் பறந்ததாகப் பேராசிரியர்கள் கூறினாலும் நிச்சயமாக யாரும் மறுக்கப் போவதில்லை. மறுப்பவர்கள் முட்டாள்கள், பிழைக்கத் தெரியாதவர்கள் என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

ஒரு சுவாரஸ்யமான விடயத்தையும் கூற விரும்புகின்றேன். 1994ஆம் ஆண்டு பேராசிரியர் ஒருவர் (இவரை வி.வி.ஐ.பி என்றே பெயரிடுகிறேன்) தான் மாநாடுகளிலும் கருத்தரங்குகளிலும் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிட்டார். இந் நூலில் சில தகவல் பிழைகள் காணப்பட்டன. நான் நூலில் காணப்பட்ட தகவல் பிழைகளைச் சுட்டிக்காட்டி சரியான தகவல்களையும் வழங்கி அதற்கு ஆதாரமாக சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ராகவன், Sir Emmerson Tennent ஆகியோரின் நூல்களை மேற்கோள் காட்டி ஒரு விமர்சனம் எழுதிக் கொண்டு பத்திரிகை அலுவலகங்களை நாடினேன். முதலில் போன பத்திரிகையின் ஆசிரியர் நீர் விமர்சனம் எழுதுவதானால் உமது பெயருக்குப் பின்னால் ஒரு நீளமான வால் இருக்க வேண்டும் இல்லாவிட்டால் யாரோ விசரன் அலட்டுகிறான் என்று தான் வாசகர்கள் நினைப்பார்கள் என்றார். அடுத்தவர் பேராசிரியரின் பெயரைக் கூறி அவரை விமர்சிப்பதற்கு உமக்கு என்ன தகுதி இருக்கிறது என்றார். அவரை விமர்சித்து எழுதவில்லை நூலில் காணப்படும் தகவல் பிழைகளை ஆதாரத்துடன் சுட்டிக் காட்டியுள்ளேன் என்றேன். அதற்கும் ஒரு தகுதி வேண்டும் என்றார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக எம்.ஏ. பட்டதாரியான அந்த ஆசிரியர்.

இலங்கை வானொலியில் 'இன்று ஒரு தகவல்' நிகழ்ச்சியில் தென்கச்சி சுவாமிநாதன் ஒரு முறை கூறிய துணுக்கொன்று ஞாபகத்துக்கு வருகிறது. ஒருவன் இறந்து விட்டானாகக் கூறி மயானத்திற்கு எடுத்துச் சென்ற போது இறந்தவர் எழுந்து நான் சாகவில்லை என்று கூற, சுமந்து சென்றவர்களில் ஒருவன் ''ஸ்பெஷலிஸ்ட் சொல்லி விட்டார் நீ இறந்து விட்டாய் என்று. சத்தம் போடாமல் படு'' என்றானாம். இன்றைய இலங்கைத் தமிழ் உலகின் நிலையும் இது தான் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

ந. பரமேஸ்வரன்
கொழும்பு 13

---

சித்திரை - ஆனி 2008 இதழில் வெளியான ''PWD'' சிறுகதையில் பல விடயங்களை இலைமறைகாயாக எல்லோரும் தெரிந்து கொள்ளும் விதமாகக் கூறியிருக்கும் சிவலிங்கம் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள். சில தவறான நம்பிக்கைகள் காரணமாக சுலபமாக ஒரு சிறுவனைக் கொன்றுவிட்டுச் சிரிக்க முடிந்த சிலர் இம் மண்ணில் வாழ்ந்திருக்கிறார்கள்.

பேராசிரியர் சிவசேகரம் அவர்களின் நூல் வெளியீட்டு விழாக்கள் பற்றிக் கூறியிருப்பவை சரியானவை. முன்னுரை, முகவுரை, அணிந்துரை, அறிமுக உரை என அச்சிட்டு வாசிக்கும் ஆர்வத்தை மழுங்கடிப்பவரும்



உள்ளனர். முன்னுரை பெற அலைந்து திரிவது நமது ஆளுமையைப் பாதிக்கின்றது என்பதனை நூலாசிரியர்கள் உணரத் தவறி விடுகின்றனர். சிலரின் பேச்சை வெளியிட்டு விழாக்களில் கேட்டுச் சலிப்படைந்த ஒருவன் நான்.

அத்துடன் இன்னொரு விடயமும் இங்கு சுட்டிக் காட்டப்படுவது அவசியமாகிறது. இலங்கையில் வெளியிடப்படும் இலக்கிய நூல்களை வாங்கி வாசகர்கள் ஆதரிக்காததனால் வெளியீட்டாளர்கள் நட்டப்படுகிறார்கள் என்ற கருத்து அடிக்கடி கூறப்படுகிறது. இக் கருத்துப் பிழையானதல்ல. ஆயினும் இக் கூற்றினை வலியுறுத்தும் வெளியீட்டாளர்களும் சஞ்சிகை ஆசிரியர்களும் இலக்கியச் செயற்பாட்டுடன் தொடர்பான பிறிதொரு விடயத்தினைக் கவனத்திற் கொள்வதேயில்லை.

தமிழ் நாட்டைப் போலன்றி இங்கு எழுதுபவர்களுக்குச் சன்மானம் வழங்கப்படுவதில்லை. இங்கு வெளியாகும் சஞ்சிகைகளின் பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டால் அவற்றிற்கு எழுதுபவர்கள் சன்மானத்தினை எதிர்பார்க்கலாகாது என்றே நான் கருதுகிறேன். ஆனால் செய்திப் பத்திரிகைகளின் வார இதழ்கள் தாம் பிரசுரிக்கும் சிறுகதைகளுக்குச் சன்மானம் வழங்கக் கூடிய பொருளாதார நிலையில் உள்ளன. சன்மானம் பெறாது எழுத்தாளன் தான் எழுதும் முதல் பிரதியையே பத்திரிகைக்கோ சஞ்சிகைக்கோ அனுப்புகிறான். அனுப்பிய அது பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா, அப்படியாயின் எந்த இதழில் பிரசுரமாகும் என்ற தகவலைக் கூட அவனுக்குத் தெரிவிப்பதில்லை. இதனால் தமது ஆக்கம் வெளியாகும் சஞ்சிகையோ பத்திரிகையோ எழுத்தாளனுக்குக் கிடைக்காத சந்தர்ப்பங்கள் பல.

இதனை விட எரிச்சல் தருவது ஏதேனில் தாம் பிரசுரிக்க இயலாதவற்றைத் திருப்பி அனுப்புகின்ற பண்பு நமது சஞ்சிகை, பத்திரிகை வெளியீட்டாளர்களிடம் கிடையாது. குறிப்பிட்ட காலம் காத்திருந்த பின் ஆக்கத்தினை இன்னொரு இதழுக்கு அனுப்புவதாயின் போட்டோ பிரதி வேண்டும் அல்லது ஞாபகத்திலிருந்து மீட்டெழுத வேண்டும். அப்படி அனுப்பிய சந்தர்ப்பங்களில் முன்னையதும் பின்னையதும் ஒன்றாகப் பிரசுரித்து விட்டாலோ அல்லது போட்டியொன்றில் அந்த ஆக்கம் தெரிவாகி விட்டாலோ எழுத்தாளன் மீது பல மூலைகளில் இருந்தும் கண்டனங்கள் எழும். எமது இலக்கிய உலகில் இவ்விதமாக ஒரு நிலை இருப்பது வருத்தத்திற்குரியது.

ஜி. பிரபா

---

சு. முருகானந்தனின் "தாய்" சிறுகதை இக்காலச் சூழ்நிலையில் முதியோரின் அவலநிலையைச் சிறப்பாகச் சொல்லுகிறது. பெண்களைக் கூனி, கைகேயி மாதிரிச் சதிகாரிகள் என்றே அவர் காட்ட முயலுகிறார். இது ஏன்?

தாயைக் கவனிக்கிற சுமை முழுவதையும் மனைவி மீது சுமத்திவிட்ட மகனைக் குற்றவாளியில்லை. வெளியூர் போய்க் காசு அனுப்புவதுடன் கடமை முடிந்தது என்று கை கழுவி விடும் மற்றப் பிள்ளைகள் குற்றவாளிகள் இல்லை. ஆற்றாமையால் இயலாது வேறு வழி தேடுகிற மருமகள் தான் குற்றவாளியா? கதையின் முடிவு வலிந்து திணித்த மாதிரி இருக்கிறது. தாயை நேராமல் விட்ட கையோடு மகனைச் சாகடிப்பது மருமகளுக்கான தண்டனையா?

இன்னமும் எங்கள் ஆண் எழுத்தாளர்களுக்கு பெண்களுக்கும் சமநீதி என்ற கொள்கை உடன்பாடில்லை என்று தான் இந்தக் கதை காட்டுகிறது. முந்திய இதழ்களில் ஆசிரியர் எழுதுகிற கதைகளில் கொஞ்சமாவது பெண்களின் நிலை பற்றி அனுதாபம் இருந்தது. அது அவர் பெண் என்பதாலா?

பூரணி

---

"ஒரு படைப்பாளி தன் படைப்பை விட மேலானவனாக இருக்க வேண்டும்" என்ற மார்க்ஸிம் கார்க்கியின் கூற்றுக்கேற்ப "செல்விருந்தும் வருவிருந்தும்" என்ற கதையில் ஆசிரியரும் கதையை விட மேலானவராக இருக்கிறாரா என்ற ஐயத்தைத் தோற்றுவிப்பதாக படைப்புக் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எழுத்துலக தர்மம் என்று ஒன்று இருப்பதை ஆசிரியர் மறந்து விட்டார் போல எண்ணத் தோன்றுகின்றது. கதை இதுதான். கொழும்பில் வாடகை வீட்டில் குடும்பத் தலைவன் இல்லாமல் தனியே குடும்பம் நடத்தும் குடும்பத் தலைவி கணவனின் தூரத்து உறவினரையும் தன்னோடு வைத்திருக்கின்றார். பண உதவியோ, சரீர உதவியோ செய்வதற்கான மனம் அவர்களிடம் இல்லை. செலவுக்குக் காசில்லாது போதும் கேட்டு வாங்கிச் செலவு செய்யும் குடும்பத் தலைவி இறுதியில் அவர்களை வேறு வீட்டுக்குப் போகச் சொல்ல அவர்கள் போக விருப்பமில்லாமல் அழுதழுது சூட்கேசைத் தூக்கிக் கொண்டு போவதாகக் கதை முடிகிறது.

எம்மைத் தேடிவரும் விருந்தினர்களில் எத்தனையோ ரகம் உள்ளனர். சிலர் வந்த இடத்தில் சிரமம் கொடுக்காது சமாளித்துப் போக நினைப்பார்கள். சிலர் வீட்டை விட வந்த இடத்தில் வசதியாக இருக்கப் பார்ப்பார்கள். அப்படித்தான் இக்கதையில் வந்திருக்கும் உறவினரின் மனப்பாங்கும். அவர்களின் செயற்பாடுகளும் படிப்பவருக்கு அவர்கள் மீது குறைவான கணிப்பீட்டைக் கொள்ளச் செய்கின்றது. ஆசிரியர் கதையை நகைச்சுவையாகவும், யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழிலும் அழகாக நகர்த்திச் செல்கின்றார். அவர் கதையை முடித்திருக்கும் முறையில் திடீரென ஒரு விலகல் ஏற்படுவதை உணர முடிகிறது. காரணம் ஆரம்பத்தில் ஏற்பட்ட உணர்வுகள் அனைத்தும் இறுதியில் அந்தக் குடும்பத் தலைவியின் நடத்தையின் மூலம் அடிபட்டுப் போவதாகக் கருதுகிறேன்.

இன்று எமது தமிழ்ச் சமூகமானது ஒற்றுமை, விட்டுக் கொடுத்தல், பெரியோரை மதித்தல், குரு பக்தி, பிறருக்கு உதவுதல் போன்ற நல்ல பண்புகளிலிருந்து விலகிக் கொண்டு போவதைப் பார்க்கிறோம். இந்த விருந்தோம்பும் பண்பிலிருந்தும் விடுபட்டுப் போகலாம். வீட்டுக்கு வந்தவர் எமக்குச் சுமையாக இருந்தால் வீட்டை விட்டுப் போகும்படி கூறலாம் என்பதற்கு அங்கீகாரம் வழங்குவது போலக் கூட இக்கதை அமைந்துள்ளது. அகமும் முகமும் மலர எத்தவித பிரதியுபகாரமும் கருதாது வந்தோரை ஆதரித்து அனுப்பிய எமது முன்னோர் எமக்கு வழிகாட்டிகளாகத் தெரிவது போல நாமும் எம் எதிர்காலச் சந்ததியினரிடம் ஒரு துளியளவு தானும் கையளிக்க வேண்டாமா? இலக்கியத்தில் கொண்டு வரும் போது சில விடயத்தை நுட்பமாகவும் நாசுக்காகவும் சொல்வதற்கான சாமர்த்தியம் படைப்பாளியிடம் இருக்க வேண்டும்.

தன்னோடு வந்திருப்பவர் தனது மனநிலைகளை உணர்ந்து அனுசரித்துப் போகவிட்டால், அவரை அனுசரிக்க வேண்டிய தேவை இல்லை என்பது போல அதிக குழந்தைகள் பெறுதலை பற்றியும் வேலையை விட்டதை பற்றியும் கணவன் கடமைப்பட்டால் மனைவியும் பிள்ளைகளும் அநாதைச் சீட்டு எழுதிப் பெறுபவர்களா? எனவும் வரும் சொல்லாடல்கள் குடும்பத் தலைவி என்ற பாத்திரத்தை ஒரு படி கீழே இறக்கி விட்டதாகத் தோன்றுகின்றது. இலக்கியத்தின் பணி என்று ஒன்றிருக்கிறது. அது சமூக மேன்மைக்கான பங்காற்ற வேண்டும். ஏனெனில் தமிழ் இலக்கிய வேர்கள் அவற்றை மையப்படுத்துவதாகத் தான் ஆழப் பதிந்து போயுள்ளன. நவீனம் சார்ந்த மாற்றங்களை முதன்மைப்படுத்தி நிற்கும் உலக மயமாக்கல் சூழலில் இலக்கியங்களும் இத்தகைய வழி தவறல்களுக்குள் அகப்பட்டுக் கொண்டு விடக்கூடாது. அந்த ஆபத்திலிருந்து அதனை மீட்டெடுக்கும் பணி படைப்பாளர்களுக்கு உள்ளது என்பது உணரப்படல் வேண்டும்.

ராணி சீதரன்

## “ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தால் பொறாது”

இந்தக் குடும்பத்தை எங்களுக்கு மேட்டுக்குடிக் குடும்பங்களின் அபரிமிதமான வருமானத்தினால் அவர்களின் இளைய தலைமுறையினர் உழைப்புப் பற்றிய அக்கறை தேவையின்றிச் சோம்பேறிகளாய் வீணே பொழுதைப் போக்கி அழிந்து போனவர்களை முதலாவதாகக் குறிப்பிடலாம்.

சாதி, சீதனம் என்ற கட்டுக்களால் தம்மைத் தாமே பின்னிப் பிணைத்து சிலந்தி தான் பின்னிய பின்னல் வலையிலிருந்து தானே விடுபட முடியாது சிதைவுறுவது காட்டப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெற்றார் பசிகளை வைத்து தம் வீட்டு வேலைகளைக் கவனிக்கவிருந்து இவர்கள் எந்த வேலையும் செய்யத் தெரியாதவர்களாக வேலையாட்களிலேயே தங்கி குடும்பம் நடத்துவதும் அன்றி பெண்களை தம் சாதி வர்க்க முரண்பாடுகளால் உரிய பருவத்தில் கட்டிக் கொடாததும் அவர்கள் மேல் தம் பார்வையைப் போட்டுவிட்டு ஆணாய்ப் பிறந்த பாவத்திற்காக அப் பெண்ணிற்கு ஏதும் உதவி ஒத்தாசைகளைச் செய்யாததும் கெட்டாலும் செட்டி கிழிந்தாலும் பட்டு என்பது மாதிரி மனைக்குள் இராசாவாக வெளியில் பரதேசியாக வாழ்கின்றமை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. உயர் குடும்பங்கள் கல்வியிலும் நாட்டமில்லாமல் போதிய செல்வமும் வாய்க்க எல்லாம் தெரியும் நாம் மேலானவர்கள் மேலும் அடைவதற்கு எதுவுமில்லை என்ற அறியாமையும் இருந்து மட்டும் மேல்நிலைக்கு இடமில்லாமல் போகின்றமையும் தெட்டத் தெளிவு.

தொழில் வாய்ப்பிலும் கிடைத்த ஆசிரியத் தொழிலை விட்டு தம் மேம்பாட்டைப் பேணும் கூட எடுத்துக் காட்டும் எட்டுத் தொழிலில் நாட்டம் கொள்வதும் கிடைத்ததைவிட்டு திருப்திப்படாத மனப்பான்மை மனிதப் பண்பின் ஒரு பிழையான கூற்றினை எடுத்துக்காட்டுகின்றது.

கடனடைக்க உழைத்து அடைக்காமல் குறுக்கு வழியால் சீதனப் பணத்தை வாங்கி கடனை அடைத்து தன் வாழ்வில் தொல்லையிலிருந்து விடுபட கதாநாயகன் முயன்றாரே என்பதைத் தவிர அவர் இல்லறத்தில் மக்கட் பேற்றில் மனைவியின் இன்ப துன்பங்களில் சமனாகப் பங்கெடுத்தல் என்பது பற்றி வெளிப்படையாக சிந்திப்பவராகத் தெரியாததும் அவரின் ஒரு பரிதாபம். அவன் மட்டுமன்றி ஆண் சகோதரர்களும் தம் இறப்புவரை தம் பெண் சகோதரிகளுக்கு தோள் கொடாது பாராமுகமாயிருந்தமை சகோதரர்களின் மடமை. இறக்கும் வரை இந்தக் கதையில் வரும் ஆசிரியையே தமக்கென்ற வழியைத் தேடாது அவர்களை கட்டிக் காத்தமையும் இங்கு கவனிக்க வேண்டியதே. இன்று சகோதர பாசங்கள் பணத்தின் அளவீட்டில் எங்கேயோ ஏறி இறங்கும் தருணத்தில் இந்தப் பெண் பிறப்பின் தியாகம் என்றும் பரிதாப உணர்வும் கவனத்திற்குரியதே. அவருக்கு சிறு வயது முதல் மலேரியா நோய் வந்து உடல் பாதிக்கப்பட்டதால் தனது உடலில் மனதில் தைரியத்தில் கல்வியில் பின்னடைவு வேண்டி ஏற்பட்டுள்ளதென்பது அவர் தெரிந்து வைத்திருப்பது அவரது வாழ்வியலின் கல்வியின் பின்னடைவிற்கான காரணம் என்பதை வாசகர்களினால் ஏற்றுக் கொள்ளக்கூடியதாயுள்ளது.

தான் என்ன பிழையைத் தன் வாழ்நாளில் விட்டாரோ அதாவது கடனடைக்க மச்சாளைக் கட்டாது சீதனம் வாங்கிப் பிறிதொரு பெண்ணை மணந்த கதை மீண்டும் ஒருமுறை தன் மகளின் வாழ்விலே மகளுக்குத் திருமணம் பேசிவந்த மணமகனின் கடனடைக்க சீதனப் பணம் கேட்ட போது கையில் அற்ப வருமானம் கைகொடுக்காத கையறுநிலையில் மகளைக் கட்டிக் கொடுக்க முடியாது தள்ளாத வயதிலும் வைராக்கியத்துடனும் போராடிக் கொண்டு மனஉளைச்சல்பட்டுக் கொண்டிருப்பது வேதனைக்குரிய முடிவே.

பிள்ளைகள் இருக்க ஒரு ஆண்மகனும் பிறந்திருந்தால் அவன் தன் சகோதரிக்கு சீதனம் தான் உழைத்துச் சேர்த்து அல்லது தனது கலியாணத்தில் சீதனம் பெற்று தங்கையைக் கட்டிக் கொடுத்திருப்பானோ என்னும் தொடர்கதையும் தொடர்ந்திருக்குமோ என்றும் இவ்விடத்தில் எண்ணத் தோன்றுகிறது.

இக் கதையில் வயது சென்று பின் கலியாணம் செய்யும் தம்பதிகளின் பிற்கால பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் போகின்ற அவலுக்கு உடல் உளப் பலவீனங்கள் மேலோங்கி விடுவதும் தெரிகின்றது.

இறுதியாக இந்தத் தள்ளாத வயதிலும் தன் முறை மச்சாளைத் தான் திருமணம் செய்யாததையிட்டு வருந்துவதும் அவர்களது முதற் சந்திப்பும் அவளுடன் முதலும் கடைசியுமாக அவர் கதைத்த கதையொன்று கூறியதும் நெஞ்சுக்குள் நீரை உருக்க வைத்ததும் முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்ற பழமொழியையும் நடைமுறை உதாரணமாக எடுத்துக்காட்டுகின்றது.

திருமணம் கலக்கும் திருமணத்திற்கு பணபலம், சாதிபலம், கௌரவ பலம் என்பன தடையாயிருப்பது என்று நீங்கும் என்னும் கேள்வியையும் இக் கதை எழுப்புகின்றது.

சிவகாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலேயனின் பரிசு

## 9. பாரூர் சேர் படலம்

ஜெகதலப்பிரதாபன்

**முன் வரலாற்றுச் சுருக்கம்**

தமிழர் 3 வகை ஆதுதிரங்கள் எல்லாம் வென்று ஆங்கில இளைஞர் ஒருவர் உலக பல்கலைக்கழகத்தில் பொறியியல் படிக்க வந்து ஆங்கில அறிவு மிகுதியால் வாழ்வையாகப் பேராசிரியர் பொருளாக்கிகொள்ளக் கிளை திருப்பப்பட்டுத் திரும்பவும் இங்கிலாந்து போனான். அவனது வாழ்க்கையில் ஒரு அத்தியாயம் திடீர் முடிவுக்கு வந்து விட்டதை அறிந்தீர்கள். அவன் மீண்டும் கண்ணன் சென்னை வழியில் குருத்தானா எனும் நாட்டில் இறங்கி அங்கிருந்து புட்டக விமானத்தில் ஏறி லண்டன் நகருக்கிருந்து பயணமாகும் போது திடீரென்று விமானம் நடுக்கத்துக்கு உள்ளாகிறது. விமானத்தில் வேறொரு ஏற்பட்டுக் கண்ணனின் பயணம் தடைப்பட்டதா இல்லையா என்று அறியத் தொடர்ந்து வாசியுங்கள்.

கண்ணனை அதிர வைத்தது ஏன்கென்று விமானி வில்லவர் ஒருவில் இறைத்து (முன்னாள் வில்லர் முவில் ஊறும்) தனது அமெரிக்கத் தமிழில் இழுத்து இழுத்துச் சொன்னார். அவர் சொன்னதை விளங்கிக் கொள்வது கண்ணனுக்குச் சற்றுச் சிரமமாக இருந்தது. அவனுடைய பாட்டனார் ஈசுவரன் அமெரிக்கர்களைப் பற்றிக் கிண்டலாகச் சொல்லுவது நினைவுக்கு வந்தது. "அமெரிக்கர்கள் ஆங்கிலம் என்று சொல்லி வேறு ஏதோ மொழியைப் பேசி வந்தார்கள். நல்லவேளை, தமிழ் வந்ததால் இப்போது அதை நிறுத்தி விட்டார்கள்".

"அமெரிக்கர்கள் தமிழ் என்று நினைத்தும் இன்னொரு மொழியை அல்லவா பேசுகிறார்கள்" என்று கண்ணனுடைய சிந்தனை ஓடியது. விமானி என்ன சொன்னாரென்று அருகில் இருந்தவர் யாரையாவது கேட்கலாம் என்று திரும்பினால் எல்லாரும் தமது பாதுகாப்புப் பட்டிகளைக் கழற்றிவிட்டு எழுந்து நின்றனர். விமானத்திலிருந்து வெளியே குதிப்பதற்கு என்று யாரும் நினைக்க வேண்டாம். எல்லாரும் விமானத்தை விட்டு இறங்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர்.

"அமெரிக்க விமானிகளால் குலுக்காமல் விமானத்தைத் தரையிறக்கவும் முடியாதா?" என்று கண்ணன் ஆங்கிலத்தில் முணுமுணுத்தது வில்லவரின் காதில் விழுந்திருக்க வேண்டும். கண்ணன் விமானத்தால் இறங்கும் போது, அமெரிக்க மொழியும் (கண்ணனுக்கு அது செம்மையான ஆங்கிலமல்லவே) தமிழும் கலந்த தமிழுச்சரிப்பில் (அதாவது தமிழ் அமெரிக்கம்) அவனிடம் "பாஸூரர்களை முதலில் உலகிற்குத் தந்தவர்களே அமெரிக்கர்கள் தான்" என்று வாயோடு சொல்லிவிட்டுக் கண்ணனுடைய பதிலுக்குக் காத்திராமல் தமிழர்களிடம் பழகிய மரியாதை முறுவல் ஒன்றை விரித்தபடி விமானத்தின் பின் பகுதியை நோக்கி நகர்ந்தார்.

"யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

என்று அவனது அறையிலிருந்த நாட்காட்டி திருவள்ளுவர் அவனுக்குக் கடைசியாக வழங்கிய ஆலோசனை நினைவுக்கு வந்தது. ஈ கொத்தரிமத்தோ புட்டக விமான நிலையத்தை விட்டு வெளியேறு முன் ஊருக்குப் போவதற்கான அடுத்த மின்தொடரூந்து (அது செந்தமிழ்; எலக்ட்ரிக் ரயில் என்பது சென்னைத் தமிழ்) எப்போது என்று விசாரித்தான். அவனது பொதிகள் எல்லாம் நேரடியாகவே உள்ளூராம்ட்டன் தொடருந்து நிலையத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும். (உள்ளூராம்ட்டன் என்றால் என்ன என்று நீங்கள் கேட்பீர்களானால், நீங்கள் கதையை முதலிலிருந்து கவனித்து வாசிக்காத ஒருவராக அல்லது நினைவாற்றல் குறைபாடுடையவராகவே இருக்க முடியும். முன்னைய வகையினராயின் தாயகம் 2006 செப்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இதழ் ஒவ்வொரு நீங்கள் எப்படியாவது தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். பின்னொரு வகையினராயின் என்னால் உங்களுக்கு ஒரு நல்ல சித்த மருத்துவரை அறிமுகப்படுத்த இயலும். எனினும் அதற்கு நீங்கள் இன்னும் முப்பது ஆண்டுகளாவது (அதாவது நீலா ஆண்டு 2069 வரை) காத்திருக்க வேண்டும். போனாற் போகிறது என்று திரும்பவுஞ் சொல்லுகிறேன். உள்ளூர்வாசியிடன் இங்கிலாந்தின் மையப் பகுதியிலுள்ள கண்வென்ரு ளார்ட் புட்பக விமான நிலையத்திற்கு மேற்காக முப்பது கல் தொலைவில் உள்ள படிந்தனின் (முன்பு பெரிங்ரன்) உள்ள தொடர்வண்டி நிலையத்திற்குப் போய் வண்டி ஏற வேண்டும். மாலை வண்டியைப் பிடித்தால் நடுஇரவு நேரத்திற் லண்டன் சேரும். காலையில் மீண்டும் கருக்கதிச் சேவை ஒன்று உண்டு. எனவே அன்றைய நாளின் எஞ்சிய பகற் பொழுதை இலண்டனைச் சுற்றிப் பார்ப்பதிற் செலவிடலாம் என மனங்கொண்டான். இருக்குப் போதுமளவுக்குத் தேவையான பயணக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தால் கையில் உள்ள பணத்துடன் இலண்டனில் அன்றைய இராப் பொழுதைச் செலவிடலாம் என்ற முடிவுக்கு வந்தான்.

பிரித்தானியப் பேரரசின் - பிரித்தானிய என்ன பிரித்தானியா! சூரியன் அத்தமிக்காத ஆங்கிலப் பேரரசின் புகழ் பெற்ற தலைநகராக இரண்டு நூற்றாண்டுகள் உலகாண்ட இலண்டன் நகரின் பெருமை சொல்லவும் பெரிது. பிரித்தானியா எனப்பட்ட மண்ணின் மேற்பின் ஒரு கூற் பகுதியை உவேல்சு (ப.பெ. வேல்ஸ்) நாட்டினருக்கும் வடக்கில் ஒரு கூற்பகுதியை இசுக்கொத்துலாந்து (ப.பெ. ஸ்கொட்லண்ட்) நாட்டினருக்கும் தென் மேற்கின் ஒரு பகுதியைக் கோனிலவின் கோண் கவர் (ப.பெ. கோன்வோல்) நாட்டினருக்கும் பிரித்துக் கொடுத்து ஐரோப்பியச் சங்கம் எனப்படுகிற தமிழ் ஆசிக்கத்திற்குட்பட்ட கூட்டாட்சியில் ஒரு சிறு பகுதியாக இங்கிலாந்து முடங்கும் வரை, இலண்டனே ஐரோப்பாவின் புகழ்பூத்த நகராக இருந்தது. ஒரு காலத்தில் உலகின் எல்லா மொழி பேசும் இனத்தவரும் அங்கு வாழ்ந்தனர் என்றும் அவன் கேள்விப்பட்டிருந்தான். இப்போது தமிழரை விட எல்லாரும் தங்கள் தங்கள் ஊர்கட்குப் போய் விட்டனர். இருந்திருந்தாலும் என்ன? எல்லாரும் தமிழ் தானே பேசி இருப்பார்கள்.

அந்தப் புகழ்பூத்த தேஞ்சப்பூம் பட்டினத்தை (தேம்ஸ் என்று அழைக்கப்பட்ட ஆறு பாயுங் காரணத்தால் இலண்டனைத் தேஞ்சப்பூம்பட்டினம் எனவுங் கூறுவர்) அவன் பார்ப்பதற்குக் கிடைத்த முதல் வாய்ப்பு இது. அத்துடன் அவன் வந்திறங்கிய காலம் முதுவேனிற் காலம். எனவே இரவு முதலாஞ் சாமந் தாண்டியும் நல்ல வெளிச்சமாயிருக்கும். இதுவுஞ் சிலப்பது பாலுணைய திருவருள் என்று மனசிற்குள் நன்றி கூர்ந்தபடி, மத்திய இலண்டனுக்கான மின்னூந்து நிலையத்தை நோக்கி நடந்தான்.

முதலில் எங்கே போவது என்று அவனுக்கு நிச்சயமாயிருக்கவில்லை. பழைய ஆங்கில அர





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தினரது அரண்மனைக்குப் போவது, உலகப் பாராளுமன்றங்களின் அன்னை எனப்படும் பாராளுமன்றக் கட்டடத்திற்கு அருகாக அமைந்த பெரு வென் (பிஃப. பிக் பென்) மணிக்கூட்டுக் கோபுரத்தைப் பார்ப்பது, பச்சைப்பாடி (பிஃப. கிறீனிச்) எனும் இடத்தில் அமைந்த வானிலை அவதான நிலையத்தைப் பார்ப்பது என்று அவனால் ஒரு முடிவுக்கும் வர இயலவில்லை. ஒரு காலத்தில் உலகப் புகழ் பெற்ற அருங்காட்சியகங்களுக்கும் நூலகங்கட்கும் போய்ப் பார்க்கலாமா என்றுஞ் சிந்தனை ஓடியது.

எனினும் உங்களுக்கு அவன் காண விரும்பிய எதுவுமே அவன் காணவிரும்பிய நிலையில் இல்லை என்று விளங்கியிருக்கும். தமிழரின் உதவி இல்லாமலே இங்கிலாந்து தனது அரச குடும்பத்தை எப்போதோ இழந்து விட்டது. உலகத் தமிழர் ஆட்சி ஏற்பட்ட பிறகு சவூதியிலும் மியான்மாரிலும் வேறு ஓரிரண்டு நாடுகளிலும் மட்டுமே பாராளுமன்றங்கள் இருந்தன. அந்த நாடுகளில் ஒரு வகையான பாராளுமன்ற அரசமைப்பு உருவாகிச் சில காலமே ஆனதால் அவர்கட்கு இன்னமும் பாராளுமன்றப் பட்டிமன்றங்கள் அலுத்துப் போகவில்லை. மற்ற நாடுகளிலெல்லாம் தமிழர் அறிமுகப்படுத்திய குடவோலை முறையில் மக்கள் தமது அரச நிருவாகிகளைத் தெரிவு செய்து வந்தனர். மேலுஞ் சிறப்பாகச் சில சமயங்களில் திருவுளச்சீட்டு முறையிலும் சுவாமிக்குப் பூவைத்துப் பார்த்துந் தெரிவு செய்வதுண்டு. எனினும் தமிழர் இந்த விநோதமான முறைகளைப் பரிந்துரைக்கவில்லை. எவ்வாறாயினும் நிருவாகம் சிக்கலின்றியும் தமிழ்ப் பேரரசிற்கு இடைஞ்சலின்றியும் உள்ளவரைத் தமிழர் நேரடியாக நாட்டு நடப்பிற் குறுக்கிடுவதில்லை.

முன்னொருகாலம் தம்மை ஏமாற்றி ஆங்கிலேயர் வானிலை அவதான நிலையத்தைப் பச்சைப்பாடியில் அமைத்ததற்குப் பழிவாங்குகிற விதமாகப் பிரெஞ்சுக்காரர் அய்ரோப்பிய வானிலை மையத்தைப் பாக்கு நாட்டின் (முன்பு இஸ்பானிய நாட்டின் பகுதியாக இருந்த பாக்கு அல்லது பாஸ்க் எனப்படும் மக்களது பிரதேசம்) முதுபெரும் நகரான பாசலோனியா பெருநில் அமைக்குமாறு சூழ்ச்சி செய்ததாற் பச்சைப்பாடி வானிலை அவதான நிலையம் மூடப்பட்டு விட்டது.

பெரிய வென் மணிக்கூண்டுக் கோபுரம் பராமரிப்பின்றிக் கரும்பாசி பிடித்துக் கொத்தைச் சிதைந்து குட்டையான மொட்டைப் பனைமரம் மாதிரித் தெரிந்தது. இந்த இடத்தில் யாழ்ப்பாணத்தவர்கட்கு ஒரு சிறு விளக்கம் தேவைப்படலாம். யாழ்ப்பாணத்தவர் அல்லாதவர்கள் அடுத்த மூன்று பந்திகளையும் வாசிக்காமல் மிகுதியை வாசிக்கலாம்.

* * *

இன்றைய யாழ்ப்பாணத்தவர்கட்குப் பனைமரத்தைப் பற்றி விளங்கப்படுத்துகிறது, குருடனுக்குப் பால் காட்டின கதை மாதிரி முடியலாம். ஏனென்றால் யாழ்ப்பாணத்தில் இப்போது மட்டுமல்லாது தமிழர் பேரரசு அமைந்த பிறகுங் கூடப் பல்லுக் குத்தவும் ஒரு பனை ஈர்க்குக் (அதாவது ஈக்கில்) தேட முடியாது. பனை மரம் பற்றியும் பனந் தோப்புப் பற்றியும் பனங் கள்ளுப் பற்றியும் கேள்விப்பட்டிருக்கிறார்களே ஒழிய யாருமே பனை மரத்தைக் கண்டிருக்க மாட்டார்கள். யாழ்ப்பாணத்தில் ஆங்காங்கே உயரமான கறுப்புத் தூண்கள் தெரிந்தால் அவை மொட்டைப் பனைமரங்களாக இருக்கலாம் அல்லது ஏதாவது முன்னாட் கட்டடத்தின் தூண்களாகக் கூட இருக்கலாம்.

பனை மரம், தென்னை மரம் மாதிரி இருக்கும். ஆனால் அதனுடைய தண்டு கறுப்பாக இருக்கும். அதனுடைய ஓலை (அதாவது இலை) மயிலினுடைய தோகை மாதிரி வட்டமாக விரிந்து இருக்கும். பெண் மயில் இல்லை, ஆண் மயில். மயில் என்றால் என்னவென்று தெரியாதவர்கள் கந்த சுவாமியாருடைய படத்தைப் பார்க்கலாம். கந்த சுவாமியார் யாரென்று தெரியாதவர்கள், உள்ளே நுழைய விடுவார்களென்றால் மாவிட்டபுரத்திலுள்ள கோயிலுக்குப் போகலாம். அல்லது நல்லூரிலுள்ள கோயிலுக்குப் போகலாம். அங்கே சிற்பம் இருக்கும். தோகை இருந்தாலும் பனை ஓலை மாதிரி விரிந்த வட்டமாக இருக்காது.

நான் எப்படி விளங்கப்படுத்தினாலும் யாழ்ப்பாணத்தாருக்குப் பனை மரம் காட்டப் போய்க் கடைசியாக மயிலின் காலடியிற் கிடக்கிற பாம்பைப் பார்த்து இதுதானா பனைமரம் என்று கேட்பார்கள். எனவே சுலபமான வழி என்னவென்றால் எப்படியாவது கொழும்புக்கு வந்து சேருவது. யாரையாவது கேட்டு விசாரித்துக் காலி முகத்திடல் எங்கே என்று அறிந்து அங்கே போவது. கவனமாக இருக்க வேண்டும். ஏனென்றால் காலி முகத்திடல் காலியில் இல்லை. கொழும்பிலே தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறது. அங்கே போய்ச் சோதனைச் சாவடியில் நிற்கிற காவலரிடம் (ராணுவச் சிப்பாயல்ல, பொலிஸ்காரர்) கேட்டால் அவர் அங்கே நிற்கிற பனைமரங்களைக் காட்டுவார். அந்தப் பனைமரங்கள் அவற்றை விட ஒரு பத்து மீற்றர் கூடின உயரமாக இருக்கும். உங்களை மன்னார், மட்டக்களப்பு மாதிரி வேறெங்கும் அனுப்பி வீண் தொந்தரவில் மாட்டிவிட நான் விரும்பவில்லை.

* * *

கொழும்புக்கு வந்து பனைமரத்தைப் பார்க்கும் வரை யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் பெரிய வெள்ளைக் கோபுரம் யாழ்ப்பாணத்தில் கறுப்பாக நிற்கிற ஒரு தூண் மாதிரி இருக்கும் என்று விளங்கிக் கொள்ளலாம். இனிக் கண்ணனுக்கு என்ன நடக்கிறதென்று பார்ப்போமா?

வண்டியின் அவலம் எனக்குத் தெரியும், உங்களுக்குத் தெரியும். கண்ணனுக்குத் தெரியுமா? அவன் அதையெல்லாம் கண்டுதான் அறிய வேண்டியிருந்தது. மேற்குச் சுவாமி மடம் (முன்பு வெள்ளம்பிட்டியிற்றார்) பிள்ளையார்க்குத் தரிப்பில் இறங்கிய போது இலண்டனை ஏன் செங்கற் பாலை என்று அழைக்கிறார்கள் என்று யோசித்தான். உண்மையில் எல்லாக் கட்டிடங்களும் பாசி பிடித்துக் கறுத்துப் போன இடிபாடுகளாகத் தெரிந்தன. கண்ணனுக்கு அழுகை வரும் போலிருந்தது. சுற்று முற்றும் பார்த்தான் ஆள் நடமாட்டம் குறைவாகவே இருந்தது. இதையெல்லாம் பார்த்து மனம் வருந்தாமல் நேரடியாகப் பாலை வண்டியிலேயே இருக்கப் போயிருக்கலாமே என்று நினைத்தான்.

இலண்டனின் முதுபெரும் சிவன் கோவில் அமைந்திருந்த திருவூரிசம் பகுதியில் அமர்ந்திருக்கும் சிவபெருமானைத் தரிசித்து முறையிட்டு மனதைத் தேற்றிக் கொள்ளலாம் என்று தோன்றியது. ஆனால் அங்கே எப்படிப் போய்ச் சேருவது என்று தெரியவில்லை.

அப்போது பலகாரங்களும் தேனீரும் விற்கும் தள்ளு வண்டிக்காரர் ஒருவர் அவ் வழியே போனார். ஆங்கிலத் தேனீர். நினைக்கவே கண்ணனுக்கு வாயில் உமிழ்நீர் ஊறியது. எனினும் அவ்வைப் பாட்டியின் எச்சரிக்கை நினைவுக்கு வந்தது. கண்ணனின் தயக்கத்தை அறிந்தவர் போல தள்ளு வண்டிக்காரர், "தம்பி வெளியூர் போல" என்று கிழக்கு லண்டன் ஆங்கிலத் தொனியில் அவனிடம் கேட்டார்.



நூல் : செல்லத்தாத்தாவும் செல்லக் குழந்தையும் (சிறுவர் இலக்கியம்)
நூலாசிரியர் : இயல்வாணன்
விலை : 100/=
வெளியீடு : சமூக விஞ்ஞான மன்றம், பெண்கள் உயர்தரப் பாடசாலை



Title : POETICAL WORLD (Poems)
Author : 'Kalaimamani' Annamalai Mahadevan
Price : 150/=
Published by : Maththevan Mathialagan Karaveddy North, Karaveddy



நூல் : எங்களுக்காக (சிறுவர் பாடல்கள்)
நூலாசிரியர் : கவிஞர் துரையர்
விலை : 100/=
வெளியீடு : பாமா பதிப்பகம், சுன்னாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணன் எதுவுஞ் சொல்ல முதலே "இன்றைக்கு இதிலை ஒரு நாள், அரிசி உரொட்டியும் தேநீரும் நன்றாக இருக்கும். அல்லது வடையும் அரிசிக் குறுணல் பாயசமும் தரவா?"

கண்ணனுடைய தயக்கம் விளங்கினவர் போல "தம்பி இதெல்லாம் சுகாதார விதிப்படி சமைத்தது. இல்லாவிட்டால் தெருவழியே கொண்டு விற்க விடமாட்டார்கள்" என்றார். கண்ணனுக்கு இங்கிலாந்தின் சுகாதார நிருவாகம் இருக்கிற நிலை தெரியாமலா. என்றாலும் தன்னுவண்டிக்காரரைப் பார்க்கப் பாவமாயும் இருந்தது. "தேநீர் மட்டும் போதும்" என்றான். தேநீரை ஊற்றியபடியே "பால்?" என்று வண்டிக்காரர் கேட்டார். கண்ணன் வேண்டாம் என்று தலையை ஆட்டியபடி ஒரு வெள்ளைக் காசு நாணயத்தை நீட்டினான். "தமிழ்க் காசு! எப்படிக் கிடைத்தது?" என்று ஒருபுறம் மகிழ்ச்சியுடனும் இன்னொருபுறம் ஐயத்துடனும் கண்ணனிடங் கேட்டபடி பணப் பெட்டியைப் பார்த்தார். "இன்றைக்கு போதாது. எண்பது ஊரோ இருக்கிறதா?" என்று கேட்டார். தமிழ் தாயகத்தின் விலைகட்குக் கொஞ்சம் பழக்கப்பட்டுவிட்ட கண்ணனுக்கு அது அதிர்ச்சியாக இருந்தது. "எண்பது ஊரோ!" கண்ணன் விலையைக் குறைக்கும் கேட்கப் பார்க்கிறானோ என்று நினைத்துத் தள்ளு வண்டிக்காரர், "எல்லா விலையும் ஏறிக் கொண்டு போகிறது. எண்பதுக்கும் குறைய விற்கக் கட்டாது தம்பி. தேனீர்ச் சாலைக்குப் போனால் நாற்பதைம்பது, இருநூறும் கேட்பார்கள்" என்றார்.

கண்ணனுக்குச் சிரிப்பு வந்தது. வன்னியில் ஒரு காசு (அதாவது ஆயிரத்தைநூறு ஊரோ அல்லது ஆயிரஞ் சல்லி) மட்டுமட்டாகப் போதுமாயிருந்திருக்கும். இங்கு பத்தில் ஒரு பங்கு விலையும் இல்லை. இந்த மனிதர் விலை கூடிப் போய்விட்டது என்று தான் சொல்லுவதாக நினைப்பதை யோசித்த போது, உண்மையில் சிரிப்புக்குரியவன் தானேதான் என்று விளங்கியது. சில மாதங்கள் மட்டுமே தமிழரின் சுய மண்டலத்தில் வாழ்ந்து இங்கிலாந்து விலைகள் எல்லாம் மறந்து விட்டனவே என்று அவனுக்கு வெட்கமாயிருந்தது. தள்ளு வண்டிக்காரருக்குக் கண்ணன் வெளியூரிலிருந்து வந்தது விளங்கியிருக்க வேண்டும். "என்னிடம் ஆயிரத்தி முன்னூறு ஊரோ இருக்கிறது. மிகுதிக்கு உரொட்டி, வடை ஏதேன் தாளில் ஒற்றித் தரவா?" என்று கேட்டார். கண்ணன் மறுப்பாகத் தலையை ஆட்டிவிட்டுப் பைக்குள்ளிருந்து அறுபியியத்தாலான நூறு சல்லி நாணய மொன்றை எடுத்துக் கொடுத்தான். தள்ளு வண்டிக்காரர் கண்ணன் கொடுத்த தமிழ்க் காசு நாணயத்தை மீண்டும் ஆவலுடன் பார்த்துவிட்டுக் கண்ணனிடந் திருப்பிக் கொடுத்தார். கண்ணன் அரிசி உரொட்டி எவ்வளவு? என்று கேட்டான். "அறுபது ஊரோ" என்றார். "சரி, தாருங்கள்" என்றான். அவர் கணக்குப் பொறியில் தட்டிப் பார்த்துச் சொல்ல முன்னமே, கண்ணன் "பத்து ஊரோ மிஞ்சும், வைத்துக் கொள்ளுங்கள்" என்றான்.

கண்ணனுடைய கணிதத் திறமை தள்ளுவண்டிக்காரரை வியக்க வைத்தது. "ஆங்கிலேயரில் அரைவாசிப் பேருக்கு ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரியாது. முக்காலவாசிப் பேருக்குக் கணக்குப் பொறி பாவிக்கக் கூடத் தெரியாது. நூற்றில் இரண்டு பேருக்கு மட்டுமே கைவிரல்களைப் பாவித்துக் கணக்குச் செய்ய இயலும். மனக் கணக்குச் செய்த கண்ணன் ஒரு கணித மேதையாக இருக்க வேண்டும் என்று நினைத்த அவருக்குக் கண்ணன் மீது மிகுந்த மரியாதை ஏற்பட்டது. ஒரு வடையுஞ் சேர்த்துக் கண்ணனிடங் கொடுத்தார். கண்ணன் அதற்கான விலையைக் கேட்க, "இது நட்புக்காக" என்று சொல்லிவிட்டுத் தள்ளுவண்டியை நகர்த்தத் தொடங்கினார்.

"அண்ணை, திருப்பிசம்பலத்துக்குப் போய் வர எவ்வளவு நேரமெடுக்கும்" என்று கேட்டான். "தம்பி, பின்னேரப் பூசை நேரத்துக்கு ஒரு வண்டி ஆனைக்கோட்டையிலிருந்து புறப்படும்" என்றான். (ஆனைக்கோட்டைப் பழைய பேர் எலிபன்ற் அன் காசில்). கண்ணன் வாய் திறக்கு முன்னமே "இங்கே கொஞ்சத் தூரத்தில் கருவாலி மரத்தடியில் ஒரு வைரவர் கோயில் இருக்கிறது" என்றார்.

லண்டனுக்கு வைரவர் போன கதை நீளமானது. விவரமான விளக்கங்கள் தி.ஆ. 2070ல் வெளியான உலக மக்கள் நூல் வரிசையில் வெளியான "ஆங்கில நாட்டாரின் வாழ்வும் வழிபாடும்" என்ற நூலிலே உள்ளன. சுருக்கமாகச் சொன்னால் பிள்ளையாருக்குப் பிடித்தமான அரசமரமோ ஆலமரமோ இங்கிலாந்தில் இல்லை. ஆனால் அவர் ஒரு சில சிவன் கோவில்களில் கொடித் தம்பத்துக்குக் கொஞ்சம் முன்னால் ஒண்டியிருக்கிறார். முன்தோன்றி மூத்த குடித் தமிழர் (அதாவது தி.ஆ. 2020க்கு அல்லது கி.பி. 1989க்கு முன்பு போய்க் குடியேறியோர்) கட்டிய ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார் கோயில்களிலும் குடியிருந்து வந்தனர். தமிழர் இலண்டனிலிருந்து வெளியேறிய பின்பு அக் கோயில்கள் மூடப்பட்டு விட்டன. தமிழர் சிறுதெய்வ வழிபாட்டை முழுமையாகத் தடை செய்த பின்பு, முருகனுக்கோ பிள்ளையாருக்கோ தனியான கோயில்கள் மிகவும் குறைந்து போய் விட்டன. சிவன் கோயில்களில் சிவபெருமானுக்கும் உமா தேவியாருக்கும் அருகாக முருகனும் பிள்ளையாரும் காணப்படுவதுண்டு. சிலசமயம் பிள்ளையாருக்கென்று ஒரு சிறிய மாடம் அமைந்திருக்கும். முற்றாகவே முருகன், பிள்ளையார் கோயில்கள் இல்லாது போய்விட்டன என்று கூற இயலாது. என்றாலும் உயர்சாதி ஆங்கிலச் சைவர்கள் சிவபெருமானையும் உமாதேவியாரையும் விட எவரையும் வழிபடமாட்டார்கள்.

தாழ்த்தப்பட்ட ஆங்கிலேயர்கள் வைரவர், ஐயனார், காளி, மாரியம்மன் போன்ற தெய்வங்களைத் தாமாகவே தேடித் தெரிந்து வழிபட்டனர். தமிழர் நடுவே சாதி முறை இல்லாத போதும் தமிழர் ஆதிக்கத்திற்குட்பட்ட மண்களிற் சாதி முறை உண்டு. தீண்டாமை என்பது தமிழுலகச் சட்ட விதிகட்கு மாறானது. எனினும் சாதியால் பிற்படுத்தப்பட்ட ஆங்கிலேயர் உயர் சாதி ஆங்கிலேயரிடமிருந்து தம்மை விலக்கிக் கொள்வதற்காகவே வேறு தெய்வங்களைத் தெரிந்தெடுத்தனர் என்று "ஆங்கிலச் சாதி முறை" என்கிற நன்கறியப்பட்ட நூலின் ஆசிரியர் ஈநோக்குப் பவல் விளக்கியுள்ளார். இதைப் பற்றிய மாறிய கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், இதுவரை எதுவும் நூல் வடிவில் வரவில்லை. அதற்கான காரணம் பிற்படுத்தப்பட்ட ஆங்கிலேயரிடையே கல்வி கற்றோர் இல்லை என்பதுடன் நூல் வெளியிடும் வாய்ப்பு வசதிகள் உயர்சாதி ஆங்கிலேயரிடம் மட்டுமே இருந்தமையுமாகும் என்று ஆங்கிலப் பொதுவுடைமைவாதியும் ஆங்கில வரலாற்றாசிரியருமான பேரசுத் தோமைந்தர் (ப.பெ. ஜோஜ் தொம்சன்) விளக்கியுள்ளார். தோமைந்தரை ஆங்கில வரலாற்றுப் பேரவையினர் அங்கீகரிக்காததால், அவரது கருத்துக்கள் ஆங்கிலேயரால் அறியப்படாமலே உள்ளன. ஆங்கிலப் பற்றாளர்கள் அவரை ஆங்கிலத் துரோகி என்று அழைப்பது இவ்விடத்துக் குறிப்பிடத்தக்கது.

கண்ணனுடைய ஆங்கில நண்பர்கள் சிலர் வைரவர் வழிபாட்டுக்காரர் என்று கண்ணன்

# அவகாசம்



**கலைச்செல்வி**

வானத்திலே வட்டநிலா
தான் தேய்ந்து வளர்வதற்காய்
மாதத்தைக் கூறுபோட்டு
அவகாசம் கேட்டுக் கொள்ளும்;
தாய் வயிற்றில் உதித்த உயிர்
கருவீட்டில் தான் வளர,
மாதத்தைப் பத்தாய் பெருக்கி
அவகாசம் கேட்டுக் கொள்ளும்;
பகலெல்லாம் பாடுபட்ட மனுசன்
ஓய்வெடுக்க வேண்டுமென
இராத்தூக்கமான ஒன்றை
அவகாசமாகக் கேட்டுக் கொள்ளும்;
இவற்றுக்கெல்லாம் அவகாசம்
கொடுக்க இயற்கையன்னை
நெற்றியில் குறி வைத்து
ஒரு துப்பாக்கி சுட்டதும்
பொட்டென்று போகும் உயிரை
இன்னும் சிலகணம் வாழவென
பல இளைஞர்கள் கதறக்கதற
அவகாசம் கேட்கின்ற போது மட்டும்
மறுக்கப்படுவது ஏனோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவான். அவர்களை முழுமையான சைவர்களாக்க வேண்டும் என்பதிலும் அவனுக்கு அக்கறை உண்டு. என்றாலும் அவரை கோயிலுக்குப் போன கதை வீட்டுக்குத் தெரிய வந்தால் தந்தை சிவாவும் பாட்டனார் ஈசுவரனும் அவனை வாசலில் வைத்துக் குளிப்பாட்டி விட்டுத்தான் வீட்டுக்குள் போக விடுவார்கள். எனவே அவரவரைக் காண்பதற்குரிய நேரமும் இதுவும் இவையல்ல என்று முடிவுக்கு வந்தான்.

"எனக்கு இலண்டனில் செலவழிக்க இந்தப் பகல் பொழுதும் இன்று இரவும் மட்டுமே உள்ளன. அதற்குள் இலண்டனில் வரலாற்று முக்கியமான இடங்கள் சிலவற்றைப் பார்க்க விரும்புகிறேன்" என்றான் கண்ணன். "தம்பி, இலண்டனில் இருந்த அருங்காட்சியகங்கள் எல்லாம் வெறிச்சோடி உள்ளன. பிற நாட்டவர்கள் வந்து தமது நாடுகளில் இருந்து கொண்டு வந்த காட்சிப் பொருட்களைப் பறித்துச் சென்றுவிட்டனர். பராமரிப்பும் கண்காணிப்பும் இல்லாததால் நல்ல ஆங்கிலக் காட்சிப் பொருட்கள் பல ஐரோப்பியரால் களவாடப்பட்டு விட்டன. வேறு பலவற்றை நமது ஆட்சியாளர் தமிழரின் அருங்காட்சியகங்களுக்கு விற்று விட்டனர். பூங்காக்கள் எல்லாம் பற்றைக் காடுகளாகிவிட்டன. நூலகங்களிலிருந்த பழைய ஏடுகளை எல்லாம் பல நாட்டவரும் உரிமை கோரிக் கொண்டு போய் விட்டனர். இங்கே இருந்தாலும் என்ன! யார் இங்கே எதையும் வாசிக்கிறார்கள்? யாருக்கு நமது பயனில்லாத பழைய பண்பாட்டில் அக்கறை?"

அப்போது தான் கண்ணனுக்குத் தன்னுடன் பேசிக் கொண்டிருப்பவரின் பேரைக் கேட்கக் கூட எண்ணம் வரவில்லையே என்று நினைவு வந்தது. அவரது பேச்சை இடைமறித்து "அண்ணர், உங்களுடைய பேரென்ன?" என்று கேட்டான். வெள்ளையர் தன்னிலும் தாழ்ந்த சமுகத்தினர் என்பதால் அவரைக் கண்ணன் "ஐயா" என்று விளிக்கவில்லை என்று யாரும் நினைத்தால் அதில் பிழை இல்லை. கண்ணனிடம் சாதித் துடிப்பு என்று இல்லாவிட்டாலும் அவன் வளர்ந்த சூழல் அந்த மாதிரி. "ஐயா" என்பது தனது வட்டத்திலுள்ள மூத்தோரையும் தமிழர் போன்ற மரியாதைக்குரிய ஆட்களையும் மட்டுமே விளிக்கப் பயன்படும். ஆங்கிலத்தில் ஒரு காலத்தில் இருந்து இல்லாமற் போன ஒருமை பன்மை (அதாவது நீ - நீங்கள் வேறுபாடு) தமிழ் மூலம் மீண்டும் புகுத்தப்பட்டு விட்டது. எனினும் முன்பின் அறியாதோரைக் கண்ணன் ஒருமையில் அழைப்பதில்லை. இது அன்னைப் பாட்டி அவனுக்குப் பழக்கிய ஒரு நற்பண்பு.

"இடிக்கு" (டபெ. டிக்) என்று சொல்லி விட்டுப் பதிலுக்குக் கண்ணனின் பேரைக் கேட்காமலே தனது கதையைத் தொடர்ந்தார். "புகழ்பெற்ற நாடக அரங்குகள் எல்லாம் இருந்ததாகக் கேள்விப் பட்டிருக்கிறேன். எத்தனையோ வகையான இசைப் பல்லியங்களின் இல்லமாக இலண்டன் இருந்தது என்று அப்பு சொல்லுவார். இப்போது பொழுது போக்குக்கு ஒரு இசை நிகழ்ச்சி கிடையாது. எல்லாரும் தமிழ்ப் பாட்டுத்தான் கேட்கிறார்கள், அதுவும் வானொலியில். வசதி இருந்தால் குறுந்தட்டு இசைப் பேழையில்".

"அப்படியானால் இலண்டனில் நான் பார்க்கக்கூடியதாக ஒரு சிறப்பான இடமும் இல்லையா?" என்று கண்ணன் ஏமாற்றத்துடன் கேட்டான்.

"ஆங்கிலேயர் உலகாண்ட பெருமை கூறிய நெல்சன் தூண் சரிந்து இடிந்து கிடக்கிறது. பாராளுமன்றம் பாசி பிடித்துக் கிடக்கிறது..." என்று தொடர்ந்த இடிக்கு கண்ணனின் முகம் வாடிப் போவதைக் கண்டு தனது தொனியை மாற்றி "என்றாலும், ஆங்கிலேயரின் பழைய பண்பாட்டை அடையாளப்படுத்துகிற சில இடங்கள் இருக்கின்றன. அவைதான் எமக்கு முக்கியமானவை. விரும்பினால் என் நாளை வண்டில் ஓட்டம் முடிந்த பிறகு உன்னுடன் வந்து அவற்றைக் காட்டுகிறேன்" என்றார்.

"எங்கே சந்திப்பது?" என்று கண்ணன் கேட்டான். "நாளை இருபத்தைந்து நாழிகையாகும் போது (அதாவது பி. ப. 4.00 மணியளவில்) இங்கேயே சந்திப்போம்" என்று சொல்லியபடி இடிக்கு நகர்ந்தார்.

அதுவரை என்ன செய்வது என்று கண்ணனுக்கு யோசனையாயிருந்தது. கால் போன போக்கில் நடக்கத் தொடங்கினான்.

*(ஆளில்லாக் காடு போன்ற இலண்டனில் காலை வேளை போக்கப் போன கண்ணன் வழி தவறி வீண் தொந்தரவில் மாட்டிக் கொண்டானோ என்றும் இடிக்கை அவர் குறிப்பிட்ட வேளைக்குச் சந்திக்க முடிந்ததா என்றும் அவனது இலண்டன் இரவு எப்படிக் கழிந்தது என்றும் காலை வண்டியைத் தவறவிட நேருமோ என்றும் மனதில் கேள்விகள் எழுந்தால் அடுத்த படலத்தை வாசித்து அவற்றுக்கான விடைகளை நீங்கள் அறிந்து கொள்ளலாம்).*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயராசனின் மீறல்கள்

சை. கிங்ஸ்லி கோமஸ்



தேசிய கலை இலக்கியப் பேரவையின் 108வது வெளியீடாக இதயராசனின் மீறல்கள் கவிதைத் தொகுப்பு வெளிவந்திருக்கின்றது.

இதயராசன் என்னும் இலக்கிய ஆக்கியின் மனித ஆசைகளும் அவற்றை நிறைவேற்று வதற்கான போராட்டங்களும் இங்கே கவிதை களுக்கான கருவாகக் காணப்படுகின்றன. இதயராசனின் 50 கவிதைகளும் தம்மை வெளிக் காட்டக்கூடிய சமூகக் கடமையை வலியுறுத்தி நிற்பனவாக இருப்பது குறிப்பிடக்கூடிய விடயமாகும்.

இவரது படைப்புக்கள் மக்கத எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு, பெண் விடுதலை, சாதி வர்க்க ஒழுக்க முறைக்கு எதிரான சிந்தனை, மனமார்ந்த நன்றி, இயற்கை, கிராமத்தின் நினைவுகள், இன ஐக்கியம் என்ற பல்வேறு விடயங்களை இணைத்து மனித நேயம் நிறைந்த மென்மையான படைப்புகளைக் காணப்படுகின்றன.

தனது சிந்தனை என்றுமே உழைக்கும் மக்களின் உரிமைக்காக மானிடர் மீட்சிக்காக எந்தக் கால கட்டத்திலும் தடம் மாறவில்லை என்பதற்கு சிறந்த உதாரணம்.

"சொத்துக்காய் சோற்றுக்காய் அலைகிறோம் காட்டில்

சுற்றுவட்டப் பாதையிலே நான் - அதனிலும்

முற்றுப்புள்ளி அதற்கிட்டுப்

புத்தாண்டே நீ வா.

இக் கவிதை 1930களிலே சீனப் பெரும் தலைவர் மாவோ எழுதிய "New Years Day" என்னும் கவிதையின் வரிகளை ஞாபகமூட்டுகிறது.

இன்றுவரை சமூகத்தின் ஆறாத காயமாக புரையோடிப் போயுள்ள சாதிச் சிந்தனையும், ஆண் பரம்பரையின் ஆணவத் தகர்ப்புக்குமான இடதுசாரிகளின் சாதிய எதிர்ப்புப் போராட்டமும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சாதக, பாதக நிலைகளும் எழுத்தாளரின் இதயத்திலே ஆழமான வடுக்களாகப் பதிந்து இருப்பதை

"உயிரிலும் மேலான சாதியை மட்டும் புதிய தலைமுறையினர்க்கு ஞாயிறு நாளிதழ்களிலும் இணையத் தளங்களிலும் திருமண விளம்பரங்களையும் மரண அறிவித்தல்களையும் மிகுந்த பணம் செலவழித்து ஆவணப்படுத்துகின்றனர் என்ற வரிகளில் விபரிக்கின்றார்.

தென்னிலங்கையின் நெருங்கியிருந்த தமிழ் சிங்களப் பொது உறவுகளுக்கு, உயர் மட்ட ஆசீர்வாதத்துடன் மீண்டும் கருக்கலைப்பு வாரம் ஆடிவேல் விழாவையும் மிஞ்சி கண்டிப் பெரஹராவையும் மிஞ்சி என்று கவிக் கோலம் கொப்பளிக்க கனமான வார்த்தைகள் கறுப்பு ஜூலையின் கசப்புகளையும் இன ஐக்கியத்தின் சிதைவையும் ஏளனமாய் எடுத்தியம்பிய கவிதையின் மூலம் தனது இதயத்தின் மனக்கவலை வெளிப்படுத்தியது சிரியா நாட்டின் புதுமைக் கவிஞன் அலி அகமட் சயீத் "கவலைகள் ஒரு சொப்பனம்" என்னும் கவிதையில் "பிறந்த மேனியராய் வந்தனர், கல்லெறிட்டு வீடு புகுந்தனர். குழி ஒன்றைத் தோண்டினர், குழந்தைகளைப் புதைத்துப் போயினர்" எனும் கவிதையுடன் ஒப்பிடும் போது கவிஞனின் இதயத்தின் பாரத்தை இறக்கி வைக்க இயலாத நிலை மிக அருமையாக விளக்குகின்றது.

ஏட்டிலும் மேடைப் பேச்சிலும் மாதர்தம் பெண்ணியம் தீப்பொறி பறப்பதும் மார்ச் 8இன் அலுத்துப் போன வெற்று வேட்டுக்கள் பலரின் இரட்டை வேட பொழுது போக்காக இந் நாட்களில் காணப்படுவதற்கும், எதிர்க்கருத்து வைத்து மனதின் ஆழத்திலிருந்து பொங்கி வரும் வேட்கையை பிரசவிப்பு விபச்சார வைபவங்கள், சூரியோதயம், மானம் தழைத்திட எனும் கவிதைகளில் மிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்மையாகப் பாடியுள்ளது பாராட்டத் தக்கது. "ஆணின் கரு சுமக்கும் இயந்திரமாய் இது நிலவுடைமை, சொத்துடைமை, சமூகத்தின் ஆணிலை ஆதிக்க வெளிப்பாடு வேறில்லை கண்டீர், விடு பெறுவீர்" எனும் வரிகள் வாழ்க்கையைப் பெண்ணிலைவாதிகளுக்குப் பாடம் புகட்டக் கூடிய தீட்டப்பட்ட கவி வரிகளாகவே நான் கருதுகின்றேன்.

பெண்ணொளிபாத நகரும் மலைத் தாய் விடுதலை, நிறை சொல்வாரோ, மலை முகடு, மலை மங்கை போன்ற கவிதைகள் 1976இல் ஜேம்ஸ் பெரைரா நட்ட தேயிலைக் கூடையில் ஆயிரமாயிரமாய், இலட்சலட்சமாய் புதைந்து கிடக்கும் உழைப்பு மாத்திரம் மந்திரச் சொல்லாய், தியானமாய், மௌனமாய் கண்டு மாண்ட எல்லா ஜீவன்களுக்கும் சமர்ப்பணம் வைத்ததற்கு சாட்சி எழுதப்பட்ட கவிதைகளாகும். ஆய்வுக்கு மலையகம் அழைக்கும் மலையகம், பட்டினிக்கும் மலையகம், பட்டன் பரம்பரைக்கும் மலையகம். ஆனால் மலை மக்கள் இன்றும் மலைகளாகவே வாழ இவர் தம் விடுதலைக்காய்

"கொட்டையும் சம்பளமும் சாபமாய்
ஒட்டிய வயிற்றினை நிரப்புமோ
முட்டிய பிரச்சனையில் மோதி மோதிய
முதுமை வந்தெய்தும்
புண்ணாகிப் புழுத்து பூகம் என்றுபோய்விடுமின்
காலங்களாய் முளைத்திடும் நாளும்
மலைப் பாதையில் முழுமூச்சாய்"

எனும் வரிகள் இந்த மலை வாழ் மக்களின் வாழ்வோடு கவிஞர் எந்தளவு ஐக்கியமாகி வாழ்கிறார் என்பதற்குச் சான்றாகவும் அவர்களின் துயர் துடைக்கப் புறப்படுவோம் என்று கூறி, வயிறு வளர்ப்போரும் அரசியல் பிரமுகர்களும் அவரவர் தீர்வு காண வேண்டுமென்று முனைவதாக ("இருக்கிறம்" சஞ்சிகை) பிரதேச பிரிவினை வாதிகளுக்குக் கொடுக்கும் சாட்டை அடியாகவே காணப்படுகின்றது.

ஆத்மாவின் இராகங்கள், சமர்ப்பணம் எனும் இரண்டு கவிதைகளும் நன்றியும் நயமும் கலந்து தன்னை உலகிற்கு ஈன்ற தாயையும் வாழ்த்தி வளர்த்து தந்தைக்கும் உளமார்ந்த பக்தியினை செய்வதாயும் ஆறறிவு படைத்தவர்கள் இன்று உயிர்களைத் துச்சமாய் எண்ணி கொன்று குவிக்கும் காலத்தில் ஐந்தறிவு இருந்தாலும் உயிர் கொடுத்து உயிர் மீட்ட வீரன் என்றும் நன்றியுணர்வுடன் நன்றி கூறுவது எழுத்தாளனின் மெய்மையான உள்ளத்தினை உலகிற்கு காட்டுவதாய் அமைகிறது.

மனிதனது ஆயுளின் போதே ஐம்புலன்களோடு பிறந்தாலும் அவனது உள அனுபவங்களாலேயே மனிதன் முழுமை அடைகின்றான். நேர்மையானதை இனங்கண்டு அதன் அனுபவங்கூடே புதியவற்றை உருவாக்கவும் உதவுவது ஐம்புலன்களேயாகும். அந்த வகையில் இதயராசனின் சிறுகதைகள் மிகவும் வலுவான படைப்புக்களாகவும், ஒரு தனி மனிதனின் அகத்தையும், புறத்தையும் வெளிக்காட்டும் கண்ணாடிகளாக மாறு சேதுராமன் மாமனிதன், காவியம் ஒளிரும் செஞ்சுடர், புகை கவிஞன் பக்திமாலை கையில் எடுப்போம், ஆசைப்படுவேன்று கைகோர்த்து நிற்போம் என்னும் கவிதைகளில் மாறு சேதுராம், ஜோசப் ஸ்டாலின், பாரதி, பேராசிரியர் கைலாசபதி போன்றோர்க்காய் தான் எழுதியது எழுத்தாளனின் சமூகக் கடமையையும் எழுதுபவன் எந்த அளவிற்கு செயல் வீரனாகவும், போராளியாகவும் தனது வாழ்க்கையைப் பற்றி உலகிற்கு விட்டுச் சென்றான் என்பதை ஆய்ந்து அறிந்து புதிதாய் எழுதுபவர்களுக்கு போராட்டத்தின், உழைப்பின் வெற்றிக்கு அடையாளமானவர்களை வெளிச்சமிட்டுக் காட்டுவது இவரின் அந்த துணிச்சலைப் பறைசாற்றுவதாகவே உள்ளது. இந்த உள்ளடக்கங்களுடன் காணப்படும் மீறல்கள் கவிதைத் தொகுப்பினை மீறல்கள் என்னும் தலைப்பிற்கேற்ப ஏகாதிபத்தியத்திற்கு எதிராக, சாதியத்திற்கு எதிராக, தாய்மைக் கலாச்சாரத்திற்கு எதிராக, இன்னும் விரிவான மீறல்களுக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்குமானால் இன்னும் கனமானதாக இருந்திருக்கும்.

கலாநிதி கு. ரவீந்திரனுடைய அணிந்துரை சகலவிதமான நதியின் ஆழமாகவும் அற்புதமாகவும், புத்தகத்திற்குப் புகழ் சேர்க்கின்றது. லெனின் மதிவானத்தின் மதம் சார்ந்த கருத்துக்களை பொதுமைகளாகக் கூறி ஒதுக்கி விடப்பட்டிருப்பதுமானால் பயணம் சந்தேகத்துக்குள்ளாக்குகின்றது.

இதயராசனின் படைப்புக்கள் எதிர்கால சந்ததியினருக்கு சரியானதை எடுத்தியம்புவதாய் இன்னும் இன்னுமாய் படைக்கப்பட வேண்டுமென்றும் நூறு பக்கங்களுடனான தொகுப்பிலே அச்சிடப்பட்ட நூலின் அமைப்பிற்கு சிறப்புச் சேர்க்கிறது. படிப்பவர்கள் மகிழும் வகையில் புத்தகம் அச்சிடப்பட்டிருப்பதுவும் வரவேற்கத் தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை ஒரு

என். மேரிலானி

தோல்வியில் துவண்டு துன்பத்தில் புரண்டு
அவமானத்தில் சிதைந்துகொண்டிருக்கும் மானிடா!
நம் வாழ்க்கை ஒரு அழகான கவிதைப்புத்தகம்
    வாழ்க்கையை வெறுப்பவன் ஞானகுனியன்
வாழ்க்கையை வாழ்பவன் ரசிக்கத்தெரிந்த மனிதன் - நீ
    மனிதனா இல்லையா...

துன்பங்களை துரும்பாக்கி உன் மனதை
    தூணாக மாற்று எந்தக் கவலையும் இந்த
உலகத்தில் நிரந்தரமில்லை! மனிதனைப் போல
    துன்பங்களையும் தோல்வியையும் நிரந்தரமாக்காதே
ஆனாலும் அதுவாள் உன்னை வெற்றி எனும்
    கப்பலில் ஏற்றி விடும் படகுகள்.
அவமானங்களையும் ஆதங்கத்தையும் கண்ணீராக்காதே
    நெஞ்சத்தின் இலட்சியமாக்கு.
நேற்று மழை பெய்ததை மரக்கிளையின் ஈரம்
    இன்று சொல்லும் - நீ இன்று காயப்பட்ட வலி
நாளை ஒரு காவியமாகும்!
கசப்பான வேப்பங் காயிலும் அழகான மருந்துண்டு
வாசமான தாழம்பூவுக்கும் சோகமான கதையுண்டு
இருந்தும் அவை பூக்களில்லையா? - இயற்கையோடு
    சேரவில்லையா? இதை மனித ஜாதியாய்
நீ மறந்தது ஏனோ?
வாழ்க்கை எனும் ஓடம் மிக விசித்திரமானது
    அதில் பயணித்துத் தான் பார்க்க வேண்டும்.
கரியின் நம்பிக்கையும் பொறுமையும்
    வைரமாய் மாறும் - நீயும் நானும் மனிதர்கள்
நம் பொறுமையும் நம்பிக்கையும் எவ்வளவு
    பெறுமதியாய் மாறவேண்டும் சிந்தித்துப்பார்!

தவறு ஒருநாள் சரியாய் தெரியும் சரியென்பது
    ஒரு நாள் தவறாய் தெரியும் - இது தான்
    மனித வாழ்க்கையின் நியதி!
இன்று வரும் பகல் உனக்கு இருளாகலாம் ஆனால்
    வருங்காலப் பகல் நிச்சயமாக வசந்தமாகும்.
வா நண்பா... துயரங்களை நம் வெற்றித்
    தூண்களாக மாற்றுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதைத்தாலும் வேர்கள்

புதிய மலையகம் மகேந்திரன்



சூழ்ந்திருக்கும் புகையைப் போல சிந்தனை தன் கட்டுக்கடங்கா இயலாமைகளுடன் மோதி மோதி சண்டையிட்டுக் கொண்டிருக்க நிச்சலனப் பார்வை வெறித்து நிற்க கற்பாறை மேல் குந்தியிருக்கின்றார் குமாரவேலு.

இப்போதெல்லாம் அமைதி தடம்மாறிப் போய் சஞ்சலங்களும் சங்கடங்களும் கலந்த மனத் துயரங்களுடன் நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கிறார் குமாரவேலு.

நிம்மதி தங்கள் வாழ்க்கையை விட்டு தொலைதூரம் சென்றுவிட அச்சமிடும் தினசரி வாழ்க்கையாகி விட்ட நாட்கள். தாத்தா பாட்டன் பரம்பரை குருதி சொட்டி மண் கிளைந்து உருட்டிய மண் நடமாடக் கூட உரிமையற்றுப் போன துயரம். கடைத் தெருவுக்குக் கூட நிம்மதியாக போய்வர முடிவதில்லை. வந்து பார்த்தாலும் சீருடைக்காரர்கள் போகும் போதும் வரும் போதும் துளைத்தெடுக்கும் கேள்விகள். குமருகள் தனியா வெளியே இறங்கவே முடியாது. பாடசாலைக்கு, வேலைக்கு, நிம்மதியா போய்வர முடியாத சூழல். கண்ணீரின் கனவுகளுடன் கட கவலைகள் மறந்து உறவுகளோடு உடலும் வாழ்வு இப்போதெல்லாம் வாட்டியும் வறுமையும் இரண்டறக் கலந்து சூனியமாகிக் கொண்டிருக்கும் எதிர்காலத்தின் வெளிச்ச புள்ளியைத் தேடித் தொடங்கும் எத்தனிப்புக்களோடு தொடரும் அன்றாட வாழ்வு.

தாய் நிலத்தைப் போலவே வரண்டு போன பார்வையுடன் குந்தியிருந்த குமாரவேலு.

"தாத்தா.. தாத்தா" என அழைப்பிட்டவாறு வரும் தன் ஐந்து வயதுப் பேரனின் குரல் கேட்டு சுய நிலைவுக்கு வந்தார்.

சிந்தனையில் சிதில்களுடன் சிறுவனின் முகம் பார்க்கிறார். என் எதிர் காலத்துக்காய் என்ன செய்து விட்டாய் என்ற கேள்விகளால் தன்னைத் துளைப்பது போல் அந்த மழலை முகம் அமைந்திருக்கும் காட்சி தருகிறது.

"இவனுக்கு நான் சேர்த்து வைத்ததுதான் என்ன? இவன் எதிர்கால நிம்மதிக்காக நான் செய்தது என்ன? மண், காற்று, நீர், இயற்கை எல்லாம் சிறுமிய விட்டு இவனை மட்டும் வளர்த்து ஆளாக்குவது இவனுக்கு நான் செய்யும் துரோகமில்லையா" இப்படி பல நூறு கேள்விகள் அவருக்குள் அலைமோதினாலும் தன் பேரனை ஆதரவோடு தழுவிக் கொள்கிறார்.

மீண்டும் அவர் பார்வை பழைய இடத்தில் நிலை குத்தி நிற்கிறது. "தாத்தா.. தாத்தா அங்க பாருங்க அவங்க அங்க எதையோ தேடுறாங்க" என்று சிறுவன் கை காட்டிய திசையை நோக்கி அவரின் பார்வை செல்கிறது.

அங்கை வயது போல வெள்ளைக்கார தம்பதியர் அவர்களுடன் ஒரு வாலிபனும், ஒரு யுவதியும் அவர்கள் கையில் ஏதோ ஒன்றை வைத்துக் கொண்டு எதையோ தேடிக் கொண்டிருந்தார்கள். "அவங்க என்ன தாத்தா தேடுறாங்க" என்ற பேரனின் கேள்வி நெஞ்சினைப் பிளக்க அவர் அந்த பிஞ்சு முகத்தை வாஞ்சையுடன் பார்க்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அறியாத குழந்தைக்கு என்ன பதில் சொல்வது. பசுமை நிறைந்த தேயிலை தேசம் வரண்டு பாழ்பட்டுப் போய் சீரழிந்து போன வரலாற்றை சொல்வதா, காலம் காலமாய் உயிர் கொடுத்து உருவாக்கிய அன்னை பூமி அழிவை வெறிக்கனத்தால் காடாகிப் போன சரித்திரத்தைச் சொல்வதா.

எண்ணைக் கொதிப்புகள் அலைகள் கொப்பளித்துக் குமுற ஏக்கமும் வேதனையும் நிறைந்த அவரின் பார்வை. தன் இளமையின் கொண்டாட்டத்தை தொலைத்து விட கருகாட்டு பிம்பமாய் காட்சி தரும் தன் தாய் மண்ணில் புதையுண்டு போன யதார்த்தங்களைத் தேடத் தொடங்கியது.

வண்ணச் சோலையாய், பொன் விளையும் பூமியாய் அப்பனின் அன்னையின் பிறப்பிடமாய் உழைப்பு தின்று உதிரம் குடித்து இயற்கை நடனமிடும் எழில் கோலமாய் பொங்கி பிரவகித்தவளை பலிகொண்டு தின்று தீர்த்துவிட்டு அரக்கத் தனமாய் ஆக்கிரமித்துச் கொண்டிருக்கும் நீர்த்தேக்கத்தை மறுத்து அவரின் தேடல் விரிகிறது.

அழகைக் கொட்டியவாய் அன்று முதல் இன்று வரை துயரங்களையும் சோகங்களையும் சுமந்து கொண்டு நகராமலே புகை கக்கிக் கொண்டிருக்கும் லயன் மாளிகை எங்கே?

கிளி கிளி தட்டுக்கள் ஆட கிராமம் நிறைந்து குதூகலித்திருந்த முற்றம் எங்கே? எப்போதும் சிறுவர்களின் ராஜபாட்டையாய் கூச்சலும் கும்மாளமும் ஜிலுகிலுக்க குப்பை அழுக்குகளுடன் மண் வாசனை பொங்கும் லயத்துக் கோடிகள் எங்கே? தாத்தா நட்டு தானும் தன் பிள்ளைகளும் தின்று களைத்த பழமரங்கள் எங்கே? பாட்டன், முப்பாட்டன் பரம்பரையை புதைய விட்ட புதைமேடுகள் எங்கே? அப்பனையும் அம்மையையும் உரமாக்கி உரமூட்டிய தேயிலைச் செடிகள் எங்கே? குமரிப் பெண்களின் எண்ணச் சிதறல்கள் அரங்கேறும் மீலிக்கரைகள் எங்கே? ஆண்டுக்கொருமுறை ஆடு வெட்டி வேள்வியடித்து உறவுகள் கூடி பங்காளி சண்டையிட்டு நம்பிக்கைகளுக்கு ஒத்தடம் கொடுத்துக் கொள்ளும் குல தெய்வக் கோயில்கள் எங்கே? தோட்டத்திற்குத் தோட்டம் கம்பீரமாய் வளர்ந்து நின்று எங்கள் தேகம் தின்று தளிர்த்த துளிர்களின் சாபம் ஆகும் தேயிலைச் சாலைகள் எங்கே? உயிர் தந்து விடுதலை பெற்றுத் தந்து உணர்வு தந்து ஏழாயிரம் ஏக்கர் நிலத்தை காத்துத் தந்து இந்த தேசத்தின் வீரச் செம்மலாய் விதைக்கப்பட்ட வெட்டயனை கல்லறை எங்கே? என்று அவரின் தேடல்...

வான்மேகம் முத்தமிடும் மலைமுகடுகளெங்கும்:

# கடவுளும் என் காயமும்

மு. கீர்த்தியன்



என்னை அபகரிக்க வந்தவர்கள்
தாம் கடவுளின் தூதுவர்கள் என்றனர்.
என்னிடமிருந்த இம்மை ஆயுதத்தையும்
அவர்கள் பறித்து வீசிச் சென்றனர்.

பின்னொருநாள் சிலர்
தாம் கடவுளின் பிள்ளைகள் என்றபடி
என் வீட்டை உடைத்து
உள் நுழைந்தனர்
வெறுங்கையோடு நுழைந்த அவர்கள்
ஆயுதங்களுடன் திரும்பிச் சென்றனர்

காயங்களோடு எனைக் கண்ட சிலர்
உயிரைக் காப்பாற்ற
ஓடோடி வந்தனர்
வைத்தியசாலைக்கென்னைச் சுமந்து நடந்தனர்
அவர்களோ தாம் கடவுளின்
சேவகர்கள் என்றனர்.

வைத்தியரிடம் போனபோது
அவர் பேசினார்
ஒட்டவே முடியாத வெட்டுக் காயங்கள்
நீ மட்டும் உயிர் பிழைப்பாயெனில்
இப்போது நான்தான் உனக்கு கடவுள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜொலித்த பசுமையை, பல்வெளிகளை, வளர்ந்து கிளைபரப்பி அவ்வளவு உயர்ந்து உயர்ந்து போர்த்தி நின்ற எல்லை மரங்களை, வெண் சேலையாய் நிலத்தாய் மேனி மீது தவழ்ந்து சிதறும் நீர் வீழ்ச்சிகளைத் தென்றலுக்கு ரூதி சேர்க்கும் நீர் ஓடைகளின் சலசலப்பை... குமாரவேலுவின் நினைவலைகளில் நீறும் தேடலின் ஏக்கங்களை தான் அந்த வெள்ளைக்கார தம்பதியினரும் தேடிக் கொண்டிருக்கிறார்கள். குமாரவேலுவின் எண்ண அலைகள் எல்லை இல்லா காற்று வெளியில் இறக்கை விரித்து மீண்டும் வந்து சிறுவனின் முகத்தில் நின்றது.

''அந்த வெள்ளைக்காரங்களும் தொலைந்து போய் விட்ட சௌந்தர்யத்தை தான் தேடிக் கொண்டிருக்கிறாங்க!'' என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்ட குமாரவேலு தன் முகத்தையே உற்று பார்த்தபடி நிற்கும் சிறுவனைப் பார்க்கிறார். அவனின் கேள்வி ''எதைத் தேடுறாங்க'' எதுவெல்லாம் இந்த மண்ணுக்குள் புதைத்துப் போக விட்டோம். எதுவெல்லாம் எங்களிடமிருந்து பறிக்கப்பட்டதோ அவற்றை இன்னும் எத்தனை பரம்பரைகள் தேடப் போகின்றதோ? பெரு மூச்சொன்றை உதிர்த்தவர் தொலைவை வெறுமைக் கண்டு சொல்லத் தொடங்கினார்.

''தம்பி இப்ப தண்ணி நிறைஞ்சி இருக்கிற இந்த இடம் தான்டா நம் சொந்த ஊரு பரம்பரை பிறந்து, வாழ்ந்து மறைஞ்ச இடம். காலம் காலமா எங்க உழைப்பை உறிஞ்சி தேசத்துக்கே சோறு போடும் தேயிலைத் தோட்டம் அதன் நடுவில் எங்க கொஞ்சம் இங்க கொஞ்சமா லயங்க. மேட்டு லயத்துக்கும் பணிய லயத்துக்கும் தொங்க லயத்துக்கும் நடு வாய்க்காலும் ஓடும் பாதை, ஆறு ஆலைய நடைபாதை பாதிப்படும் சின்ன சின்ன மரக்கறி தோட்டங்க. இது எங்க ஒழைப்பும் உடம்பு கலந்த ஜென்ம பூமிடா. எங்கள வாழ வச்ச பூமி, வம்சங்களுக்கு வாழ்வு தந்த பூமி.

ஒவ்வொரு நாளும் பார்க்க பார்க்க புதுசா தெரியும் பூமிடா. இயற்கை வளம் மிக்க காடும், புல்வெளியும் நிறைந்த நந்தவனச்சோலை. டேவன் சென்கிளாயர்னு இந்த தேசத்து அழகுக்கு பெருமை சேர்த்த நின்ற அழகிய நீர் வீழ்ச்சிகள். அது மட்டுமா இங்க அழிஞ்சி போன செல்வங்கள் கொஞ்சமா நஞ்சமா இந்த வளம் கொழிக்கும் மண்ணை பாழாக்குனதுல இந்த மண்ணுக்கே உரிய புல் பூண்டு, சின்னச் சின்ன உயிர் இனங்கள், விலைமதிப்பற்ற மரங்கள், இன்னும் ஆயிரம் ஏக்கருக்க மேல் விளை நிலம் இப்படி இன்னும் எத்தனை எத்தனையோ எல்லாம் விழுங்கி ஏப்பமிட்டு எதுவுமில்லாமல் இருக்கு பார் என்று பெருமூச்சு விட்டவர்.

அது மட்டுமா அந்த மலைகளைப் போலவே வம்பிரமாய் போர்க் குணத்தோடு திமிறி எழும் நகரும் எத்தனை போராட்டத்திற்கு தலைமை கொடுத்த இடம் தலவாக்கலை என்றாலே ஒரு தனி தெம்பு வரும் போர்க் குணத்திலும், கலைக்கும் பேர் போன இடம். எத்தனையோ போராட்டம் கண்ட வீர மண்ணுடா'' என்றவாறு பேரனின் முகத்தைப் பார்க்கிறார் குமாரவேலு.

இவ்வளவு நேரம் அவர் சொன்னதில் பாதி புரிந்தும் பாதி புரியாமலும் கேட்டுக் கொண்டிருந்தவன் ''அப்படினா ஏ தாத்தா இங்க தண்ணீ நிறைச்சாங்க'' இந்த கேள்வி அவருக்குள் ஆயிரம் வோல்ட் மின்சாரம் பாய்ந்த அதிர்வை தந்தது.

இவன் மட்டுமா அடுத்து வரும் ஒவ்வொரு பரம்பரையும் கேட்கப் போகும் கேள்வியல்லவா இது. இந்த மண்ணை உருவாக்கியவர்கள், இந்த மண்ணுக்கு உயிர் கொடுத்தவர்கள் தன் பரம்பரைக்கு இல்லாமல் இந்த மண்ணைப் பறி கொடுத்த பாவம் இன்னும் ஏழேழு தலைமுறையின் நாவுகளில் தொடரப் போகிறதே.

ஒரு கணம் கடந்த கால நினைவுகள் குமாரவேலுவை ஆக்கிரமித்துக் கொண்டன.

இந்த மண்ணைக் காக்க எத்தனை போராட்டம் போராடியோம், ஊர்வலம் போய், ஹர்த்தால் நடத்தி, ஸ்ரைக் அடிச்சி, தலவாக்கலையிலே ஊர்வலம் போகையில வாடயங்கமிட்ட அடி வாங்கியது. போஸ்டர் ஒட்டப் போய் போலிசில புடிபட்டு சிறையில இருந்தது. இப்படி எத்தனையோ சதிகார கும்பல் பறிக்க விட்ட ஒக்காலத்தின் எதிரொலி மட்டும் இன்னும் எதிரொலித்துக் கொண்டே இருக்கிறதே. எதை சொல்ல அழுவது.

சதிகாரத் திட்டம் அமுலாகிய போது தங்கள் பங்குக்காய் சண்டையிட்டுக் கொண்டு சாக்குகளுக்காய் போட்டி போட்டுக் கொண்டு இந்த மண்ணை மக்களை காக்க வந்த இரட்சகர்கள் நாங்களே என நீலிக் கண்ணீர் வடிக்கும் தலைவர்கள். இந்தச் சனத்தின் சந்தா பணத்துல வயிறு வளர்த்து ஒட்டுல பதவி பவிசு பெற்று, காலம் காலமா இந்த சனத்தை சுரண்டி வயிறு வளர்ப்பதோடு சொத்து சேர்த்து கொழுத்த தலைவர்கள் தங்களின் பதவிகளை தக்க வச்சிக்கவும், கமிசன்களுக்காகவும் நாடகமாடி போராட்டத்தையும் காட்டிக் கொடுத்தாங்க. செரிவாழு எதிர்த்து லங்காலத்து வாங்கி மக்கள ஏமாத்துனாங்க. ஒவ்வொரு பக்கமா நின்னுகிட்டு நேர்மையான போராட்டங்கள காட்டிக் கொடுத்தாங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு கட்டித் தருவதாகவும், நிலம் வாங்கித் தருவதாகவும், வேலை வாங்கித் தருவதாகவும் ஒரு தலைவர் சொல்லி ஏமாத்தினாரு. இயற்கை பாதிக்காது வளங்கள் அழியாது. இது இந்த மண்ண செழிப்பாக்கப் போவுது. செல்வம் வந்து குவியப் போவுது அப்படின்னு சொல்லிகிட்டு இரகசியமா கல்லுக்கும் மண்ணுக்கும் கொள்ளையாக் கொள்ளி வைக்கப் பாத்திச்சாரு இன்னொரு தலைவரு. இவங்கள விட இந்த திட்டத்த கடுமையா எதிர்ப்பதா மேட மேடயா பேசி பேசியே நல்ல பதவி, கார் வீடுன்னு வாங்கிகிட்டு காட்டிக் கொடுத்தாங்க சில பேர்.

இன்னும் கொஞ்சம் இயற்கையை பாதுகாக்கனும். மண்ண பாதுகாக்கனும் சங்க அமைச்சு இயற்கை வளப் பாதுகாப்புன்னு அறிக்கை எழுதி லட்ச லட்சமா வெளிநாட்டு காசுகள வாங்கி சுகபோகம் அனுபவிச்சாங்க பலபேர்.

இப்படி எந்தப் பக்கம் திரும்பினாலும் காட்டிக் கொடுப்புகளும் துரோகங்களும், சதியும் நிறைஞ்சி இருந்தாலும் நேர்மையாக இந்த மண்ணுக்கான போராட்டம் நடந்துகிட்டு தான் இருந்திச்சு. சூரியமூர்த்தி போன்ற பல தொழிலாளர்கள் அவங்களோட சேர்ந்து மிகக் காத்திரமா போராடினாங்க. ஆனா பொய்யும் பித்தலாட்டமும், வஞ்சமும் வக்கிரமும் நிறைந்த மாயாஜாலம் பெரும்பாலான மனங்கள ஊமைகளாக்கி விட்டது. எல்லோ நேர்மையான போராட்டப் பாதியில் கோப்புகளுக்குள் போடப்பட்டுது அப்படியே...

இப்படி சுயநல தலைவர்களாலும், மனம் பிடிச்சு பிடிக்கிற இந்த மக்கள கொள்ளை அடிச்சி, அட்டை வச்சி பொறுக்க வந்த ஏஜண்டுகளாலும் புல்லுருவிகள் மாதிரி இந்த மக்களின் உழைப்பின் உறிஞ்சு கொழுத்த புத்திஜீவிகளாலும் வளமும், விருமும், வனப்பும், செழிப்பும் மிக்க இந்த மண் சீரழிந்து வரட்சி மிகுந்த பாலைவனமா மாறி போச்சி. விளை நிலம் மண் மேடாகி புல்லு கூட முளைக்காத பாலவெளியா மாறி போச்சி. ஏதோ கொஞ்சப் பேருக்கு வீடு கட்டிக் கொடுத்தாங்க மீதி பேர் அங்க கொஞ்சம் இங்க கொஞ்சமா இடம்பெயர்ந்து போய் உறவுகளை பிரிஞ்சி உழைப்பு இல்லாம நிம்மதியையும் தொலைச்சி நாடோடிகளா திரிஞ்சி அடையாளம் இல்லாமலே போயிட்டாங்க. வாக்குறுதிகள் வெறும் வாய் பேச்சுக்களாகவே காற்றில் கரைஞ்சு போனது.

முன்னரெல்லாம் தொழிலாளர்கள், இந்த மண்ணை செழுமைப்படுத்திய சிற்பிகள் வாழ்ந்த இடமெல்லாம் எங்கெங்கோ இருந்த சிங்களவர்கள் கொண்டு வந்து குடியேத்தி விட்டது மட்டுமில்லாமல் எங்க பார்த்தாலும் ஆமி, பொலிஸ்

# ஏதற்காக....?

ஸ்ரீ பிரகாஷ்

எத்துப்பாக்கி எங்கு பேசுமோ....?
எவரும் எங்கு சரியுமோ...?
ரவைகள் துளைக்காது கணங்கள் கடக்க,
ரவைகள் துளைக்காத கணங்கள் தேடி,
நகர்வுகள் தம்முள் கேள்வி தொடுத்து

அன்று அவனைப் பார்த்து சிரித்தேன்
அதற்காக?
நேற்று தண்ணீர் கொடுத்தேன் தங்கைக்கு
அதற்காக?
அன்று தம்பிக்கு நன்றியென்று உரைத்து
நகர்ந்தேன் அதற்காக?
நேற்று பார்வையொன்று கொடுத்தேன்
உண்பதற்கு அழைப்பை - இல்லை
இவையொன்றும் செய்யவில்லை என்பதற்காக

பத்திரிகை படித்தொன்று வாசித்தொன்று
சுடப்பட்டதென்றும்
நாளை எழுபது வயதொன்று சுடப்பட்டதென்றும்
நிதர்சனமாகிப் போய்விட்டது.
சுட்டதற்கு கவலைப்பட யாருமில்லை -
புவியில்
நிதர்சனம் பழக்கப்படுத்தி விட்டது.

தண்ணீர் கொடுத்தது குற்றமென்கிறாய்
தட்டுவது என்னவென்று சொல்கிறாய்...?
நனைத்தபடி யானொன்று ஒருவர் உயிர்
கொடுத்தேன்
உயிர் கொடுத்தது குற்றமென்கிறாய்...?

எதற்காக என்று மட்டும் சொல்லிவிட்டு,
கண் மாறு போல் ரவைகள் தொட்டும்
ஏனெனில்...
நேற்று செத்தவர்களுக்கும்... தம்
உயிர் போன காரணம் தெரியவில்லை -
இன்று செத்தவர்களுக்கும் அது புரியவில்லை
நாளை மரிப்பவர்களாவது காரணம்
தெரிந்து மரித்துப் போகட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செக் போயின்ட் போட்டு இந்த சுற்று வட்டாரத்தில இருக்கிறவங்களும் நிம்மதியா வாழ முடியாத நிலை உருவாகிப் போச்சி.

அண்ணாச்சி வாய்கிழிய வக்காலத்து வாங்கிய தலைவர்கள் எல்லாம் ஒன்றுக்கு மூன்று பொண்டாட்டியும், பொண்டாட்டிக்கு ஒரு வீடுமாரொம்ப சொகுசா இன்னைக்கும் நாங்களே தலைவர்களுன்னு தம்பட்டம் அடிச்சிகிட்டு சந்தா பணத்துல வயிறு வளர்த்துகிட்டு ஒட்டு மொறுக்கி நாற்காலிய சூடாக்கிக்கிட்டு அப்படியே இருக்காங்க.

பரம்பரையா உழைச்சி உசுர கொடுத்து உருவாக்கிய நிலத்தையும், தங்கள் உறவுகளையும், குருவி கூடு கட்டுற மாதிரி சேர்த்து வச்ச மிச்ச சொத்தையும். எதிர்கால இருப்பையும் இழந்து அநாதைகளாக இந்த மண்ணின் மைந்தர்கள். இந்த எனத்தைப் போலவே எப்போதும் பசுமை சோலையாய் நிமிர்ந்து நின்ற பூமி கட்டாந் தரையாகி ஆறுகள், ஓடைகள் வற்றி எப்போதும் பொலிவிழந்தும் வற்றியும் தொலைந்து போய் சௌந்தர்யமான புல் வெளிகளெல்லாம் அனல் கக்கும் மலையாகி செழிப்பிழந்து இந்த மண்ணின் மக்களின் கண்ணீரை மட்டுமே வாங்கி வெளுத்து களைத்துப் போய் நிற்கிறது.

"என்னங்க என்னங்க எங்கேயோ கூட்டத்திற்கு போகனுமின்னீங்க இப்படி தூங்குறீங்களே" என்று வேலை விட்டு வந்த களைப்பில் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருக்கும் தன் கணவனை எழுப்பினாள் காமாட்சி.

மனைவியின் சத்தத்தில் தூக்கம் கலைந்த குமாரவேலுவுக்கு ஒரு கணம் ஒன்றுமே புரியவில்லை இவ்வளவு நேரம் இவன் கண்டது கனவா! என்றாலும் அது நாளை யதார்த்தமாகி விடும் பயங்கரம் தங்களை நெருங்கி வந்து கொண்டல்லவா இருக்கிறது.

ஐயோ என் தாய் மண்ணை எங்கள் இருப்பின் அடையாளத்தை காவு கொடுப்பதா? எங்கள் எதிர்காலப் பரம்பரையினரை வீதியில் நிறுத்துவதா? நாளைய பரம்பரை சபிக்காமல் இருக்க, உருவாக்க உயிர் கொடுத்த மண்ணைக் காக்கவும்... அவன் உடல் நடுங்கியது, கோபம் கண்கள் சிவந்து இரத்தம் சூடேறி ஆவேசம் கொண்டவனைப் போல் கட்டிலை விட்டு எழுந்தான்.

அங்கே விறாந்தையின் மூலையில் மேல் கொத்மலைக்கெதிராக நாளை நடக்க இருக்கும் பேரணிக்கான போஸ்டர் கட்டு வைக்கப்பட்டிருந்தது. அதனையும் எடுத்துக் கொண்டு மிக வேகமாக வெளியே சென்றான் குமாரவேலு.

---

# அமைதியைத் தேடி

**க. ஜெயசீலன்**

அமைதியைத் தேடி அடம்பிடித்தழுது தினம்
மௌனத் தனிமையினைத்
தேடிக் கிடக்கு மனம்.
எங்கும் அமைதி இழப்பும்
உயிர்களிழப்பைக்
சங்காரம் செய்கின்ற சாக்குரலும்
மனம்பதைத்த
மாமாறும் எதையோ பிடிக்கப் பதுங்கித்
குடித்த அமைதி தொலைத்த நடுக்கமும்
காதைச் செவிடாக்கி
இதயத்தை இறுகப்பற்றி
வேதனை தலைக்கேறப் புரண்டெழுவதும்
போர்க்குரலும்
மற்றவரின் கருத்தைக் கண்டுபல் நறநறத்து
முற்றாய் மகிழ்வை
முறிக்கும் நரிக்குணமும்
விற்பனை அவலமும்
வியாபாரத் தந்திரமும்
சுற்றியுள்ள அமைதியை மதியாமல்
தொடர்ந்து கேட்கும்
கூக்குரலும்
என்று... நிம்மதியைக் குழிதோண்டிப்
புதைக்கும் யதார்த்தப் பூ பொழுதெல்லாம்
பூக்கிறதே!
மெல்லுணர்வை
முடியா மெல்லிசையை,
மனம்வருடிச்
சில்லிட்டுறைய வைக்கும் சிந்தனைகளை
நல்லிதழின் முத்தத்தை,
மௌனம் முகிழ்க்கும் இராகத்தை,
தென்றல் தழுவ... நிலா இசைய... மலர்சொரிய...
தன்னந் தனிமையாய் அமர்ந்த
மௌனத்தில்
தன்னை இழக்கும் தருணத்தை,
தரை இரைச்சல்
முற்றாய் விடுபட்ட முழுப்பொழுதை,
நெருப்பாகச்
சுட்டெரிக்கும் வாழ்க்கைக்குள் தேடித்
திரியுதுமனம்!
போரதிர்வுள் யாழிசையைத் தேடும்...
புண்பட்ட மனம்!
மயில்களே துகிலுரிந்து மண்ணில்
பிழைத்திருக்க
மயிலிறகு வருடலுக்கு ஏங்குகிறேன்!
என்னாகும்?

ஆருவா அ. சிந்தாமணி




# வீரசுவர்க்கம் எங்கே இருக்கிறது?

எனக்கு ராமாயணத்திலும் பார்க்க மகாபாரதம் தான் விருப்பம். ஏனெண்டா அதிலை தான் சண்டை எல்லாம் முழுப்பாக்கியமாயிருக்கும். துரியோதனன் ஆக்கள் எல்லாரும் கெட்டவை எண்டும் பாண்டவரின்ரை ஆக்கள் எல்லாம் நல்லவை எண்டும் இருக்கிறவையை அங்காலைப் பக்கத்தில் ஆக்கள் சாகிறதைக் கேக்கப் புதினமாயிருக்கும். இங்காலைப் பக்கத்திலை சாகேக்கை வருத்தமா இருக்கும். இந்த நாளையிலை மண்ண பிடிபாத சண்டையெல்லோ விளாம் செய்து அழிந்து எண்டாலும் அதிலையும் சாகிறது எங்கடை பகுதியா மற்றவையின்ரை பகுதியா எண்டு துக்கமும் சந்தோசமும் வருகினமெல்லோ. அந்த நாளையிலையும் ராசமார் நாடு பிடிக்கிறதுக்குச் சண்டை எண்டு சொல்லி எத்தனை வைரக் கொள்ளையடிக்கக் கொழுத்தியிருப்பினம். எண்டாலும் எங்களுக்கு எல்லா ராசமாரும் வீரமாய் மண்ணை பிடிச்சினம் எண்டுதான் சொல்லியிருக்குது. ஆனாலுஞ் மெத்தப்பேரிலை கணக்கும் கதையும் அங்கும் சொல்லாயினை. அவ்வளவும் ஒரு பக்கம் இருக்க, எனக்குக் கனகாலமா விளங்காத ஒரு விசயம் இருக்குது.

சின்னனிலை சுவர்க்கம் நரகம் எண்டு எனக்குச் சொல்லுவினம். புண்ணியஞ் செய்தவை சுவர்க்கத்துக்கும் பாவஞ் செய்தவை எல்லாம் நரகத்துக்கும் போவினம் எண்டுஞ் சொல்லுவினம். நானும் இடையிடையிடையிலை சொல்லாத வேலையள் ஒண்டு ரண்டு செய்யிறனான் எண்டதாலை நரகத்துக்குப் போவனோ எண்டும் பயமாகத் தான் இருந்தது.

வேதாளசிங்கத்தை உங்களுக்குத் தெரியுந் தானே. முந்தி ஒருக்காச் சொன்னான். மறந்து போயிருக்க மாட்டீங்கள். அவனுக்கு இந்தப் பேய் பிசாசு, ஆவியள், அறுந்த உலகம் எல்லாத்தையும் பற்றித் தெரியும். படிப்புத் தான் கொஞ்சம் அரிது. இப்பிடி அவனைப் பிடிக்கக் கேட்டன். அவனுக்குச் சித்திர புத்திரனாரோடை வதும் ... போல, சட்டுப்புட்டெண்டு கேட்டதுக்கெல்லாம் மறுமொழி சொன்னான். கொஞ்சம் பாவஞ் செய்தால் புண்ணியக் கணக்கிலை இருந்து கழிச்சுப் போடுவினமாம். அதிலுங் கூடப் பாவமெண்டா நரகத்திலை கொஞ்சக் காலம் இருக்கச் சொல்லிப் போட்டு பிறகு மோட்சத்துக்கு அனுப்புவினமாம்.

பாவங் கூடச் செய்தவையை என்ன செய்யினம் எண்டு கேட்டன். பாவத்திலை இருந்து புண்ணியத்தைக் கழிச்சு அதுக்கேத்த மாதிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரகத்திலை ஒரு இடம் கிடைக்குமாம். ஜெயிலிலை இருக்கிற மாதிரி நரகத்திலையும் வேறை வேறை விதமான மறியல் இருக்குமோ என்று கேட்டன். "இல்லாமலென்ன, மோட்சத்திலையும் அந்த மாதிரித் தான்" என்று விளக்கப்படுத்தினான்.

வீர சுவர்க்கம் எண்டு மகாபாரதத்திலை வாசிச்சிருக்கிறன். நல்லவன் எண்டு சொல்லுகிறவனும் வீரமாச் சண்டை பிடிச்சு செத்தால் வீர சுவர்க்கத்துக்குப் போறான். அது மாதிரிக் கெட்டவனும் எல்லோ போறான். துரியோதனைப் போல்லைமல்லை யுடையிலை அடிச்சுச் சாக்கோனை விபண்டிடை அவன் சுட முன்னம் "நான் வீரமாச் சண்டை பிடிச்சுச் செத்ததாலை சுவர்க்கத்துக்குப் போவன் நீ அவமாப்பிப் போட்டாய் நரகத்துக்குத் தான் போவாய்" எண்டு சொன்னான். அப்பிடியெண்டா வீர சுவர்க்கம் எண்டும் வீர நரகம் எண்டும் இருக்கத் தானே வேணும்.

வீர சுவர்க்கம் எண்டா என்னெண்டு வேதாள சிங்கத்தைக் கேட்டன். "அது மோட்சத்திலை வேறை ஒரு இடம். சண்டை பிடிக்கிற வீரர்மாரை மற்றவை இருக்கிற இடத்திலை விட்டாச் சில நேரம் பழைய நினைவிலை வந்து பிரச்சினையாப் போயிடும் எண்டு அவையளை வேறையா வைச்சிருக்கினம்" என்டான். "அப்ப வீர சுவர்க்கத்திலை இருக்கிறவை தங்களுக்குள்ளை அடிபடாயினமோ?" என்டு கேட்டன். "அதெல்லாம் ஒரு கொன்ட்ரோலுக்குள்ளை இருக்கும். ஒலிம்பிக் போட்டி மாதிரி நிறைய விளையாட்டு அவையளை சந்தோசமா வைச்சிருப்பினம்" என்டான்.

எனக்குக் கொஞ்சம் ஆறுதலாத் தான் இருந்தது. எண்டாலும் வேதாள சிங்கத்தோடை இந்த மாதிரிக் கதைபளிலை ஆரும் பெரிசோ அதோடை விட்டிட்டன்.

இப்ப ஆரைரயெல்லாம் போர் வீரர் எண்டு சொல்லுகினை எண்டு யோசிச்சன், அவையை எங்கை அனுப்பிறது எண்டு சொல்லிறது யமதருமராசனுக்கு கஷ்டம் எண்டு தான் நினைக்கிறன். எட்டத்திலை இருந்து கொண்டு குண்டு போடுகிறதும் ஆரைக் கொல்லுறம் எண்டு ஒரு யோசினை இல்லாமல் கண்ணி வெடியளைப் புதைக்கிறதிலையும் என்ன வீரம் இருக்குதெண்டு எனக்கு விளங்கேல்லை. யமதருமராசனுக்கும் விளங்காது.

சண்டையிலை செத்தவைக்கெல்லாம் வீர சுவர்க்கமெண்டா, ஆரோ பிடிக்கிற சண்டையிலை அநியாயமாச் சாகிற சனத்துக்கு என்ன சுவர்க்கம் கிடைக்க வேணும்? அவை சாகேக்கை குண்டுகள் முதுகிலை பட்டதோ நெஞ்சிலை பட்டதோ எண்டு பாப்பினமோ? உச்சியிலை அல்லது பாதத்திலை பட்டுச் செத்தா அவை வீரரெண்டு சொல்லுவினமோ கோழையள் எண்டு சொல்லுவினமோ?

நான் நினைக்கிறன் பெரும்பாலான சனத்துக்கும், சண்டை பிடிக்கிற ஆக்களையும் சேர்த்துக் தான் சொல்லிறன், சும்மா அநியாயத்துக்குச் சாகிறதிலை விருப்பமில்லை. வேறை வழியில்லாமைதான் சண்டையிலை சேருது. ஒண்டும் விளங்காமைத் தான் வீணாச் சாகுது. அவையளைத் தங்கடை தங்கடை பாட்டிலை விட்டா அவைக்கு இப்பிடி வீர சுவர்க்கத்துக்குப் போறதைவிடக் காட்டுக் கொஞ்சக் காலம் ஆறுதலாச் சீவிச்சு நரகத்துக்குப் போறதெண்டாலும் அது கூட விருப்பமா இருக்கும்.




நூல் : மூச்சுக் காற்றால் நிறையும் வெளிகள்

நூலாசிரியர் : துவாரகன்

வெளியீடு : திண்ணைப்பள்ளி மாலிசிட்டி அல்வாய்



நூல் : புத்தாக்க செருகேடு

(சிறுகதைகள் மற்றும் கவிதைகளின் தொகுப்பு)

நூலாசிரியர் : ஆனந்தமயில் நித்தியானந்தன்

விலை : 100/=

வெளியீடு : தக்ஷிலா

இல. 10, பன்னலைக்குள வதி,

திருநெல்வேலி,

யாழ்ப்பாணம்

# விவேகானந்தர் உரை

இந்து மதக் கருத்துக்களை சிக்காகோவில் எடுத்துரைத்த சுவாமி விவேகானந்தர் தம் முன்னைய சிலவற்றில் கூறிய கருத்துகள் ஈ.வே. ராமசாமிப் பெரியாரின் கருத்துக்களை ஒத்துள்ளன. இக் கருத்துக்களுக்காக விவேகானந்தரை எந்த சனாதனவாதியால் மறுக்க முடிந்தது?

"Come, be men, kick out the priests who are always against progress, because they would never mine, their hearts would never become big. They are the offspring of centuries of superstition and tyranny. Root out priest craft first - Come, be men!" (The Complete Works, Vol.5, p. 10 Calcutta 1864)

1864ஆம் ஆண்டு விவேகானந்தர் நிகழ்த்திய உரை தொகுப்பின் ஒரு பகுதி கீழே தமிழாக்கப்பட்டுள்ளது.

"வாருங்கள் மனிதர்களாக ஆகுங்கள். புரோகிதர்களை உதைத்துத் துரத்துங்கள். அவர்கள் எந்த ஒரு முன்னேற்ற நடவடிக்கைகளுக்கும் எதிர்களாக உள்ளார்கள். அவர்கள் என்றும் மாற மாட்டார்கள். அவர்களின் இதயம் என்றும் விசாலமாகப் போவதில்லை. அவர்கள் பல நூற்றாண்டு கால மூட நம்பிக்கை கொண்ட அடக்குமுறையாளர்களின் வழித் தோன்றல்கள். முதலாவதாக புரோகித முறைகளை முற்றிலுமாக ஒழித்துக் கட்டுங்கள். வாருங்கள் மனிதர்களாக ஆகுங்கள்".

மனிதப் பொது பண்புக்கு பிராமணிய புரோகித சித்தாந்தங்கள் எதிர்மாறாகவும் முரணாகவும் இருப்பதால் விவேகானந்தர் 'புரோகிதரை அடித்துத் துரத்துங்கள்' என்கிறார். மனிதர்களாக ஆகுங்கள் என்று விவேகானந்தர் கூறுகின்ற பொழுது புரோகித கடவுள் சிந்தனைகள் மனித நேயத்திற்கு எதிர்ப்பானவை என்பது விளங்கவில்லையா? இதைத்தானே பெரியாரும் கூறினார்.

விவேகானந்தரின் சிந்தனை இதோடு நின்றுவிடவில்லை. ஒருபடி மேலே சென்று அடிக்கும் அடி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. ஆரிய சனாதனவாதிகளுக்குக் கொடுத்த மிகப் பெரிய அடியாகவும் இதைக் கொள்ளலாம். முழுக்க முழுக்கப் பெரியாரின் குரலை கேட்பதை உணரலாம்.

"Down with all superstitions! Neither teachers nor scriputers nor gods exist. Down with temples, with priests, with gods, with incarnations, with god him self. I am all the god that ever existed! These stand up philosophers! No fear! Speak no more of god and the superstition of the world. Truth alone triumphs, and this is true. All religious superstitions are false imaginations. God was born in my mind... he is created by me in my own mind... give up all superstition". (The Complete Works, Vol. 1, p. 502, Calcutta 1870)

"எல்லா மூட நம்பிக்கைகளும் ஒழிந்து போகட்டும். தருமத்தைப் போதிக்கும் ஆச்சாரியார்களோ தரும நூல்களோ தெய்வங்களோ இல்லை. திருக்கோயில்களையும் அர்ச்சகர்களையும் தேவதைகளையும் இறைவன் அவதாரங்களையும் இறுதியாகக் கடவுளையுமே ஒழித்துக் கட்டுங்கள். தத்துவ ஞானிகளே எழுந்து நில்லுங்கள். பயம் கொள்ள வேண்டாம். இறைவனைப் பற்றியும் உலகில் காணப்படும் மூடநம்பிக்கைகள் பற்றியும் பேசுவதை நிறுத்துங்கள். உண்மையே வெல்லும். இதுவே உண்மை. எல்லா மூட நம்பிக்கைகளும் வீண் கற்பனைகள். இறைவன் என் மனதிலேதான் தோன்றுகிறான். நானே அவனை என் மனதில் தோற்றுவித்தேன். மூட நம்பிக்கைகள் யாவற்றையும் உதறித் தள்ளுங்கள்".

விவேகானந்தர் இதே கருத்தைத் தான் அச்சுக்கு அச்சு, மூலைக்கு மூலை பகுத்தறிவாளர்கள் கூறி வருகின்றனர். பெரியார் ஒரு போதும் தம்மை ஒரு கடவுளாகக் கூறியதில்லை.

ஆனால் விவேகானந்தர் 'நானே கடவுள்' என்கிறார். இது கடவுள் பற்றிய பார்வைக்குள் ஒன்று என்பதை ஆழமாகச் சிந்திப்பவர்கள் உணர்வார்கள். இதுவரை, விவேகானந்தரை சனாதன தர்மவாதிகள் கண்டிக்கவில்லை. ஆனால் பெரியாரைக் கண்டிக்கிறார்கள். இழிவுபடுத்துகிறார்கள். இப்படி இழிவு செய்கின்றவர்கள் ஒன்றுமே பெரியாரை அறியாதவர்களும் பிராமணர்களும் பிராமண அடிவருடிகளுமேயாவர்.

விவேகானந்தர் மேலும் ஓர் இடத்தில் கூறுகிறார்:

"No religion on earth treads upon the necks of the poor and the low in such a fashion as Hinduism"

"உலகில் உள்ள எந்த ஒரு மதமும் இந்து மதத்தைப் போன்று ஏழைகளை பின்தங்கியவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழைகளையும் கீழ்மட்டத்தவர்களையும் கழுத்தைப் போட்டு மிதிப்பதில்லை".

இப்படி நேரடியாகவே இந்து மதத்தைக் கடிந்த விவேகானந்தரை விடவா பெரியார் வெறியாகக் கூறிவிட்டார். அவர்கள் கூறியதைத்தான் பெரியாரும் வழி மொழிந்தார். எனவே, விழிப்புணர்வை ஊட்டிச் சென்ற மாபெரும் மாந்தரை, தலைவரை மனித குலத்திற்கு ஒவ்வாதவர் போல எண்ணி அவரைக் கடிவதும் அவருடைய வரலாற்றை அறியவிடாமல் குறுக்கிடு செய்வதும் கிறுக்குத்தனமே ஒழிய அறிவுடைமையல்ல.

மௌ. மதுவர்மன்

## அயற் பேர்களைத் தமிழில் எழுதல்

தமிழருக்குப் பரிச்சயமான அயற் பேர்களைக் [illegible] எழுதுவதற்கான தேவை இன்றைய புலம்பெயர்வுச் சூழலில் மேலும் அதிகமாகி விட்டது. தமிழில் க, ச, ட, த, ப ஆகிய மெய்யெழுத்துக்கள் ஒவ்வொன்றும் [illegible] வேறுபட்ட ஒலிகளைக் குறிக்கப் பயன்படுகின்றன. இது பலசமயம் குழப்பத்திற்குக் காரணமாகிறது. அன்றியும் F, Z என்பவற்றுக்கான தனி எழுத்துக்கள் இல்லை. [illegible] என்பது f எனும் ஒலிக்குச் சரியானதல்ல.

1990களில் [illegible] F என்ற எழுத்தையே [illegible] 1994 அளவில் G, D, I, B, F, Z என்ற எழுத்துக்களை [illegible] முன்வைக்கப்பட்டது. இதன்படி

க = ka; G = ga; ஹ = ha; ச = cha; ஞ = ña; ஜ = ja; T = ta; ட = da;
த = tha; D = dha; ப = pa; B = ba; F = fa; Z = za;

இதன் மூலம் [illegible] C, T, D, B, F, Z எனும் [illegible] எழுத்துக்கள் [illegible] இந்த [illegible] தமிழின் [illegible]

[illegible] தமிழில் [illegible] "[illegible]" [illegible] அயற் பேர்களைக் [illegible]

க, கு, கா, கி, கீ, கு, கூ, கெ, கே, கை, கொ, கோ, கௌ;
ஸ், ஸா, ஸி, ஸீ, ஸு, ஸூ, ஸெ, ஸே, ஸை, ஸொ, ஸோ, ஸௌ
என்பவற்றைப்போல, B வரிசை
[illegible] அமையும்.

உதாரணங்கள்


| | | |
|---|---|---|
| Berlin | - | பேர்லின் |
| Zulfikar Ali Bhutto | - | சுல்பிகார் அலி பூட்டோ |
| George Bush | - | ஜோர்ஜ் புஷ் |
| Bagath Singh | - | பகத் சிங் |
| Agnihotri | - | அக்னி ஹோத்ரி |
| mobile phone | - | மோபைல் போன் |

இதற்குப் [illegible] G, D, I, B, T, Z [illegible] ka, dha, tha, ga, ta, za [illegible] வைத்துக் கொள்ளலாம். [illegible] க, ட, ட, [illegible] ka, dha, da, tha, pa [illegible] ba.

[illegible] தமிழ் [illegible] உச்சரிப்பு [illegible] தமிழும் [illegible] எழுத்து [illegible] அடையாளங்கள் [illegible] தான்.

# ஹோ சி மின் கவிதைகள்





## தெளிவான காலை

காலைச் சூரியன் சிறைச்சாலைச் சுவர்மேலாய் ஒளிர்கிறது
நம்பிக்கையீனத்தின் நிழல்களையும் நச்சு ஆவியையும்
விரட்டுகிறது
உயிர்தரும் தென்றல் புவி மேலாக வீசுகிறது
சிறையுண்ட முகங்கள் ஒரு நூறு மீண்டும் முறுவலிக்கின்றன.


## இலையுதிர்கால இரவு

படலைக்கு முன்னால், தோளிற் துவக்குடன் ஒரு சிப்பாய்.
வானில் நிலவு மேகங்களூடு தப்பி ஓடுகிறது.
இரவில், கரிய ராணுவத் தாங்கிகள் போல திரளும் மூட்டைப் பூச்சிகள்
இடங்களைத் தாக்குகிற அலைகள் போல நுளம்புகளின் ராணுவ ஒழுங்கணி
எனது தாய்நாட்டை நினைக்கிறேன். தூரப் பறக்கலாம் எனக் கனாக் காண்கிறேன்.
துயர வலைகளிற் சிக்கியவாறு கனாக் காண்கிறேன், யோசிக்கிறேன்.
இங்கே ஒரு வருடம் முடிந்து விட்டது. நான் செய்த குற்றமென்ன?
கண்ணீருடன் ஒரு கவிதை எழுதுகிறேன்.

## குளிரான இரவு

இலையுதிர்கால இரவு. மெத்தை இல்லை. போர்வை இல்லை.
தூக்கமில்லை. உடலுங் கால்களும் ஒடுங்கிச் சுளுக்குகின்றன.
உறைபனி படர்ந்த வாழையிலை மீது நிலவு ஒளிர்கிறது
எனது கம்பிச் சட்டங்கட்கப்பால் ''பெருங் கரடி'' துருவத்தில் ஊஞ்சலாடுகிறது.

## நன்நாட்கள் வரும்



எல்லாமே மாறுகின்றன. சட்டத்தின் சக்கரம் இடையீடின்றிச் சுற்றுகி
மழைக்குப் பின்னர் நல்ல பருவம். கண்சிமிட்டும் பொழுதில்
அண்டம் தனது சேறான உடைகளை மாற்றுகிறது.
பத்தாயிரம் மைல் தொலைவுக்கு நிலக் காட்சி
அழகான சித்திரப்பூத் துணிபோல விரிகிறது.
இதமான சூரிய ஒளி. மெலிதான தென்றல். முறுவலிக்கும் மலர்க
பறவைகள் அனைத்தும் ஒரே நேரத்திற் பாடுவன.
மறுபிறப்பெடுத்து மனிதரும் விலங்குகளும் எழுகின்றனர்.
இதினும் இயல்பான எதுவும் உண்டோ?
துயரத்தைத் தொடர்ந்து மகிழ்ச்சி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org